

கொட்டேக்கடப்ப
முகமாலை சேகர்
சிறுகதைகள்

ஸ்ரீ இராமலிங்கம்
96 - செட்டித் தெரு
NALLUR

TEL 9178-

C/o
ஸ்ரீ இராமலிங்கம் [illegible]
[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

# கொட்டுக்கடப்பு

(சிறுகதைத் தொகுப்பு)

எழுதியவர்:

**முகமாலை சேகர்**

(க.தர்மசேகரம்)

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
*Writers Motivation Centre*
இல:64, கதிர்காமர்வீதி,
அமிர்தகழி,
மட்டக்களப்பு,
இலங்கை.
T.P: 065-2226658,077-6041503

கொட்டுக்கடப்பு

சிறுகதைத் தொகுப்பு

எழுதியவர் :
**முகமாலை சேகர்** ©
(க.தர்மசேகரம்)

வெளியீடு :
**எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்**
(பிரியா பிரசுரம் - 23)

முதற் பதிப்பு :
ஆவணி 2004

ஓவியம் :
ஆ.இராசையா

கணணி வடிவமைப்பு :
பா.ராஜ்குமார்

அச்சுப்பதிப்பு :
ஏ.ஜே

விலை :
ரூபா.200/-

ISBN 955-8715-16-6

**KODDUK KADAPPU**

SHORT STORIES

© **MUGAMALAI SEGAR**
(K.TARMASEKARAN)

PUBLICATION :
WRITERS MOTIVATION CENTRE
(PRIYA PRASURAM -23)

FIRST EDITION :
AUGUST 2004

COVER DESIGN :
A.RASIAH

TYPE SETTING :
P.RAJKUMAR

PRINTERS :
A.J

PRICE:
Rs. 200/-

# அணிந்துரை

சிறுகதை எழுதுதல் ஒரு கலை. கலை என்றால் என்ன என்று கேட்டால் அதற்கு சரியான வரைவிலக்கணம் கூறுவது கடினம். ஆயினும் கலை என்பது ஓர் உணர்வினை அல்லது பெறுமானத்தினை வெளிப்படுத்துவதிலும், தொடர்புறுத்துவதிலும் மனிதத் திறன் வெளிப்படும் முறை என்று கூறலாம்.

இயற்கை அழகானதுதான். ஆயினும் இயற்கையின் அழகு தெளிவாகவும், ஒழுங்குபடுத்தப்பட்டும் இல்லை. அவற்றை ஒழுங்குபடுத்தித் தருவது கலை என்றும் சொல்லலாம்.

கலை எப்போது பிறக்கின்றது? மனிதன் தன்னைச் சுற்றியுள்ள யதார்த்தத்தின் செல்வாக்கில் அநுபவித்துள்ள உணர்வுகளையும், எண்ணங்களையும் தனக்குள் மீண்டும் எழச் செய்து அவற்றைத் திட்டவட்டமான உருவங்களில் வெளியிடும் போது கலை பிறக்கின்றது எனலாம்.

ஆகவே தன்னைப் பாதித்துள்ள அநுபவங்களையே கலைஞர்கள் என்ற கலைப்புலத்திலே கண் என்ற புலன் அங்கம் மிக முக்கிய பங்கு வகிப்பது. அநுபவங்கள் பல கண் ஊடாகவே எழுத்தாளனை வந்தடைய, கண்ணின் உதவியோடு அவன் எழுத, வாசகனும் கண் மூலமே சிறுகதையைப் படிப்பான். சேகரால் சிறந்த சிறுகதைகளை எழுத முடிகின்றது என்பது எனக்கு எப்போதுமே ஆச்சரியமாக இருக்கும் விடயம்தான். கலைகள் புலன்களை நுண் உணர்வுடையனவாக ஆக்கி வளர்ப்பவை என்று சொன்னார்கள். சேகர் மிருதங்கக் கலையில் திறமைசாலி. நாடகத்தை ஒரு பாடமாகக் கற்றார். அவரது ஏனைய புலன்கள் யாவும் சிறப்பாக வளர்ந்து சிறுகதைகளை ஆக்க உதவுகின்றன என்று கருதுகிறேன்.

சேகர் எனது மாணவனாக இருந்த காலத்திலிருந்து அவரது நற்பண்பையும், திறமையையும் நான் அவதானித்து வந்துள்ளேன். எனது மகன் பிரவீணனின் நண்பர் என்ற வகையிலும் எனக்குச் சேகர் மீது ஒரு அன்பு எப்போதும் இருக்கிறது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இருந்து தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டிக்காக ஒரு முறை எனது மகனுடன் சேகரையும் அழைத்துச் சென்ற இனிய நினைவு என்னிடம் பசுமையாக இருக்கிறது. சேகரது சிறுகதைத் தொகுப்பு ஒன்று வெளிவருவது குறித்து மிகுந்த பெருமையும், மகிழ்ச்சியும் அடையும் முதலாவது ஆள் நான்தான்.

"சிறுகதைக்கு சிக்கனம் உயிர்" என்றார் கு.பா.ரா. நெஞ்சின் அவலத்தை குறிவைத்து ஓடி அடைந்து காட்டுதல் சிறுகதை என்றார் புதுமைப்பித்தன். நல்ல சிறுகதை 100 மீற்றர் ஓட்டம் போல இருக்கும் என்றும் ஒரு யன்னல் பார்வையாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது. அருமையான சிறுகதை என்றும் ஒரே மூச்சில் படித்து முடிக்கக் கூடியதாயும், தன்னளவில் முழுமை பெற்றதாயும் இருக்கும் என்றும் கருதப்படுகின்றது. ஒரு அற்புதமான சிறுகதையைப் படிக்கிற போது வாசகனின் புலன் முழுவதும் ஆசிரியரின் ஆதிக்கத்தில் கட்டுப்பட்டிருக்கும் என்றும் சொல்லப்படுகிறது. எது எப்படி இருப்பினும் "நல்ல சிறுகதை" என்பதற்கு வரைவிலக்கணம் கூறுவதும் கஷ்டந்தான்.

சேகருடைய இந்தத் தொகுதி "கொட்டுக் கடப்பு" என்ற மகுடத்துடன் வருகிறது. கடந்து செல்லும் இடம் கடப்பு. ஒரு காணியில் இருந்து மறு காணிக்கு பதிந்த வேலி ஊடாகக் கடப்பதையும், உயிர் உடலை விட்டுக் கடந்து செல்வதையும் இன்னும் வேறு பல கடத்தல்களையும் இந்தத் தலைப்பு ஞாபகப்படுத்துகிறது.

சேகரின் கதைகளில் பல இடங்களில் நாம் கண்ணால் காணும் விடயங்களும் விபரிக்கப்படுவது மிகவும் அற்புதமான விடயம். உதாரணமாக எதிர்பார்ப்பு என்ற கதையில் "அங்கு பலர் காணப்பட்டனர், முகங்களில் பலவித உணர்வுக் கலவைகள்" என்று எழுதுகிறார். இந்த அவதானம் எப்படி இவரது நரம்புத் தொகுதியைச் சென்றடைந்திருக்கும் என நான் வியந்ததுண்டு.

சேகரது சமூகப்பார்வையும், முதிர்ச்சியும் பாராட்டத்தக்கவை. "அடாவடி", "சுமங்கலி" போன்ற கதைகள் அதற்குச் சாட்சியாய் உள்ளன. ஒரு கதையைப் படித்துக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வை எம்மிடத்தில் ஏற்படுத்தாமல், வாழ்வைப் பார்க்கிறோம் என்று தோன்றச் செய்தால் அது வெற்றி பெற்ற கதை என்று கூறுவார்கள். "அடாவடி" அப்படி ஓர் உணர்வை எம்முன் ஏற்படுத்துகிறது.

நல்ல சிறுகதை இயல்பாக இருக்கும் மனித உணர்வின் ஆழ்ந்த மீட்டலாக ஒலிக்கும் என்று சொன்னால் "இருளில்" என்ற கதை அவ்வாறு அமைகிறது. உளவியல் துறைமீது ஆசிரியருக்கு உள்ள ஈடுபாட்டை "முகத்திரை" புலப்படுத்துகிறது.

ஈழத்துச் சிறுகதை இலக்கியத்திற்கு இந்த இளைய படைப்பாளியின் தொகுதி தன் பங்களிப்பைச் செய்யும் என்று நம்பி, சேகரை மனம் நிறைந்து பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்.

*கோகிலா மகேந்திரன்*
-பிரதிக் கல்விப் பணிப்பாளர்-

வலிகாமம் வலயம்
மருதனார் மடம்
சுன்னாகம்
26.07.2004

## முன்னுரை

சிறுகதை என்பது இதுதான், இப்படித்தான் என்று அறிந்திராத காலத்தில் கதைகளை எழுத முயற்சித்தவன் நான். இயல்பாகவே எனக்குள் இருக்கும் ஏதோ ஒரு உணர்வின் வீச்சு எழுத வேண்டும் என்ற ஆர்வத்தை எனக்குத் தூண்டியிருக்க வேண்டும். தவிரவும் யுத்த அனர்த்தம் காரணமாக இரண்டு வருடங்கள் கைதடி நபீல்ட் பாடசாலை இயங்காதிருந்த போது வீட்டில் முடங்க வேண்டியதாயிற்று. என் பொழுதுகள் சூனியமாகிவிடக் கூடாது என்பதில் அப்பாவுக்கு மிகுந்த அக்கறை இருந்தது. அதனாலோ என்னவோ மதிய உணவின் பின் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் எனக்குரிய நேரம். பத்திரிகைகள், நாவல்கள், சிறுகதைகள், பயனுள்ள கட்டுரைகள் எனப் பலவற்றையும் உரத்துப் படித்துக் காட்டுவார். அது எனது அறிவை விசாலித்துக் கொள்ளப் பெரிதும் உதவியது.

கிடுகால் வேயப்பட்டு, நிலம் சாணகத்தால் நேர்த்தியாக மெழுகப்பட்ட கொட்டில், அதனுள் அப்பா சாய்மனையில் படுத்திருந்து அனைத்தையும் வாசிப்பார். அருகிருந்த வாங்கில் நான் அமர்ந்திருந்து செவிமடுப்பேன். எல்லாவற்றையும் அவதானித்தபடி அம்மா வெற்றிலையை வாயில் இட்டு குதப்பிக் கொண்டிருப்பா. அதே நேரம் செட்டியார் துண்டு தென்னையின் தலை தடவி வரும் தென்றல் எங்கள் அனைவரையும் தழுவிச் செல்லும். அந்த பசுமையான நினைவுகள் இன்றும் என் நெஞ்சில் ஈரமாய் இருக்கிறது. கொட்டில், சாய்மனைக்கதிரை, தடவி வரும் தென்றல் இவையொன்றும் இப்போது இல்லை. இச்சிறுகதைத் தொகுதியானது வெளிவருகின்ற போது எனது தாய் தந்தையர்கள் கூட இல்லை.

காலம் நகர்ந்து கொண்டிருந்தது. என் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றங்கள் எழுத வேண்டும் என்ற ஆர்வத்திற்கு மேலும் வலுச்சேர்த்தன. சந்தித்த சமூக மனிதர்கள், சம்பவ நெருடல்கள், நேரடியாக என்னால் வெளிப்படுத்த முடியாத உணர்வுக் கொதிப்புக்கள் எனப் பலதரப்பட்ட விடயங்களை எழுத வேண்டும் என எண்ணினேன். திருமதி கோகிலா மகேந்திரன், செங்கை ஆழியான் போன்ற மூத்த எழுத்தாளர்களின் நூல்களை வாசித்ததன் விளைவு என் எண்ணங்களுக்கு வாய்க்கால் வகுத்து வழி ஏற்படுத்தித் தந்தது. இந்த அடிப்படையில் நான் பரீட்சார்த்தமாக எழுதிப் பார்த்த கதைதான் "தூரப் போன வசந்தங்கள்" அது தினகரன் வாரமலரில் வெளி வந்த போதும் அது தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடம் இருந்து வெளிவந்த போதும் என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. வெளிவந்த அந்தச் சிறுகதையின் பிரதியை என் அன்பிற்கும், பெரு மதிப்பிற்கும் உரிய திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களிடம் கொடுத்து ஆலோசனை கேட்டபோது என் ஆர்வத்திற்கும் வளர்ச்சிக்குமாக உகந்த ஆலோசனைகள் வழங்கி நம்பிக்கையோடு தட்டித் தந்தார். நான் எழுதலாமா? என்று எனக்குள் இருந்த கேள்வியை மாற்றி எழுத முடியும் என்ற நம்பிக்கையை அது எனக்குத் தந்தது.

1997 காலப் பகுதியில் யாஃ.தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது எனது சிறு கதைகள் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருந்த செய்தியை நண்பர்கள் மூலம் அதிபர் திரு.சு.புண்ணியசீலன் அவர்கள் அறிந்து தமிழ்த்தினப் போட்டிகளில் சிறுகதை ஆக்கத்திறன் போட்டியில் என்னை ஈடுபடுத்தினார். அப்போதும் எனக்குள் பல தயக்கங்கள், கேள்விகள் இருந்தாலும் எழுதிப்பார்க்கலாம் என்ற ஒரு ஆசை, மாவட்ட, மாகாண மட்டங்களைக் கடந்து அகில இலங்கை மட்டத்தில் கலந்து கொண்டபோது நானே பிரமித்துப் போனேன். என்னை நானே இனங்கண்டு கொள்ள உதவிய காலம் அது.

வாழ்வகத்தில் தங்கியிருந்து கல்வி கற்ற காலமும் எனது எழுத்துலக வாழ்வுக்கு உத்வேகம் தந்தது. பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகி இடையிலிருந்த இருவருட காலத்தை நிறைய வாசிக்கவும், முடியுமானவரை எழுதவும் பயன்படுத்திக் கொண்டேன்.

வாழ்க்கையில் ஏற்படும் சவால்களைக் கையாளும் திறனை இந்த எழுத்து நிலை அனுபவங்கள் வழங்குகின்றன எனக் கூறலாம். பிறயிலி மூலம் உருவாக்கப்படும் சிறுகதைகள் என் சகோதரர் திரு.க.சோமசேகரம் அவர்களால் சாதாரண எழுத்தில் பிரதி செய்யப்பட்டுப் பத்திரிகைகளுக்கு அனுப்பப்படும்.

இச்சிறுகதைத் தொகுதி வெளிவருகின்ற இந்தக் காலம் எனது பல்கலைக்கழக விடுகை வருடம். பல்கலைக் கழக வாழ்க்கை எனக்கு நிறையவே கற்றுத் தந்திருக்கின்றது. பல தரப்பட்ட மனிதர்கள், என் சிந்தனைக்குத் தீனிபோட்ட புது மாதிரியான அனுபவங்கள், அறிவுப் பரப்பை விரிவாக்க உதவிய கல்விச்சூழல் எனப் பலவற்றை இணைத்து ஒரு கூட்டுக்கற்கையை மேற்கொள்ள என ஒரு சிறந்த களத்தை யாழ்.பல்கலைக்கழகம் எனக்குத் தந்திருக்கிறது எனச் சொல்லலாம். இந்த அனுபவத்தளம் என்றும் என்னைப் புதுப்பித்துக்கொள்ள உதவும். இத்தளத்தில் இருந்து கொண்டு "கொட்டுக் கடப்பு" எனும் சிறுகதைத் தொகுதியை வெளியிடுவதில் எனக்கு நிறையவே மகிழ்ச்சி.

இந்தச் சிறுகதைத் தொகுதி வெளிவருகின்ற இந்த நேரத்தில் எனது அனைத்துத் தர வளர்ச்சிகளுக்கும் வேராகவும், வெளிச்சமாகவும் நின்று உழைத்த, உழைக்கின்ற அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகள். எனது இச் சிறுகதைத் தொகுதியை (மட்டக்களப்பு) எழுத்தாளதுர் ஊக்குவிப்பு மையம் பொறுப்பேற்று வெளியிட்டமைக்காக எழுத்தாளர் ஊக்குவிப்பு

மையத்திற்கும், குறிப்பாக மேலாளர் ஓ.கே.குணநாதன் அவர்களுக்கும் எனது நன்றிகள். அத்தோடு இச் சிறுகதைத் தொகுதியை ஒழுங்கமைத்து அணிந்துரை தந்துதவிய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (வலிகாமம்) திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கட்கும், உகந்த ஆலோசனைகளும் அறிமுக வரிகளும் வழங்கிய செங்கை ஆழியான் அவர்கட்கும், இந்நூலை அழகுற அச்சுப்பதிவு செய்து தந்த ஏ.ஜே அச்சகத்தாருக்கும், அட்டைப்பட ஓவியத்தையும், கதைகளுக்கான ஓவியங்களையும் வரைந்து தந்த ஓவியர் திரு.ஆ.இராசையா அவர்கட்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள். இத்தொகுதி வெளிவருவதற்குப் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைத்த நண்பர்கள் கி.ஐங்கரன், ப.கேதீஸ், ஆர்.தனஞ்சயன், வ.சசிக்குமார், கு.ரஜீபன் ஆகியோருக்கும் எனது நன்றிகள்.

"துன்பம் எட்ட முடியாத தூரத்தே மனம் வீற்றிருத்தலே உண்மையில் அமைதியாம்" என்று "இடிபசு" மன்னன் கூறியதாக எங்கோ படித்ததாக ஞாபகம். அவ் அமைதியில் நிலைக்க எனக்கு எழுத்துலக அனுபவம் நிறையவே துணை செய்திருக்கிறது. அந்த அனுபவத்தில் விளைந்த பரிமாணம் தான் இந்தக் "கொட்டுக் கடப்பு". அன்பர்களே ! இச் சிறுகதைத் தொகுதியை உங்கள் கரங்களில் நேயமுடன் தவழ விடுகிறேன்.

நன்றி

அன்பில் இன்புறும்
***முகமாலை சேகர்***

# பதிப்புரை

2002 இல் யாழ்மண்ணுக்கு ஓர் இனிய பயணம். அந்தப் பயணத்தின் போது நண்பன் றஜீபனின் அறிமுகத்தினால் நண்பராகிக் கொண்டவர் முகமாலை சேகர் என்னும் க.தர்மசேகரம்.

நான் அவனின் விழிபார்த்துப் பேசினேன். அவனின் விழிகள் வலுவிழந்திருந்தமையினால், அவனால் விழி பார்த்துப் பேசமுடியவில்லை. ஆனால் என் இதயம் தொட்டுப் பேசினான். இலக்கிய உறவுடன் பேசினான். அன்றிலிருந்து என் இதயத்தில் இடம் பிடித்துப் போனான்..

தொடர்ந்தது நட்பு.

2004 இல் நண்பர் கு.றஜீபனின் 'வலிகளைத் தாங்கி' கவிதைப் புத்தகத்தை வெளியிட்டு வைப்பதற்காக யாழ் மண்ணுக்கு மீண்டும் பயணித்தேன்.

அங்கே....

சேகரின் சிறுகதைத் தொகுப்பு ஒன்றை வெளியிடுமாறு அன்பு வேண்டுகோள் விடப்பட்டது.

அந்த வேண்டுகோளின் பயன். எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 23வது வெளியீடாக மலர்கிறது முகமாலை சேகரின் கொட்டுக்கடப்பு.

இதுவரை என்னுடையதும் ஏனைய எழுத்தாளர்களுடையதுமாக 22 நூல்களை வெளியிட்டதனைவிட இந் நூலை வெளியிடுவதனையிட்டுப் பல மடங்கு மகிழ்வு அடைகின்றேன். ஏனெனில் பிறயிலி மூலம் உருவாக்கப்பட்ட சிறுகதைத் தொகுதியொன்று புத்தக உருவாவது.

இந்த புத்தக உருவாக்கம் சேகரை இன்னும் உத்வேகத்துடன் எழுதத் தூண்டும் என்று நம்புகின்றேன். இன்னும் நல்ல பல படைப்புக்களை அவரிடமிருந்து நாம் எதிர்பார்க்கலாம்.

மீண்டும் இன்னுமொரு நாலில் சந்திப்போம்.

பிரியமுடன்
ஓ.கே.குணநாதன்
மேலாளர்,
எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்.

# காணிக்கை



கற்பூரத்தின் ஒளி போல நின்று
காருண்ய மனதோடு கருமங்கள் ஆற்றி
அறிவாற்றல்தனைப் பெற்று உலகத்தில் வாழ
அடிகோலி உரமாகி விடிவெள்ளியாகி
காலாண்டு காலத்துள் விண்ணேகிவிட்ட
என் தந்தை தாயாரின் பாதங்களுக்கு
நெஞ்சோடு நீங்காத நினைவோடு கூட்டி
இந்நூலை நான் இங்கு காணிக்கை தந்தேன்.

**-க.தர்மசேகரம்-**

## உள்ளே...

1. சுமங்கலி
2. பிரார்த்தனை
3. தூரப்போன வசந்தங்கள்
4. அடாவடி
5. கொட்டுக்கடப்பு
6. ஒளி வழிப் பயணம்
7. முகத்திரை
8. இருளில்
9. உதிராத பூ
10. அரங்கேறும் அனர்த்தங்கள்
11. மீனின் கண் வழி நீர்
12. யாருக்கு வேண்டும்
13. எதிர்பார்ப்பு
14. தூறல்



# சுமங்கலி

காலை ஆறு மணி வீட்டு வாசலில் கார் வந்து நிற்கிறது.

"கார் வந்திட்டுது எல்லோரும் கெதியாய் வருங்கோ! சுபநேரம் தப்பிப்போம்."

என்று பரபரத்தபடியே குமாரவேலர் முன்னே நடக்க கிருஷ்ணாவும், தாயும், அவனது சகோதரியும் அவரைத் தொடர்ந்து வாசலுக்கு சென்றனர். அவர்கள் காரில் ஏறத்தயாராகவும் எதிர் வீட்டு நித்யா எதிர்படவும் சரியாக இருந்தது.

"சீ! இதென்ன கறுமம். இண்டைக்கு நல்லாத்தான் இருக்கும். முழு வியழத்துக்கு உதவாததுகள் விடியக்காலைமையே ஏன் றோட்டுக்கு வாறதுகளோ தெரியல்லே"

குமாரவேலர் அவளைப் பார்த்து கறுவினார். தாயும் அதை ஆமோதிக்குமாப்போல்.

"அதுதானே உதுகளுக்கு வீட்டை கிடக்கேலாத வருத்தம். தாங்களும் ஒரு ஆட்கள் எண்டு மினுக்கிக்கொண்டு வெளிக்கிட்டுதுகள் ஆறுமாதத்திலை அவன் பாவியை துலைச்சுப்போட்டு தாலி அறுத்தவள்."

இவர்களது பேச்சைக்கேட்டு உண்மையில் கிருஷ்ணா திகைத்துத்தான் போனான்.

"அம்மா பேசாமல் இருங்கோ! உங்களுக்கு எந்த நேரத்திலை எது கதைக்கிறதெண்டு தெரியாது. இப்படி ஏதும் விளல் அலம்பினால் ஒண்டும் வேண்டாமண்டுபோட்டு நான் போகிடுவன்"

இவை எல்லாம் நித்யாவுக்கு கேட்டிருக்க வேண்டும். ஒரு கணம் நின்று நிதானித்து அவர்களை திரும்பிப் பார்த்தாள். அவளது கண்களில் இருந்தது கலக்கமா, தெளிவா என்பதை கிருஷ்ணாவால் ஆரூடம் செய்து கணிக்க முடியவில்லை. ஏதோ சொல்ல வாயெடுத்தவள் அதை தனக்குள்ளேயே விழுங்கிக் கொண்டு காரைக் கடந்து தன்பாட்டில் நடந்தாள். அவளது நடையில் ஒரு அவசரத் தனம் தொற்றியிருப்பதை மட்டும் கிருஷ்ணாவால் ஊகிக்க முடிந்தது. எல்லாவற்றையும் அவள் கேட்டிருப்பாள். அவள் மனம் என்ன பாடுபட்டிருக்கும், தனக்குள்ளே எண்ணிக்கொண்டான் அவன். என்னதான் இருந்தாலும் இவர்கள் இப்படி அவளை பேசியிருக்கக் கூடாது. முகத்திலடித்தாற்போல் என்ன கொடூரமான வார்த்தைகள். நினைத்தபோதே அவனுக்கு ஒரு புறம் வெட்கமாகவும் மறுபுறம் துயரமாகவும் இருந்தது. நிச்சயமாக அவள் தனக்குள் அழுதிருப்பாள்; என்பது அவனுக்குத் தெரியும். நித்யாவை அவனுக்குப் பாடசாலைக் காலத்தில் இருந்து தெரியும். அவளது குடும்பம் வேற்றூர் ஒன்றிலிருந்து இங்கு வந்து குடியேறியது. படிப்படியாக அன்றிலிருந்து அவர்களுக்கிடையில் ஒரு நெருக்கமான நட்பு இழையோடி இருந்தது. நித்யா திருமணம் முடித்தது. அவனது கண்முன்னாலேயே அவளது கணவன் யுத்த அனர்த்தத்தில் பலியாகியது. இழவு வீட்டில் அவள் கதறி, கதறி அழுது சோர்ந்து மயங்கி வீழ்ந்தது எல்லாம் அவனது மனதில் ஆழமாய் பதிந்த வேதனை தோய்ந்த பக்கங்கள். அவள் எதிர்ப்பட்டதாலோ என்னவோ பெண் பார்க்கும் படலம் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

அவனின் தந்தைக்கு பூரண திருப்தி.

"பிள்ளையார் கை விடேல்லை ! "
என்று திரும்பி வரும்போது அவர் கூறிக் கொண்டார். அவனுக்கும் பெண்ணை மிகவும் பிடித்திருந்தது. ஆனால் புறப்படும்போது நடந்த நிகழ்ச்சி அவனை மிகவும் பாதித்திருந்தது. இனி என்ன செய்வது? அவளை எவ்வாறு எதிர்கொள்வது. எம்மைப்பற்றி என்ன நினைத்திருப்பாள்? பலவாறு எண்ணி அவன் குழம்பினான்.

நித்தியாவின் வீட்டு வாசற்படியில் தயக்கத்துடன் நின்று "நித்யா" என்று மெல்ல அழைக்கிறான். வீட்டின் உள்ளே இருந்து அழுது வீங்கிய கண்களுடன் நித்யா வெளிவருகிறாள். சிரமப்பட்டு கிருஷ்ணாதான் பேச்சை ஆரம்பிக்கிறான்.

"நித்யா காலமை நடந்ததுகளை மனதில் வைச்சுக்கொள்ளாதேங்கோ ! தெரியாதே அப்பாவும் அம்மாவும் அந்தக் காலத்து ஆட்கள் சகுனம், சாத்திரம் எண்டு சும்மா பார்த்துக் கொண்டு இருப்பினம். உண்மையில் நான் உங்கடை இடத்திலை இருந்திருந்தால் என்ன செய்திருப்பனண்டு எனக்கே தெரியாது. ஆனால் நீங்களெண்டபடியால் அதைத் தாக்கிக் கொண்டு போட்டியள். தயவு செய்து மன்னிச்சுக் கொள்ளுங்கோ !. "

பிசிறிய குரலில் இறைஞ்சினான் அவன்.

"இது எனக்கு புதிசில்லை கிருஷ்ணா ! இப்ப சமீப காலமாய் வழக்கமானதுதான். எங்கடை சமுதாயம் கிழிச்சிருக்கிற சில கோடுகள் மடத்தனமானது என்று தெரிஞ்சும் நாங்கள் அதுகளை மீறிக்கொண்டு வெளியேறேலாத ஆட்களாய் இருக்கிறம். பெண்சாதி செத்தால் புருஷன் நாளைக்கு வேறை கலியாணம் செய்யலாம். ஆனால் புருஷன் செத்தால் அந்தப் பெண் காலமெல்லாம் கண்ணீரோடை பொட்டில்லாமல், பூவில்லாமல் வாழ்விழந்தவள் என்ற பேரோடை வாழ வேண்டிக் கிடக்குது. கணவனின் இழப்பு ஒருபுறம் இருக்க எங்கடை சனங்களாலை ஏற்படுத்தப்படுகின்ற உளரீதியான துன்புறுத்தல்கள் அதிகமானது என்று நான் நினைக்கிறன்."

கணல் தெறிக்கும் வார்த்தைகளால். பொரிந்து தள்ளினாள் நித்யா. கிருஷ்ணாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. சிறுவயதில் வாத்தியாரிடம் அடிவாங்கிய மாணவனைப்போல் கூனிக்குறுகி நின்று கொண்டிருக்கிறான்.

"நித்யா ! உங்களுக்கேற்பட்ட உள உழைச்சலை என்னால புரிந்து கொள்ள முடிகிறது. தயவுசெய்து எங்களை மன்னியுங்கோ !"


கூறியவன் தலையைத் தொங்கவிட்டவாறு திரும்பி நடக்க முயன்றபோது படிகளில் கால் இடறி தூணுடன் தலை மோத 'ஆ' என அலறினான்.

"தம்பி ! தம்பி ! என்ன சத்தம்" என்றவாறு தாய் அவனது அறைக்குள் வந்தாள். அப்போது அவன் விழித்துக் கொண்டான். உடல் வியர்வையால் நனைந்திருந்தது.

"ஒண்டுமில்லையம்மா, சும்மா ஏதோ கனவு நீங்கள் போய்ப் படுங்கோ !"

என்று தாயை அனுப்பி விட்டு செம்பில் இருந்த நீரை எடுத்துப் பருகினான். அவனாலேயே நம்ப முடியவில்லை. காலை நடந்த அந்த சம்பவத்திற்கான தீர்வு என்ன என்பதை அந்த கனவே வெளிப்படுத்திற்று. அதை நினைத்தபோது அவனுக்கு ஒரு புறம் வியப்பாகவும் இருந்தது. நாளை விடிந்ததும் நித்யாவிடம் சென்று மன்னிப்புக் கேட்க வேண்டும். அவளுக்கு ஆறுதலாக இருக்கும் வண்ணம் சில வார்த்தைகளாவது பேச வேண்டும்.

உண்மையில் அவள் மனதளவில் நிறைவானவள், என்னைவிட ஏன் பெற்றோரை விட அவள் பண்பட்டவள். மன்னிக்கும் மனப்பாங்கு அவளிடம் நிறையவே இருக்கிறது என்றெல்லாம் பலவாறாக எண்ணிக் கொண்டான். கடிகாரம் மூன்று முறை அடித்து ஓய்ந்தது. தூரத்தில் சேவல் ஒன்று கூவியது. மீண்டும் அவன் வந்து படுக்கையில் படுத்துக் கொள்கிறான். மனம் தெளிந்த நீரோடையாய் அமைதியுற்று இருந்தது.



# பிரார்த்தனை

மாலை நேரத்து மஞ்சள் நிற வெய்யில் கோவில் பிரகாரம் எங்கும் தங்க முலாம் பூசிக் கொண்டிருந்தது. பல்வகைப்பட்ட மணிகளின் ஓசையும், கற்பூரத்தின் மெல்லிய சுகந்தமும் காற்றில் கலந்து அந்த மந்த மாருத பொழுதின் ரம்மியத்தை மேலும் மெருகேற்றிக் கொண்டிருந்தன. கோவிலின் முன்புறத்தே கிளைவிரித்திருந்த ஆலமரத்தில் தூங்கிக் கொண்டிருந்த விழுதுகளில் நான்கைந்து சிறுவர்கள் தொங்கி ஆடிக்கொண்டிருந்தார்கள். அன்று வெள்ளிக்கிழமையாக இருந்ததினால், நாற்பது ஐம்பது பேர் கூடியிருந்தார்கள். பூசகர் மிகுந்த பயபக்தியுடன் கிரியைகளை ஆற்றிக் கொண்டிருந்தார்.

இப்போது தீபத்தை அவர் ஓங்கார வடிவத்தில் உயர்த்திக் காட்டுகிறார். "அரோகரா" கோஷம் ஒலிக்க பக்தர்களின் கைகள் தலைக்கு மேல் குவிந்தன. இடது புற தூண் அருகே வேஷ்டி சகிதம் நீறு நெற்றியில் துலங்க அந்தக் கிழவர் நின்றிருந்தார். அருகே ஒரு கைத்தடி. அவ்வயோதிபர் அவ் ஆலயத்துக்கு அடிக்கடி வந்து போகும் அடியார்களில் ஒருவர்.

"அட பொடியள் பூசையாகுது இங்கு வாருங்கோ" ஒருவர் கூப்பிட்டார். ஆலமரத்தே விளையாட்டில் ஈடுபட்டிருந்த சிறுவர்கள் ஆலயத்தை நோக்கி ஓடிவந்து தம்மை வரிசைப்படுத்திக் கொண்டார்கள்.

பூசை முடிவை நெருங்குவது தேவாரம் ஓதல் மூலம் புலனாகியது. பஞ்சாரத்தி காட்டி பூசகர் பூசையை முடிவுக்கு கொண்டு வந்தார். விபூதி பிரசாதம் வழங்கப்பட்டுக் கொண்டு வந்தது. தன்னை மறந்த நிலையில் வழிபாட்டில் இருந்த அவ்வயோதிபரை பூசகரின் அழைப்பு நிஜ உலகுக்கு கொண்டு வந்தது.

"ஐயா இந்தாங்கோ விபூதி" மிகுந்த பக்குவத்துடன் கைமேல் கைவைத்து பூசகரிடம் ஏந்திய அவரது கைகளில் கைரேகை கோடுகள் மட்டுமன்றி உழைப்பால் ஏற்பட்ட பல தடங்களும் பதிந்திருந்தன. அவை அவர் வாழ்வை வலிமையுடன் வளர்த்தெடுத்த வரலாற்றை பறைசாற்றுவது போல் இருந்தன. சிறுவர்கள் பிரசாதம் பெறுவதில் முனைப்புடன் இருந்தனர்.

"எல்லோருக்கும் கிடைக்கும் அவசரப்படாமல் ஒழுங்காக வாருங்கோ" கடலைச்சட்டியை கைகளில் ஏந்தி வழங்கிய வண்ணம் இரந்தவரின் வாயில் இருந்து வேண்டுகோளாக வெளிவந்தது. இருந்தும் சிறுவர்களின் முண்டியடிப்பு முடிந்த பாடில்லை.

வழமை போல பிரசாத வழங்கலின் பின் ஆரம்பிக்கும் பஜனை நிகழ்வு ஏற்பாடுகள் தொடங்கி விட்டன.

"ஐயா இப்படி வாங்கோ இதிலை இருப்பம்" நடுத்தர வயது மனிதர் ஒருவர் கிழவரின் கரத்தைப் பற்றி அழைத்துச் சென்று அமர வைத்தார்.

"தம்பி ! தூணோட உள்ள தடியை எடுத்துத்தாரும்" வினயமாக வேண்டினார் வயோதிபர். மறுப்பேதுமின்றி அதனை அவரிடம் கொடுத்து விட்டு அருகினில் அமர்ந்தார். அம்மனிதர் இப்படிக் கூடியோரில் சுமார் பத்துப்பேர் பஜனை பாட ஆரம்பித்தனர்.

பட்டு வேட்டியும் பதக்கம் சங்கிலியும் அணிந்து பகட்டாய் தோன்றிய ஒருவர் "ஐந்து கரத்தனை" என்று ஆரம்பித்து சொல்லிக் கொடுக்க ஏனையோர் உச்சதாஸ்தாயியில் குரலெழுப்பி அதனை மீள பாடினார்கள். இப்படியாக மாறி, மாறி ஒவ்வொருவரும் தமக்கு பிரியமான பக்தி கீதங்களை பரவசத்துடன் சொல்ல மற்றையோர் அதனைப் பாடினார்கள். இப்போது அவ் வயோதிபர் பாடலொன்றை சொல்லிக் கொடுக்கிறார். அவர் பாட ஆரம்பித்ததுமே பதக்கம் சங்கிலி போட்டிருந்த அந்த நபர் குரலை ஏனோ முடக்கிக் கொண்டார். கிழவரின் குரலினிமை அங்கிருந்த ஏனையோரை நெக்குருக வைத்திருக்க வேண்டும். அவர்கள் உள்ளம் உருகி தொடர்ந்து பாடினார்கள்.

"என்ன சோதியண்ணை பாடாமல் இருக்கிறியள் சேர்ந்து பாடுங்கோவன்" என்று அருகிலிருந்தவர் கூற, பதக்கம் சங்கிலி சோதி பட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டார். ஏனோ சோதியின் முகத்தில் ஏகப்பட்ட வெறுப்புக் கோடுகள். வயோதிபரின் இனிமை கலந்த குரல் தொடர்ந்தது.

"மங்களம் ! மங்களம் ! ஜெய மங்களம்" என ஒலித்தது. இது பஜனை முடிவை நெருங்குவதை அறிவித்தது. சிறிது நேரத்தே பஜனை முற்றிற்று யாவரும் எழுந்து வீடு செல்ல ஆயத்தமாகினர். அந்த வயோதிபர் மடியில் சொருகியிருந்த தாம்பூலத்தை எடுத்துத் தரித்துக் கொண்டார்.

"ஐயா எனக்கும் கொஞ்சம் தாருங்கள்" என்று அவரது அருகில் நின்றவர் உரிமையுடன் பெற்று போட்டுக் கொண்டார். சிறிது நேர உரையாடலின் பின் எல்லோரும் நகர ஆரம்பித்தார்கள். சோதி தன் மோட்டார் சைக்கிளை ஸ்ராட் செய்து ஆயத்தமானார்.

"சோதியண்ணை போற வழிதானே ஐயான்ரை வீடு இறக்கி விடுங்கோவன் !" என்றார் மணியம்.

"எனக்கு இண்டைக்கு சரிவராது ! நான் நாட்காரியம் ஒன்றுக்காக போறன்" என்று இழுத்தார் சோதி.

"அதுக்கென்ன வழியிலை இறக்கி விடுறதிலை ஒன்றும் மினக்கேடு இல்லைத்தானே" மணியம் விடவில்லை.

"உனக்கு உது விளங்காது ! சம்பந்த அலுவல் விசயம் ! விசயம் தெரியாமல் கதையாதை என்றார் சோதி. தொடர்ந்தும் மணியம் ஏதோ கூற வாயெடுக்க சோதி முறைத்த முறைப்பில் உதடுவரை வந்த மணியத்தின் வார்த்தைகள் வற்றிவிட்டன "

"அது பரவாயில்லை ! சோதி நீர் போட்டு வாரும் நான் மெல்ல நடந்து போவன்" சோதியை வழியனுப்பினார் கிழவர். சோதியின் மோட்டார் சைக்கிள் உறுமலுடன் புறப்பட்டு புழுதியைக் கிளப்பிய வண்ணம் சென்றது.

விருப்பமில்லாதவையை வில்லங்கப்படுத்தக் கூடாது மணியம்.

"அது சரிதான் ஐயா உதிலை ஆரும் சைக்கிள்காரர் வருவினம் வாருங்கோ, றோட்டுக் கரைக்குப் போவம்"

மணியம் கூறிவிட்டு அவரையும் அழைத்துக்கொண்டு நடந்தார். சற்று நேரத்துக்கெல்லாம் சைக்கிளில் இளைஞன் ஒருவன் வருவது தெரிந்தது. அவர்களைத் தாண்டி அவன் செல்ல முற்பட்டபோது,

"தம்பி ! தம்பி ! ஒருக்கால் நில்லுங்கள்" மணியம் அழைத்தார். அந்த இளைஞன் சைக்கிளை நிறுத்தி என்ன என்பதைப் போல் இவர்களை நோக்கினான்..

"தம்பி. இவர் பார்வை இல்லாதவர் தனியாக நடந்து போகவும் இவராலை ஏலும். எனக்கு மனம் கேட்கேல்லை. ஒருக்கால் இவரை போறவழியிலை இறக்கி விடுவீரோ !" மணியம் தொடர்ந்தார்.

"நான் கொண்டுபோய் விட்டிடுவன் இண்டைக்கு சைக்கிள் கொண்டு வரேல்லை" இளைஞன் எதுவித மறுப்புமின்றி,

"ஓமோம் நான் ஏற்றிக் கொண்டு போறன்" என்று கூறியபடியே

"ஐயா கவனமாக ஏறுங்கோ, கைத்தடி கையிலை வைச்சிருக்கலாமோ? என்ற வினாவுடன் சைக்கிளில் ஏற்றிக் கொண்டான்.

"தம்பி மணியம் நான் வாறன், பிறகு சந்திப்பம்" கிழவர் விடைபெற சைக்கிள் புறப்பட்டது.

"தம்பி என்ன வேலை செய்யிறயள்" ஆரம்பித்தார் கிழவர்.

"நான் ஐயா விறகு யாவாரம் செய்யிறனான் என்ரை கை, கால் அசைந்தால்தான் வீட்டிலை அடுப்பெரியும்" தனது நிலையை சுருக்கமாக கூறினான் இளைஞன். சைக்கிள் கிரீச் கிரீச் என்ற ஒலியை தாழயதியாகக் கொண்டு சென்று கொண்டிருந்தது.

"ஐயா என்ன கோவிலால போலை கிடக்கு" 'ஓம் தம்பி' இரத்தினச் சுருக்கமாக கிழவர். "உங்களுக்கு பிறப்பிலை இருந்தே கண் தெரியாதோ" இளைஞனின் கேள்வியில் ஒரு பரிவு இருந்தது.

"ஓம் தம்பி ஆனால் எனக்கு இது கஸ்டமல்ல, நான் சுயமாக சம்பாதிக்கிறன் ; பெட்டி இழைப்பன், பாய் இழைப்பன், தறி நெய்வன், கதிரை பின்னுவன் எனக்கு வயிற்றுப்பாட்டு பிரச்சனையில்லை."

"மிச்சம் சந்தோஷம் ஐயா உங்களை நினைக்க எனக்கு ஒரே பெருமையாக இருக்கு" இளைஞன் வியப்புடன் பாராட்டிக் கொண்டு தொடர்ந்தான்.

"நான் கோவிலுக்குப் போய் கும்பிடுறேல்ல அவ்வப்போது ஏதாவது நன்மை செய்யக் கிடைச்சால் என்ரை சக்திக்குட்பட்ட வகையிலை அதுகளை செய்யிறனான். என்னைப் பொறுத்த மட்டிலை கோயிலுக்கு ஒதுக்கிற நேரத்திலை இரண்டு தடி சேகரிச்சனென்டால் எனக்கு அது உபயோகம்

எண்டு நினைக்கிறன். அதுக்காக நான் கடவுள் பக்தி இல்லாதவன் எண்டு நினையாதேங்கோ தினமும் கடவுளை மனதிலை வணங்கிறன் கூறி நிறுத்தினான் இளைஞன்.

உண்மைதான் தம்பி சிலர் கடவுளை கும்பிட்டால் மட்டும் போதுமண்டு நினைக்கினம். வாழுற காலத்திலை உபயோகமாக வாழ வேண்டுமென்று யோசிக்கிறதில்லை அதுக்காக நான் எல்லாரையும் அப்படிச் சொல்லேல்லை சமூகத்திலை இருக்கிற எல்லா மட்டத்திலையும் உம்மை மாதிரி நல்ல உள்ளம் படைத்தவையும் இருக்கத்தான் செய்யினம். இளைஞன் இடைமறிப்பாக,

"ஐயா என்னை நீங்கள் பெரிதாக நினைத்துப் போடாதேங்கோ ! ஏதோ என்னால முடிந்ததை செய்கிறேன் அவ்வளவு தான் அடக்கமாக கூறினான் அவன்

"ஓம் தம்பி முடிஞ்ச உதவியை பிறருக்கு செய்வதுகூட ஒரு பிரார்த்தனை தானே ! நானும் என்னால இயலுமான வரை மற்றவர்களுக்கு உதவுறனான் அதிலை எனக்கு ஒரு மனத்திருப்தி இருக்கு."

சைக்கிள் ஒரு திருப்பத்தில் திரும்பியது. இவடத்தை கிட்டத்தான் என்ரை வீடு நான் இனிப்போவன் இதிலை இறக்கி விடுதம்பி . சைக்கிளை நிறுத்தினான் இளைஞன் தனது கையில் பிடித்திருந்த சிறு பிரசாத பொட்டலத்தை அவனது கையில் திணித்து விட்டு,

"சரி தம்பி போட்டு வாரும் மெத்தப் பெரிய உபகாரம்" இதிலை என்னையா இருக்கு நான் வாறன் என்றபடி சைக்கிளை மிதித்தான். கிழவர் பழக்கப்பட்ட தன் பாதையில் இறங்கி வீட்டை நோக்கி நடக்கிறார். அவரது மனமோ சோதியையும் இளைஞனையும் தர்ராசிட்டுக் கொண்டது.

இறைதூதன் - கார்த்திகை 99



# தூரப்போன வசந்தங்கள்

மங்கிய விளக்கொளி அந்த வீட்டின் குறிப்பிட்ட பிரதேசத்தினுள் வியாபித்திருந்தது.

கிழவர் விறாந்தையின் ஒரு மூலையில் கிடந்த சாக்குக் கட்டிலைத் தூக்கிக் கொண்டு முற்றத்துக்கு வந்தார். மணல் பரந்த முற்றத்தில் கட்டிலைப் போட்டு விட்டு அதன்மேல் சாய்ந்து வானத்தை வெறித்தார்.

கருமுகில் கூட்டங்கள் வானத்தைப் போர்த்திருந்தன. அந்தப் போர்வை முற்றுகையை உடைக்க முடியும் என்ற நம்பிக்கையிலோ என்னவோ மங்கிய நிலவொளி அதனூடு எட்டிப் பார்த்தது. அவரிடம் இருந்து பெரு மூச்சு ஒன்று

உத்தரவின்றி புறப்பட்டுக் காற்று மண்டலத்தில் கலந்து மறைந்தது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் அறுபத்தைந்து வருடங்கள் ஒண்டிக் கட்டையாக வாழ்ந்து விட்ட சிதம்பரக் கிழவரின் மனம் ஓடிப்போன காலச் சக்கரத்தை மீளச் சுழற்றி அசைபோடத் தொடங்கியது.

சாதாரண விவசாயக் குடும்பம் ஒன்றில் இரண்டாவதாகப் பிறந்தார் சிதம்பரப்பிள்ளை. அவருக்கு ஒரு அண்ணனும் ஒரு தங்கையும் உண்டு. வயல் வரப்புகளிலே சகோதரர்கள் நண்பர்கள் எனக் கூடி ஓடிப்பிடித்து விளையாடிய நாட்களை நினைக்கையில் அவர் மனம் ஒரு முறை சிலிர்த்துக் கொண்டது. அவர் தந்தை நல்ல ஒரு விவசாயி. காலம் காலமாக மண்ணை நம்பி வாழ்ந்தவர். அதன் பேறாக நிலபுலன்கள் அவரை வந்து சேர்ந்தன.

உங்களுக்கென்ன கொப்பர் நிறையச் சேர்த்து வைத்திருக்கிறார். பரம்பரை பரம்பரையாகக் காலாட்டிக் கொண்டு இருந்து சாப்பிடலாம்.

சிதம்பரப்பிள்ளையிட ஊரார் இப்படி அடிக்கடி சொல்லும் போது பெருமையாக இருக்கும். அந்தப் புகழ்ச்சியில் ஒளிந்து கிடந்த அர்த்தத்தைச் சிதம்பரப்பிள்ளையால் உணர முடியவில்லை.

அளவான பாசம். அதற்கேற்ப கண்டிப்பு. சிறந்த கல்வி போன்றவற்றை ஒருங்கிணைத்துத் தமது பிள்ளைகள் மூவரையும் வளர்த்து வரலானார். சிதம்பரப்பிள்ளைக்கு தந்தையை விடத் தாயிடமே பாசம் அதிகம். காரணம் அவரது காரியங்களில் சிலவற்றைத் தாயினூடாகவே சாதித்துக் கொள்ள முடிந்தது.

"இன்றைக்கு இரவு மாரியம்மன் கோவிலிலே காத்தவாராயன் போடினமாம் ! எப்படியென்றாலும் ஐயாட்டை சொல்லிப்போட்டு என்னைப்போக விடுங்கே"

சிதம்பரப்பிள்ளை தாயிடம் தீர்மானமாகக் கூறி நிற்பார்.

"ஏன் நீ கொய்யாட்டைச் சொல்லிப்போட்டுப் போவன் ! " அவள் சிரிப்புடன் மறுப்பாள்.

"என்ரை அம்மா அல்லே. நான் பார்த்திட்டு வந்து கதை கதையாச் சொல்லுவனல்லே !"

அவரது பேச்சில் கரைந்து போவாள் தாய். பின்னர் அதை அவர் மறக்க வேண்டியதுதான். மாலை நேரம் அடுக்களைக்குள் இருந்து அம்மாவின் குரல்.

"தம்பி இஞ்சை வா !."

நல்லமுடிவு காத்திருக்கின்றது என்ற நம்பிக்கையுடன் அவர் அடுக்களைக்குள் நுழைவார்.

"தம்பி நான் கொய்யாட்டை சொல்லிப்போட்டன் எண்டாலும் நீயும் ஒருக்கால் கொய்யாவைக் கண்டோண்டு போவன் ! அங்கை குழப்படி விடுறேல்லை ! சொல்லிப்போட்டன் தெரியும்தானே !" தாயார் கண்டிப்புடன் எச்சரிப்பாள்.

மௌனமாகத் தலையாட்டி விட்டு. பகல் முழுவதும் உழைத்த அயர்ச்சியால் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருக்கும் தந்தை முன்போய் நிற்பார் சிதம்பரப்பிள்ளை.

"என்ன தம்பி தமிழ்ப் பாடத்திலை ஏதாலும் பிரச்சினையா ?. கொப்பியைக் கொண்டு வா. தெரிஞ்சதைச் சொல்லித்தரலாம்." ஏதும் அறியாதவர் போல தீவிரமான குரலில்.

"இல்லை ஐயா" சிதம்பரப்பிள்ளை இழுப்பார்.

"அப்ப என்ன பிரச்சினை?" சாதாரணமாகக் கேட்பார்.

"காத்தான் போடினமாம், அதுதான் போகப்போறன்" சிதம்பரப்பிள்ளையின் குரலில் கெஞ்சல் மிஞ்சி நிற்கும்.

"ஒரு இடமும் போறேல்லை, ஒழுங்காய் இருந்து படிக்கிற அலுவலைப் பார். கூத்தும், நாடகமும் நாளைக்குச் சாப்பாடு போடாது" தந்தை கர்ச்சிப்பார்.

"ஒரு நாளைக்குத்தானே அவன் போட்டு வரட்டும் விடுங்கோ" அம்மா அடுக்களைக்குள் இருந்து கூற.

"பொடியன் கெடுறது உன்னாலைதான். என்னத்தையாதல் செய்து துலையுங்கோ நீயாச்சு உன்ரை கொம்மா ஆச்சு. ஆனா ஒன்று மட்டும் சொல்லிப்போட்டன். ஏதாவது வம்பு தும்பு பண்ணிப்போட்டு இஞ்சை வந்தியெண்டா காலடிச்சு முறிப்பன்."

அந்த வார்த்தைகள் மாத்திரம் அவரிடம் இருந்து தீர்மானமாக ஒலிக்கும். அம்மா கொடுக்கும் இருபத்தைந்து சதத்தோடு சிதம்பரப்பிள்ளை சிட்டாய்ப் பறப்பார்.

சகோதரர்கள் இருவரையும் விடச் சிதம்பரப்பிள்ளையாலேயே அதிகமான காரியங்கள் சாதித்துக் கொள்ள முடிந்தது. இதை அவரது தந்தையே வெளிப்படையாகப் பலரிடம் கூறியிருக்கிறார்.

"மற்றப் பிள்ளையள் இரண்டு பேரையும் விட உவன் சிதம்பரப் பிள்ளைதான் விசயகாரன். மெல்லமாய் அலுவலைப் பார்த்துக் கொண்டு போடுவன்."

வெற்றிலை குதப்பிய வாயால் தந்தை அவரைப் புகழும் போதெல்லாம் மனம் ஆனந்தத்தில் துள்ளும்; இன்னும் எத்தனையோ சம்பவங்கள் தொடர் நிகழ்வாக நடந்து முடிந்து கொண்டு இருந்தன. காலம் வெகு நிதானமாகத் தனது பயணத்தை முன்னோக்கி நகர்த்திக் கொண்டிருந்தது. இருபது வருடங்கள் உருண்டோடியது. அவரது அண்ணன் மேற்படிப்புக்காக இந்தியா செல்ல. அந்தக் கால சமுதாய வழக்கம் இயல்பாகவே தங்கையை வீட்டு வேலைக்குள் நுழைத்து விட்டிருந்தது. அதே சமயம் சிதம்பரப் பிள்ளைக்கு படிப்பில் கவனம் செல்லவில்லை. தந்தை வழியைப் பின்பற்றித் தோட்ட வேலைக்குள் நுழைந்து கொண்டார்.

ஒரு சமயம் சிதம்பரப்பிள்ளைக்குக் கடுமையான காய்ச்சல். தாயின் கை மருந்துகள் எதுவும் பயனளிக்கவில்லை. இரு நாட்களில் சுரம் இரட்டிப்பானது. வீட்டார் அனைவரும் ஆடிப்போனார்கள். தந்தை துரிதமாகச் செயற்பட்டார். ஊர் வைத்தியரான பரமசிவனைக் கையோடு அழைத்து வந்தார்.

வைத்தியர் நிதானமாகச் சோதனை செய்தார்.

"கொஞ்சம் கூடத்தான் காயிது; உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் சுகம் வரும் வரையும் தம்பியை என்ரை வீட்டை கொண்டு போறன். உந்தக் காய்ச்சலுக்கு அடிக்கடி கவனிச்சு அதற்கேற்பத்தான் கசாயம் கொடுக்க வேணும்." வைத்தியர் சொல்லி நிறுத்தினார்.

"ஓமோம் நெடுக இஞ்சை வந்து கவனிக்க வசதி வராதுதானே, அப்ப உங்கடை வீட்டை கொண்டு வந்து விடுறன்" என்று கூறியதோடு, தகப்பன் வண்டியை பூட்ட ஆயத்தமானார்.

அசதியுடன் கண் விழித்தபோது ஒரு மரக்கட்டிலில் படுத்திருப்பதை உணர்ந்தார் சிதம்பரப்பிள்ளை. நடந்தவை யாவும் நினைவுக்கு வர இது வைத்தியர் வீடு என்பதை உணர்ந்தவராய் சிரமப்பட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டார். தேகம் அனலாகக் கொதித்தது. சுற்றும் முற்றும் பார்த்தார். அவரது ஐயா, அம்மா ஒருவரையும் காணவில்லை.

"உங்கடை ஐயா ஆட்கள் வீட்டபோயிருக்கினம் பின்னேரம் தான் வருவினம். "

ஒரு மெல்லிய ரம்மியமான குரல் ஒலித்து அவர் முன் வெளிப்பட்டது. நன்கு செருக்கப்பட்ட சிரட்டையில் மூலிகை கலந்த கசாயத்துடன் நிற்கும் அவளைப் பார்த்த போது சிதம்பரப் பிள்ளையின் மூலையின் ஒரு மூளையில் மின்சாரம் தாக்கியதாக ஒரு உணர்வு. கசாயம் நிறைந்த சிரட்டையைக் கையில் திணித்துவிட்டுக் கன்னத்தில் கையை வைத்து அதனூடாகக் காய்ச்சலின் தீவிரத்தை அறிந்து கொண்டாள்.

"இதைக் குடியுங்கோ"

சொல்லிவிட்டு மீண்டும் எங்கோ சென்று மறைந்து விட்டாள். அரை மணி நேரம் கழித்து வைத்தியர் வந்தார்.

"தம்பிக்கு இப்ப எப்பிடி"

சாதாரணமாக வினாவியபடி நாடியோட்டத்தை ஆராய்ந்தார்.

"பயப்படத் தேவையில்லை. இரண்டு நாளிலை குறைந்திடும். இப்பகொஞ்ச நேரத்திலை வித்தியாசம் தெரியும்" என்று உற்சாகமாகக் கூறிவிடு வேணி ! நான் அவசரமாக வெளியிலை போக வேணும் தம்பிக்குத் தேவையானதைக் கவனித்துக்கொள்" என்றார். வைத்தியர் உள்ளே பார்த்தபடி "ஓமப்பா... நீங்கள் போட்டு வாருங்கோ !" உள்ளேயிருந்து வேணி விடையளித்தாள்.

வேணிலைப் பெரிய அழகி என்று சொல்ல முடியாவிட்டாலும் அடக்கம், கனிவான பேச்சு, நல்ல உபசரிப்பு முதலியவற்றைத் தன்னகத்தே கொண்டிருந்தாள். கதை பேசும் கருவிழிகள், நேர்த்தியான பல் வரிசை, மெல்லிய மாவெள்ளை நிறம். இவற்றுக்கு மேலாக வயதுக்கு மீறிய ஆளுமை. இவை யாவும் மேலும் அவளை அலங்கரித்து விட்டிருந்தது. ஐந்து நாட்கள் கழிந்தது. பெற்றோர், உறவினர் நாள் தவறாமல் வந்து அவரைப் பார்த்துச் சென்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாகக் கிருஷ்ண வேணி தாயா? தாதியா? என்று கூற முடியாதவாறு அவளது செயற்பாடுகள் அமைந்திருந்தன. மருந்து கொடுக்கும் போது தாதியானாள். மற்ற வேளைகளில் அன்பு கனிந்த வார்த்தைகளாலும், செயற்பாடுகளாலும் அவள் தாயாகி விட்டிருந்தாள்.

வேணி பிறந்த போதே புண்ணியவதி போய்ச் சேர்ந்திட்டா. நான் தான் அவளை வளர்த்தேன். எனக்குக் கஷ்டமாய்த் தெரியவில்லை. சின்னப் பிள்ளையிலேயே அவள் நல்ல மனப்பக்குவம் உள்ளவளாய் வளர்ந்திட்டாள்."

சாவகாசமாகப் பேசிக் கொண்ட போது, சிதம்பரப்பிள்ளையிடம் பேசிப் பெருமைப்பட்டுக் கொண்டார். பரமசிவம் வைத்தியரின் தன்னம்பிக்கை அந்தச் சமயம் சுடர் விட்டது.

"தம்பி இனிச் சந்தோஷமாக வீடு போகலாம் நல்லாகத் தேறியாச்சுத் தானே ! இவ்வளவு நாளும் பல்லைக் கடிச்சுக் கொண்டு இருந்திருப்பீர் ! என்ன?

உத்தரவாகப் பிறந்த கேள்வி முற்றுப் பெற்று நின்றது. சிதம்பரப்பிள்ளை திடுக்குற்று நிமிர்ந்தார்.

"ஐயையோ அப்படியொன்றும் இல்லை. வீட்டை விட இஞ்சைதான் சந்தோசம் கூட ஒப்பாசாரத்துக்காகக் கூறுவதாக வைத்தியர் அதை எடுத்துக் கொண்டாலும் சிதம்பரப்பிள்ளையைப் பொறுத்த மட்டில் அதுதான் உண்மை."

மாலை நான்கு மணி இருக்கும். ஜல்... ஜல் என்ற மாட்டின் சலங்கைச் சத்தம் ! வேணி ஏதோ உணர்ந்தவளாய் வாயிலுக்குச் சென்று திரும்பினாள். மௌனமாக புன்னகையொன்றை சிதம்பரப்பிள்ளை மீது வீசிவிட்டு அடுக்களைக்குள் நுழைந்து கொண்டாள். அப்புன்னகை ஆயிரம் அர்த்தங்களை அவருக்கு உணர்த்தியது. சற்று நேரத்திற்கெல்லாம் வண்டில் வந்து நின்றது. சிதம்பரப்பிள்ளையின் தந்தை மெல்லிய முறுவலோடு உள்ளே நுழைந்தார். வைத்தியர் பரமசிவம் வீட்டின் பின்புறம் இருந்து வெளிப்பட்டு எதிர்கொண்டு வரவேற்றார்.

'வாங்கோ !, வாங்கோ ! தம்பி எப்பவோ ஆயத்தம்' இருவரது சிரிப்பொலியும் நிறைந்தது. வேணியினதும், சிதம்பரப்பிள்ளையினதும் சிரிப்பொலிகளைத் தவிர.

புறப்படும் போது வைத்தியர் சொன்னார்.

'இது வரைக்கும் வீட்டிலை வைச்சு ஒருவருக்கும் வைத்தியம் செய்ததில்லை. இப்பதான் முதல் தரம்'

'ஓமோம் உங்கடை வீடண்ட படியால்தான் தம்பியை விட்டனான்.'

சிதம்பரப்பிள்ளையின் தந்தை கூடவே ஒத்துப் பாடினார். ஒரு தொகைப் பணத்தை கையிலே திணித்து விட்டு, "நான் பேந்து வந்து சந்திக்கிறன்" என்று கூறியபடியே, சிதம்பரப்பிள்ளையின் தந்தை புறப்பட்டார். அவரைத் தொடர்ந்து சிதம்பரப்பிள்ளையும் எழுந்து கொண்டார்.

'அப்ப நான் போட்டு வாறன்'.

இருவருக்கும் பொதுவாகத்தான் கூறினார். சிதம்பரப்பிள்ளை. ஆனால் வைத்தியர் மீண்டும் நிதானமாக விடை கொடுத்தார்.

'ஓமோம் தம்பி போட்டு வாரும்'

வேணியைக் கடைக் கண்ணால் நோக்கிய போது அவளது ஓர விழிகளில் ஈரம் எட்டிப் பார்த்திருந்தது. பார்வையாலேயே நன்றி மலர்களை அவளுக்குத் தூவிவிட்டுச் சென்று விட்டார். நாட்கள் நகர்ந்தன. இடையிடையே சிதம்பரப்பிள்ளை வைத்தியர் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டு இருந்தார். அவ்வாறு வரும் சமயங்களில் தமது தோட்டத்தில் விளையும் மரக்கறிகளை வைத்தியர் வீட்க்குக் கொண்டு போவது வழக்கம். ஒரு சமயம் சிதம்பரப்பிள்ளை சென்றபோது வைத்தியர் எங்கோ வெளியில் சென்றிருந்தார். கொண்டு வந்த மரக்கறிக் கூடையை வாங்கில் வைத்து விட்டுத் திரும்பியவரை.

'தேத்தண்ணி போடுறன்' என்றொரு குரல் தடுத்தது.

மௌனமாக வாங்கில் அமர்ந்து கொண்டார். ஒரு நொடியில் தேநீர்க் குவளையுடன் வந்தாள் வேணி. குவளையை வாங்கில் வைத்து விட்டு எதிர்த்தால் போல் இருந்த தூணில் சாய்ந்து நின்று கொண்டாள்.

'அப்பா மரக்கறிக்காசை நீங்கள் வந்தால் குடுக்கச் சொன்னவர்'.

தயங்கித் தயங்கி வேணியின் வார்த்தைகள் வெளிவந்தன. சிதம்பரப்பிள்ளை குறுக்கிட்டார்.

'இப்ப எனக்குத் தேவையில்லை ஒரு நாளைக்கு மொத்தமாய் வசூல் பண்ணுவன்'.

'அப்பாட்டையோ? என்னட்டையோ? கேட்டு விட்டுத் தவறு செய்தவள் போல் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

'அப்பாட்டையில்லை. உங்களிட்டைத்தான்' கூறிவிட்டுக் குறும்பாக சிரித்தார் சிதம்பரப்பிள்ளை.

சந்திப்புக்கள் தொடர்ந்தன. தூய்மையான அன்பு இருவருக்குமிடையே பரிமாறப்பட்டது. இது சிதம்பரப்பிள்ளையின் தந்தைக்கோ, வைத்தியர் பரமசிவத்துக்கோ, தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால் அது புரோக்கர் பொன்னுத்துரையின் கண்களுக்கு எப்படியோ பட்டுவிட்டது.

இது தொடர்ந்தால் தான் கணிசமான வருமான இழப்பைச் சந்திக்க நேரும் என நினைத்தார் பொன்னுத்துரை. பொன்னுத்துரை மூட்டிய தீ சிதம்பரப்பிள்ளையின் வீட்டில் கொழுந்து விட்டது. அன்று மாலை நேரம் சிதம்பரப்பிள்ளை துலாமிதித்து விட்டு வீடு வந்த போது,

'உனக்கிப்ப கலியாணம் கேட்குது போல கிடக்குது. வைத்தியற்ரை பெட்டையோடை உனக்கு என்ன கதை. எங்கடை குடும்ப மானம் உன்னாலை கெட்டுப் போச்சு ! வைத்தியர் திட்டம் போட்டுத்தான் உனக்கு வைத்தியம் செய்திருக்கிறார். அவருக்கு நல்ல குடுப்பு இண்டைக்குக் குடுத்திருக்கிறன். பிள்ளை வளர்க்கிறாராம், கண்டறியாத பிள்ளை வளப்பு. தாயில்லாமல் வளர்ந்த பிள்ளை என்டதைக் காட்டிப் போட்டாள். ஆட்டக்காரி ! என்ன மந்திரம் போட்டாளோ? தெரியேல்லை'

உத்தஸ்தாயியில் போன தந்தையை நிறுத்தினார் சிதம்பரப்பிள்ளை.

'ஐயா ! என்னைப் பற்றி என்ன என்னவெண்டாலும் சொல்லுங்கோ' என்ரை வேணியைப் பற்றி என்னவெண்டாலும் சொன்னியளென்டால் வீண் பிரச்சினை வரும் சொல்லிப் போட்டான்' ஆக்ரோஷமாகக் கத்தி நிறுத்தினார்.

'அதென்னடா உன்ரை வேணி. நாளைக்கு உனக்கு எல்லாம் தெரியும். வைத்தியரிட்டை நான் சொல்லிப் போட்டன், உன்ரை பெட்டைக்கு கலியாணம் அவசரமென்டால், தகுந்த இடமாய் பார்த்துச் செய்து வை ! நல்லவேளை பொன்னுத்துரை சொல்லியிருக்காட்டில் நாங்கள் ஏமாந்திருப்பம்.

சிதம்பரப்பிள்ளையின் தந்தை கூச்சலிட்டுக் கொண்டே இருந்தார்.

வழமையாகச் சிதம்பரப்பிள்ளைக்குப் பரிந்து பேசும் தாயைக் காணவில்லை. சிதம்பரப்பிள்ளைதான் தேடிப் போனார். வீட்டின் ஒரு மூலையில் கண்ணீர் ஆறாக ஓடுகின்ற நிலையில் தாயிருந்தாள்.

'அம்மா ! இப்ப என்ன நடந்து போச்சு ! எண்டு அழுறியள்? சிதம்பரப்பிள்ளை நிறுத்தினார்.

'இன்னும் என்ன நடக்க வேணும் ! உன்னைச் செல்லம் தந்து வளர்த்தது தான் பிழையாய்ப் போச்சுது'.

ஓவென்று அழுதாள் பாக்கியம்.

சிதம்பரப்பிள்ளைக்குத் தலைசுற்றியது. அவரது தந்தை விட்டபாடாக இல்லை.

'இனிமேல் நீ அந்தப் பக்கம் போனாயெண்டால் என்னை உயிரோடு காணமட்டாய், சொல்லிப் போட்டன் !' கூறிவிட்டுப் பாயைத் தட்டிப் போட்டுக் கொண்டு படுத்து விட்டார்.

சிதம்பரப்பிள்ளையின் சகோதரர்கள் இருவரும் சிறு வயதிலிருந்தே பெற்றோரின் கட்டுப்பாட்டுக்குள் வாழப் பழக்கப்பட்டு விட்டார்கள். அவர்களால் எப்படி சிதம்பரப்பிள்ளைக்கு ஒத்துழைப்பு நல்க முடியும்? சிதம்பரப்பிள்ளை அவர்களைக் குற்றம் சொல்லவும் இல்லை. அவர்களது உதவியை எதிர்பார்க்கவும் இல்லை. மறுநாள் விடிந்ததும் சிதம்பரப்பிள்ளை தீர்மானத்தோடு புறப்பட்டார். வீட்டார் யாரும் அவரிடம் பேச்சுக் கொடுக்கவில்லை.

வேணியின் வீடு, களையிழந்து கிடந்தது. முற்றம் பெருக்கப்படாமல் குப்பைகள் பரவிக் கிடந்தன. சிதம்பரப்பிள்ளை எதையும் கவனிப்பதாக இல்லை. வீட்டினுள்ளே நுழைந்தார். நுழையும் போதே, புதிதாக ஒரு உரிமை ஏற்பட்டிருப்பதாக அவர் உணர்ந்தார். அங்கு யாரையும் காணவில்லை. பதற்றத்தோடு பின்புறம் சென்றார். அங்கே புற்பாய் ஒன்றில் வேணி சாய்ந்திருந்தாள். அவளைக் கண்டதும் கண்ணில் இருந்து நீர் ஊற்றெடுத்தது.

வேணி ! என்றழைத்தபடி அவளது மெல்லிய கரத்தைப் பற்றினார். திடுக்குற்று எழுந்து உட்கார்ந்து கொண்டாள் வேணி. அவளது கண்களில் ஈரம் வற்றியிருந்தது.

இருவருக்கும் இடையே ஒரு கண நேர மௌனம்.

சிதம்பரப்பிள்ளை தான் ஆரம்பித்தார்.

"வேணி நீ என்னோட வா ! நாங்கள் எங்காவது, போய் சந்தோசமாக இருப்பம். " நா தழுதழுக்க நிறுத்தினார்.

பலவீனமான குரலில் வேணி "நான் வரேல்ல ! அதுக்கு அவசியம் இருக்காது. "

"பணக்காரின்ரை வாசம் எங்களை மாதிரி ஏழைகள் பக்கம் வீசக் கூடாது. நாங்களெல்லாம் பாவப்பட்ட ஜென்மங்கள். இதை விளங்கிக் கொள்ள எனக்கு நேற்று வரை அவகாசம் எடுத்திருக்குது. உங்கடை ஐயா என்ன சொன்னவர் தெரியுமே ! நான் தாயில்லாப் பிள்ளையாம் ! அதுதான் இப்படி ஆட்டக்காரியாகப் போனனாம் ! என்ரை அப்பாவைக் கூட விட்டு வைக்கேல்லை. அஞ்சு சதம் சேர்க்க வக்கில்லை. மாப்பிள்ளை பிடிக்க வெளிக்கிட்டியளோ? என்று இன்னும் வேறு ஏதோ வெல்லாம் சொல்லித் திட்டினார்."

"உங்களுக்குத் தெரியும்தானே அப்பாவுக்கு இந்த விசயம் தெரியாதெண்டு. என்ரை அப்பா மானத்துக்குப் பயந்தவர். உங்கடை ஐயா வீட்டை விட்டுப் போன பிறகு சொன்னார்; யாரால என்ரை பெயர் காப்பாற்றப்பட வேணும் எண்டு நினைச்சனோ?, யாரால நான் பெருமைப்பட வேணும் எண்டு நினைச்சனோ? அவையளாலேயே, அவையெல்லாம் அழிக்கப்பட்ட மணல் கோட்டைகளாய்ப் போச்சுது. இனி எனக்கு இந்த வீட்டிலை இருக்கவே பிடிக்கேல்ல ! என்று பித்துப்பிடித்தவர் போல சொல்லிப் போட்டு என்னோட முகம் கொடுத்துப் பேசக் கூட விருப்பமில்லாமல் எங்கேயோ போய்ச் சேர்ந்திட்டார். நேற்றுப் போனவர் இன்னமும் வீட்டை வரவேயில்லை."

வேணி தொடர்ந்தாள்...

"நான் அதுதான் இரவு முழுக்க யோசிச்சு நல்ல முடிவாய் எடுத்துப் போட்டன். என்னாலதான் அப்பாவின்ரை மானம் போச்சுது ! கௌரவம் நின்ற இடம் தெரியாமல் மறைஞ்சிட்டுது ! அதாலதான் நான் இந்த முடிவை எடுத்துக் கொண்டன். "

என்ன முடிவு என்பது போல சிதரம்பரப்பிள்ளையின் கண்கள் விரிந்தன. விடையளிப்பது போல அவளது வாயிலிருந்து வெண்ணிற நுரை வெளியேறிக் கொண்டு இருந்தது.

சிதம்பரப்பிள்ளை திடுக்கிட்டார்.

"வேணி நீ அவசரப்பட்டிட்டாய் ! இவ்வளவு தூரம் நீ ஒரு கோழைத்தனமான முடிவை எடுப்பாய் என நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை."

"நான் கோழையில்லை ! என்னால் அப்பாவிற்கு ஏற்பட்ட அவமானத்தை களையிறதுக்கு வேறை வழி தெரியேல்ல !"

வேணி தொடர்ந்து வார்த்தைகளை விசினாள்.

"இந்தச் சமுதாயம் ஆண்கள் இழைக்கிற தவறுகளை கண்டு கொள்ளுறதேயில்லை. அந்தத் தவறுகளுக்கும் சேர்த்துத் தண்டனையை பெண்கள்தான் அனுபவிக்க வேண்டியிருக்குது."

அவள் கூறும் எதையும் காதில் வாங்கிக் கொள்ளாதவராய் அயலவர்களை கூட்டி வரப் புறப்பட்டார். அவரது கரத்தை வேணி இறுகப் பிடித்துக் கொண்டாள்.

"நான் என்ரை பயணத்தை ஆரம்பிச்சிட்டன் ! இனி என்னைக் காப்பாற்ற இயலாது" நீங்கள் நல்ல இடத்திலை பார்த்துக் கலியாணம் கட்டி சந்தோசமாக இருங்கோ ! அது தான் என்னோட ஆசை"

கூறிவிட்டு சிதம்பரப்பிள்ளையின் மடியில் சாய்ந்து கொண்டாள். இருவரது கண்ணீர்த் துளிகளும் கலந்தன. வேணி விண்ணப்பித்தாள்.

" உங்களோட சேர்ந்து வாழ பாக்கியம்தான் எனக்குக் கிடைக்கேல்ல ! ஆனால் உங்கட மடியிலை சாகிறதுக்காதல் கொடுத்து வைச்சிருக்கிறன். அந்த மட்டில் எனக்குச் சந்தோசம்தான்..."

தொடர்ந்தாள் வேணி.

"நான் குடிச்சிருக்கிற மருந்து சாதாரண மருந்தில்லை. அதாலை நான் நினைச்சதை நிச்சயமாய்ச் சாதிச்சிடுவன்" அவள் கடைசியாக கூறியவை அவர் மனதில் மின்னலடித்தன.

''நீங்கள் என்னைத் தொடர்ந்து உங்கட வாழ்க்கையை அழிச்சுக் கொள்ளாதேங்கோ !"

வார்த்தைகள் தடக்கித் தடக்கி வெளிவந்து நின்றன.

இமைகள் செருக ஆரம்பித்தன. அதோடு அவளுக்காகத் திறந்த சிதம்பரப்பிள்ளையின் இதய வாசலும் அந்த இனிய நினைவுகளை சுமந்தபடி மூடிக் கொண்டது.

வைத்திய பரமசிவம் வந்தார். அவர் பெரிதும் இளைத்திருப்பது போல சிதம்பரப்பிள்ளைக்குப்பட்டது. சிதம்பரப்பிள்ளை அவரோடு பேச முயன்றார். ஆனால் அது பலனளிக்கவில்லை.

பரமசிவத்தைப் பொறுத்தமட்டில் சிதம்பரப்பிள்ளையே மகளின் சாவுக்கு காரணமானவர். ஒருவாறு இறுதிக் கிரிகைகள் எல்லாம் நடந்தேறியன. குறிப்பாக வைத்தியர் பரமசிவம் அவரைக் குற்றவாளியாகக் கருதியது சிதம்பரப்பிள்ளையின் மனதில் குற்ற உணர்வை ஏற்படுத்தியது.

காலம் நகர்ந்தது. வைத்தியர் பரமசிவத்தின் அன்றாட வாழ்க்கையில் பல வித்தியாசங்கள் மாற்றங்கள்.

அவர் ஜீவனோபாயமாகக் கொண்ட வைத்தியத் தொழிலையும் விட்டுவிட்டார்.

காலப் போக்கில் சிதம்பரப்பிள்ளையின் அண்ணனுக்கும், தங்கைக்கும் நல்ல இடங்களில் திருமணம் நடந்தேறியது.

சிதம்பரப்பிள்ளையின் தந்தையும் தாயும் எவ்வளவோ இரந்தும் கூட அவர் திருமணம் செய்யச் சம்மதிக்கவில்லை.

அவரைப் பொறுத்தமட்டில் இனித் திருமணம், குடும்பம் மகிழச்சி இவை எல்லாம் எட்டாத கனிகளாகத் தூரப் போன வசந்தங்களாக, மாறிவிட்டிருந்தன.

எத்தனை காலம் இப்படி இருக்கப் போறாய்? பிற்காலத்தில் உனக்கொரு துணை வேண்டாமோ? சகோதரர்களது நியாயபூர்வமான வாதங்களுக்கு சிதம்பரப்பிள்ளை கூறிய பதில் "நான் யாரையும் மனதளவில் ஏமாற்ற விரும்பவில்லை" என்பதுதான்.


காலம் ஓடியது அவருக்கென இருந்த சில கடமைகள் முடியவே, சொந்த ஊரை விட்டு இந்த ஊருக்கு வந்தார். இங்கு அவரைப் பற்றி முழுமையாக அறிந்தவர்கள் யாருமில்லை. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் சிதம்பரப்பிள்ளை வெறும் கட்டைப் பிரமச்சாரி. அவ்வளவுதான். பின்னும் வாழ்க்கையில் எவ்வளவு மேடு, பள்ளங்களை கண்டிருக்கிறார் அப்படியிருந்தும் இப்பொழுது தனது உழைப்பை மூலதனமாகக் கொண்டு முன்னேறியிருக்கிறார். அவரது கடந்த கால நிகழ்வுகள் மெல்ல விடை பெற்றுக் கொண்டன.

கண்களைத் திறந்து வானத்தை நோக்கினார். இது வரை நேரமும் முற்றுகை முயற்சியில் ஈடுபட்டிருந்த முகிற் கூட்டங்கள் விலகியிருந்தன. ஒரு பெருமிதத்தோடு நிலவு பூமியில் பரிணமித்துக் கொண்டு இருந்தது.

---

தினகரன் வாரமலர் - 2 பெப்ரவரி 97

# அடாவடி



கோவிலில் கூட்டம் நிரம்பியிருந்தது. அன்று தேர்த்திருவிழா. உண்மைப் பக்தர்கள் ஒரு புறமும், வேடிக்கைக் கூட்டம் மறுபுறமுமாக கலந்து நிறைந்த கூட்டம். வசந்த மண்டப பூசை முடிந்து சுவாமி தேரேறி விட்டார். "அரோகரா" கோஷங்களோடு தேர் வலம் வருகின்றது.

"இந்தமுறை எண்டைக்குமில்லாத சனம் ! இடம் பெயர்ந்ததுகளால சனம் இவ்வளவு". ஒருவர் அருகிருந்தவரிடம் கூறிக்கொண்டார்.

"பார்த்தால் இடம்பெயர்ந்ததுகள் மாதிரியே தெரியுது; அவேன்ரை உடுப்புகளும், நகையளும்" மற்றவர் சூள் கொட்டிக் கொண்டார்.

சுவாமியானவர் எதுவித சலனமுமின்றி தேரில் வந்து கொண்டிருந்தார். பஜனைக் கோஷ்டிகள் கீதங்களைப் பாடியவாறு பின்னே சென்று கொண்டிருந்தன.

அந்த இளைஞர் கூட்டத்தில் ஐந்தாறு பேர் இருக்கலாம். அவர்கள் கோவிலுக்கு தரிசனத்திற்கு வந்தவர்கள் போல் தெரியவில்லை. சிலரின் கழுத்தில் சங்கிலிகள் மின்னின. யாவரும் நீண்ட காற்சட்டை. சிலர் ரீசேட். அணிந்திருந்தார்கள். அவர்கள் தேர் செல்லும் திசைக்கு எதிர் திசையிலே மக்கள் கூட்டத்தில் எதிர்நீச்சல் இடுபவர்கள் போல் வந்து கொண்டிருந்தார்கள். இடையிடையே உரத்த குரலில் ஏதோ சொல்வதும் சிரிப்பதுமாக...

"ஏன் தம்பிமார் உழக்காமல் பார்த்துப் போகக் கூடாதே?".

இவர்கள் மிதித்து சென்ற வயோதிபரின் குரல் பலவீனமாக அவர்களை நோக்கி ஒலிக்கிறது.

"பார்த்துத்தான் போறம். பார்க்காமல் போயிருந்தா நீங்கள் உதிலை நிண்டு இப்ப கதைச்சிருக்கமாட்டியள்" ஒருவன் உறுமினான். மற்றவர்கள் ஏதோ பெரிய ஹாஸ்யம் கேட்டவர்கள் போல் சிரிக்கிறார்கள். பெரியவர் தலைகுனிவுடன் அப்பனே ! என்றவாறு அப்பால் மெதுவாக நகர்கிறார். அருகிருந்த இளநங்கையர் இருவர் இவர்களைப் பார்த்து மெல்ல நகைக்கின்றனர்.

"பழசுகள் வீட்டிலை கிடக்கிற நேரம் இஞ்ச சனத்துக்குள்ள என்ன வேலை? "

வேறொருவன் பாரிய புத்திமதி கூறியது போல உரக்கக் கூற மற்றவர்கள் மீண்டும் சிரித்தார்கள். அந்த இளம் பெண்கள் இப்போது வாய்விட்டே சிரித்தனர். இவர்களுக்கு பெரிய அளவில் தேனுண்ட ஒருவித மயக்க நிலை.

"மச்சான் சரிவரும் போலை கிடக்கு"

"வாடா இன்னும் எவ்வளவு கிடக்கு இதோட மட்டும் மினக்கெடக் கூடாது". அவர்களது பவனி தொடர்கிறது.

ஐஸ்கிறீம் கடைக்குள் இருந்து வெளிப்பட்டது அந்த இளைஞர் கூட்டம். அவர்கள் கைகளில் ஒவ்வொரு ஐஸ்கிறீம் இருந்தது. தேர் இருப்பிடம் சென்றுவிட்டபடியால் குளிர்பானக் கடைகள் முன்பு மட்டுமன்றி எல்லா கடைகள் முன்பும் சனங்கள் நின்றிருந்தார்கள்.

"பார் ரமேஷ் விளையாட்டை"

கூறியவன் ஒரு துண்டு ஐஸ்கிறீமை விரலிடுக்கில் லாவகமாக எடுத்து மெதுவாக அருகிலிருந்த யுவதிகளை நோக்கிச் சுண்டிவிடுகிறான். அது குறிதவறி வழியில் சென்று கொண்டிருந்த ஒரு வயதான பெண்ணின் கைப்பகுதியில் விழுகிறது.

"சீ" எனக் கீச்சிட்டவாறு கைகளை உதறுகிறாள் அவள்.

நிலைமையை உணர்ந்த அந்தப் பெண்கள் சொல்லி வைத்தாற் போல் சேர்ந்து சிரிக்கிறார்கள்.

"பண்பாடு, பழக்க வழக்கமில்லாத கூட்டம்" முனகியவாறு முகச்சுழிப்புடன் நகர்கிறாள் அப்பெண்மணி.

"பண்பாடு கிலோ என்ன விலையக்கா?"

ஒருவன் உரக்கக் கேட்கிறான். பெரிய கேள்வியொன்றை கேட்டுவிட்டதான திருப்தி அவனுக்கு. யுவதிகள் குழாம் சிரிப்புடன் இளைஞர் கூட்டத்தை பார்க்கிறார்கள். அவர்களிற்கோ புளகாங்கிதம்.

"வாங்கடா போவம்"

ஆரவாரமாக மீண்டும் அசையத் தொடங்குகிறார்கள்.

பூரணம் கடலைகளை தரம் பிரித்து, பார்வையாகத் தட்டுக்களில் இட்டிருந்தாள். அதிகாலை நான்கு மணிக்கே எழுந்துவிட்ட பூரணம் விடியுமுன்பே கடை பரப்பியிருந்தாள்.

"இண்டைய வியாபாரத்திலை மகள் சுமதிக்கு ஒரு அரைப் பவுணிலையாலும் தோடு செய்ய வேணும் ! கணவனையிழந்த அவள் ஒரே மகளுடன் கடலை வியாபாரத்தை மேற் கொண்டு காலத்தையோட்டும் விதவை.

பூரணத்தின் கடை முன்பு இப்போ அந்த இளைஞர்கள் நின்றிருக்கின்றனர்.

ஆர்வமாக பூரணம் அவர்களைப் பார்த்தாள். "தம்பிமார் இப்ப வறுத்தது ; எவ்வளவிற்குப் போட?"

பையுடன் ஆயத்தமானாள் பூரணம்.

"கொஞ்சம் பொறுவாறன் திண்டு பார்த்துத்தானே ! வாங்க வேணும்"

ஒருவன் கை நிறைய கச்சானை அள்ளிக் கொண்டான். எப்படி? என பார்ப்பது போல கடலையை கொறிக்க ஆரம்பித்தான். தொடர்ந்து ஏனையவர்களும் கச்சானை அள்ளிக் கொண்டார்கள்.

"தம்பி ஓராள் சாப்பிட்டுப் பார்த்தாக் காணாதே?" பூரணத்தின் குரல் எரிச்சலுடன் வெளிப்பட்டது.

"அவன்ரை ரேஸ்ற்றும், என்ரை ரேஸ்ற்றும் ஒண்டே. சாப்பிட்டுப் பார்த்துத்தானே வாங்க வேணும் "

முறைப்பாக கூறியபடி திரும்பி மற்றவர்களை பார்த்துக் கண்ணடித்தான் ஒருவன்.

"இளவாளிச்ச கச்சானாக் கிடக்கு ! வேண்டாம் !!" சொல்லியபடி நகர்ந்தவன் மற்றவர்களையும் "வாங்கடா போவம்" என்றான். தலைவனுக்குக் கட்டுப்படுமாற் போல் அவர்கள் நகர்ந்தார்கள்.

"ஐம்பது ரூபா கச்சான் திண்டிருக்குங்கள், ஒரு சதத்திற்கும் வேண்டாமல் போகுதுகள்"

பூரணம் அருகிருந்த மற்றொரு வியாபாரியிடம் முனகிக் கொண்டான்.

"இந்தக் காலத்திலை இப்படியானதுகளுக்கு குறைவில்லை"

பதிலளித்தபடி தான் தப்பித்துக் கொண்டு விட்ட திருப்தியில் அமைதியானார் அவர்.

இப்படி நாலு கூட்டம் வந்தால் முதலும் எனக்கில்லை என்ற சிந்தனை எழ பூரணத்தின் தோடு வாங்கும் திட்டம் நிராசையாகி விடும் போல் அவளுக்குப்பட்டது.

அந்த இளைஞர்கள் தொடர்ந்து நடக்கிறார்கள். எதிரே வருபவர்களிடம் வேண்டுமென்றே இடிபட்டுக் கொள்கிறார்களா? எப்படியும் இடிபட்டுத்தான் ஆக வேண்டுமா? என்பதை பகுத்தறிந்து கொள்ள முடியாத வகையில் அவர்கள் நகர்வு இருந்தது.

'மாறுவம் ரமேஷ் ! இனி வெளிக்கிட்டால் தான் மத்தியானம் சாப்பாட்டிற்கு வீட்டை போய்ச் சேரலாம்".

'பொறு மச்சான் உதிலை ஏதோ சனங்கள் நிற்குதுகள் என்ன விக்கினம் எண்டு பார்ப்பம்" கூறியபடி எட்டிப்பார்த்தான் ரமேஷ்.

'பேனை ! பேனை ! ஒன்று ஐந்து ரூபா' கூவியபடி வியாபாரத்தில் குறியாக இருந்தார் விற்பனையாளர். இளைஞர்கள் பேனைகள் குவிக்கப்பட்டிருந்த மேசையைச் சுற்றிக் கொண்டார்கள். விற்பவர் பேனையை எடுப்பவர்களிடம் காசைப் பெறுவதில் குறிப்பாக இருந்தார். ரமேஷ் இரண்டு பேனைகளை எடுத்துக் கொண்டான். 'எழுதிப்பார் " மற்றவனிடம் ஒன்று கைமாறியது. மற்றையதை பேனைகளிடையே போட்டான். இவ்வாறு ஒவ்வொருவரிடமும் இரண்டு, மூன்று என பேனைகள் சேர்ந்தன.

'இந்தாங்கோ இரண்டு பேனையள் எடுத்தனாங்கள்"

காசைக் கொடுத்து நகர்ந்தவர்கள் அப்பால் சென்று ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். அவர்களுக்கோ தாங்கள் பெரியதொரு சாதனை செய்துவிட்டதான பெருமிதம்.

"மொத்தமாக எத்தனை தேறிச்சுது" ரமேஷ் முழுவதையும் எண்ணிக் கணக்கிட்டுக் கொண்டான். ஐம்பது ரூபா லாபம். ஆரவாரித்தபடியே தங்கள் பொக்கற்றுக்களில் குற்றிக் கொண்டார்கள்.

மக்கள் கூட்டமாக வீடுகளை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார்கள். சைக்கிள்களில் ஏறிய அந்த இளைஞர் கூட்டம் வீதி தங்களுக்கே சொந்தம் என்னுமாற் போல சமாந்தரமாக முன்னேறிக் கொண்டிருந்தனர். பின்னே வந்தவர்கள் முன்னே செல்ல சிரமப்பட்டார்கள்.

"ஏன் தம்பி ஒவ்வொருதராய் போகக் கூடாதே மற்றவையும் போக வேணுமல்லே? "

"விரும்பினாப் பின்னாலை வாரும் இந்தப் பிரசங்கங்களை எல்லாம் திரும்பிப் போய் கோயில் வாசல்லை வையும், நாலு பேர் கேப்பினம்." உரக்கக் கூற ஏக காலத்தில் கூட்டம் அட்டகாசமாய் சிரிக்கிறது. ஒவ்வொருதராய் செல்லுமாறு கூறியவர் அப்பனே ! என்றவாறு தன் பயணத்தை மெதுவாக்கிக் கொண்டார். இச்சம்பவத்தைக் கண்ட பிறர் தமக்குள் பேசிக் கொண்டார்கள்.

"காலம் கெட்டுக் கிடக்குது ஒருத்தரோடையும் ஒண்டும் கதைக்கேலாது"

"மச்சான் சென்றி வருகுது அமைதியாய்ப் போங்கோ"

சோதனைச் சாவடி அண்மிப்பதை நினைவூட்டினான் ஒருவன்.

"இறங்கி வரச் சொல்லி போட் போட்டிருக்கிறது கண்ணுக்குத் தெரியேல்லையோ?"

என்றவாறு அவர்களை முறைத்தவன் இராணுவ வீரனொருவன். அவனுக்கு நன்கு தமிழ் தெரிந்திருக்கிறதென்பது அவனது பேச்சில் புலனாகியது.

எல்லோரும் வரிசையாக நின்றனர்.

"திரும்பி அங்கே இருந்து உருட்டி வாறது"

அவர்கள் திருப்பிச் சென்று பவ்வியமாக சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்தனர்.

"ஐடன்ரி?" என்று கேட்டதும் எல்லோரும் அடையாள அட்டையைக் கொடுத்தார்கள்.

"என்ன பொக்கற்றிலை கலர்கலரா பேனையள்... ஓ! எல்லாரிட்டையும் இருக்கிறதோ?"

இராணுவ வீரனின் கேள்விக்கு பதிலேதுமின்றி முழிபிதுங்க நின்றார்கள். கையை ஓங்கிய அந்த சீருடை தரித்த வீரன் "இஞ்சால வாங்க உங்கள விசாரிக்க வேணும்"
அந்தவீதியின் ஓரமாக வெயிலில் அவர்கள் நிறுத்தப்பட்டார்கள்.

"உது என்ன அடையாளம் காட்டவா பேனைகள்?"
அவன் விறைப்பாகக் கேட்க,

"இல்ல சேர்! எழுதத் தான் வாங்கின்னாங்கள்"

"எழுத இவ்வளவு வேணுமா?" மீண்டும் உறுமினான் அந்த இராணுவ வீரன்.

"ஓம் சேர்"

ரமேஷின் குரல் நடுக்கமாய் ஒலித்தது.

"பெரிய துரை வந்து விசாரிக்க வேணும் அதுவரை நீங்கள் போகேலாது சரி?" என்று பணித்துவிட்டு அவன் அப்பால் நகர்ந்து மீண்டும் வீதியைக் கண்காணிப்பதில் ஈடுபடலானான். ரமேஷ் உள்ளிட்ட இளைஞர் குழாம்

வீதியின் ரேகைகள் முகத்தில் படர வெய்யிலின் மத்தியில் நின்றிருந்தார்கள்.

கோவிலால் திரும்பிச் சென்று கொண்டிருந்தவர்கள் இவர்களைப் பார்த்துச் சென்று கொண்டிருந்தார்கள். வயது முதிர்ந்த இருவர் தங்களுக்குள் கதைத்துக் கொண்டார்கள். "எங்கடை பிள்ளைமார் இந்த அடாவடித் தனத்தாலை படுகிறபாடு."

அருகமைந்த மரத்தில் இருந்த காகமொன்று இவர்களது உரையாடலைக் கேட்டு தன்னை நீதிபதியாக்கிக் கொண்டு சிந்திந்தது போலும்.

இளைஞர்கள் செய்தது அடாவடியா? அல்லது தற்போது நடப்பது அடாவடியா? அல்லது இரண்டுமே அடாவடியா ? அதற்கு தலை சுற்றியிருக்க வேண்டும். நீரில் தோய்த்து தலையை உதறுவது போல ஒரு தரம் தலையை உதறிக் கொண்டது. கா ! கா ! என கத்திவிட்டு எங்காவது உணவு கிடைக்குமா? என்ற அவாவோடு சுற்றும் முற்றும் பார்க்கத் தொடங்கியது.

அமுது - ஜூன் 2002



# தொட்டுக்கடப்பு

மண்டபத்தில் ஓர் ஒழுங்கில் கட்டில்கள், இடையிடையே சிறுமேசை போன்ற அமைப்புடன் கூடிய அலுமாரிகள், மின்விசிறிகள் ஆங்காங்கே சுழன்று கொண்டிருந்தன. ஒட்டுமொத்தத்தில் ஓர் வைத்தியசாலை அமைப்பை நினைவு படுத்தும் சூழல். காலை 9மணி சில கட்டில்கள் காலியாக இருந்தன. சிலர் வராண்டாவில் சத்தமாக கதைத்தவாறு இருந்தனர். தூண்களில் சாய்ந்தவாறு ஒரு சிலர் எதை எதையோ எல்லாம் வாசிப்பதில் மூழ்கி இருந்தனர். ஒருவர் தனது வானொலியில் செய்தி கேட்டுக் கொண்டு இருந்தார். ஆனால் இவர்கள் அனைவரிலும் ஓர் ஒற்றுமை - 'முதுமை" அவர்களை கவ்வி இருந்தது அல்லது கவ்வ ஆரம்பித்து இருந்தது.

மணியோசை ஒன்று எழும்பி அடங்கியது. அவர்களின் செயற்பாடுகளில் மாற்றம். உணவுக் கூடத்தை நோக்கி அவர்களது நடை - ஆனால் அன்னம்மா மட்டும் கட்டிலில் உட்கார்ந்தபடியே ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள். மனவோட்டத்தைப் படிக்க முடியாத சிக்கலான முகபாவம்.

வெண்மையுடையில் கவனிப்பாளர் வருகிறார்.

"என்ன ஆச்சி சாப்பிடப் போகேல்லையே"

குரலுக்கு தலையை நிமிர்த்தி சுதாகரித்துக் கொள்கிறாள் அன்னம்மா.

"தம்பி ! எனக்குப் பசியில்லை"

"நீங்கள் இப்ப வந்து நாலுநாள் தானே போகப்போக பழகிவிடுவியள்"

கூறியபடி கவனிப்பாளர் நகர்கிறார்.

'போக ! போக !" அவர் கூறிய வார்த்தைகள் அன்னம்மாவின் சிந்தனையில் வலம் வந்து அவள் இமையருகே இரு கண்ணீர் துளிகளை தோற்றுவிக்கிறது.

"அனாதை !. கணவர் இல்லை ! பிள்ளைகள் இல்லை !!
பிச்சைச் சம்பளம் எடுக்கிறது !!!

பலத்த சிபார்சுடன் அந்த இல்ல பொறுப்பாளரிடம் கொண்டு வந்து அனுமதி எடுத்து. பொறுப்பித்து அகன்றவர்களைச் சிந்திக்கிறாள். ஏனோ அவள் நான் அனாதையா? தனக்குத் தானே வினாவிக் கொள்கிறாள். மனம் கடிவாளமற்ற குதிரையாய். இளமைக் காலத்தை நோக்கி விரைகிறது.

பனை மரங்களில் உள்ள காவோலைகள் காற்றில் அசைந்து எழுப்பும் 'சர்" 'சர்" எனும் சத்தம். கறுத்தக் கொழும்பான் மாமரத்தில் எங்கே பழுத்தபழம் இருக்கிறது என தங்களுக்குள் ஆரவாரமிட்டபடி தேடலில் ஈடுபட்டிருக்கும் பறைவைகள் கூட்டத்தின் கலப்பு ஒலிகள். ஆட்டுக் கொட்டிலில் தன்னை அவிட்டுவிட்டு விடும்படி குரலெழுப்பியபடி நிற்கும் கிடாயன். தன்

தலைமைத்துவத்தைப் பேணியபடி பேடுகளுடன் இரைதேடி 'கொக்கரக்கோ" என இடையே குரல் கொடுத்தபடி உலா-வரும் வெள்ளடியன் சேவல். இருபது காய்களுக்கு மேலாக குலைகட்டி காய்த்திருக்கும் தென்னை மரங்கள் எல்லாவற்றையும் தழுவியவாறு குளவெட்டையில் இருந்து புறப்பட்டு ஊடுருவி வரும்காற்று. என்ன இனிமை. அன்னத்தின் விழியோரம் கட்டியிருந்த துளிகள் முத்தாக கன்னத்தில் உருண்டு மடியில் வீழ்கிறது. சேலைத் தலைப்பால் கன்னத்தையும், கண்களையும் அழுத்தித் துடைத்துக் கொள்கிறாள். உணவு பெற்றவர்கள் திரும்பி வருகிறார்கள். இன்னமும் பரீட்சயம் ஏற்படாத அவர்கள் கூட தன்னைப்போல் தானோ, என்னவோ, சிந்தனை பெருமூச்சாக வெளியேறுகின்றது.

"ஏன் அக்கா நீங்கள் சாப்பிட வரேல்லையோ?" அன்னத்தின் வயதோடொத்த பெண் அருகே வந்து அமர்கிறாள்.

"இப்ப பசிக்கேல்லை ! மத்தியானம் பாப்பம்"
"என்ன செய்வம் என்னவோ இருக்கு மட்டும் பசிச்சுதோ பசிக்கலையோ நிரப்பத்தானே வேணும்"
கூறியபடி அன்பாக அன்னத்தின் முகத்தைப் பார்க்கிறாள்.

என்னவோ இருக்குமட்டும்; அன்னத்துக்கு ஓர் கூட்டுச் சேர்ந்த உணர்வு. அந்நியமான பெயரே தெரியாத அப்பெண்ணின் அன்பான பேச்சால் ஒரு மனநிறைவு. இதைப்போல சொற்களை கேட்டு எத்தனை நாட்கள் இல்லை மாதங்கள் அன்புக்கு இப்படி ஒரு சக்தியா? நொந்த மனதுக்கு எவ்வளவு ஒத்தடம்.

"நான் என்ன அன்பு செலுத்தாதவளா? யார் என்னில் அன்பு செலுத்தினார்கள்? மனம் வினாவிக் கொண்டது.

"சின்னத்தங்கச்சி கொஞ்சம் பொறுமோனை புட்டவிச்சுப்போட்டன் கறுத்தக்கொழும்பான் சீவித்தாறன் சாப்பிட்டுட்டு பஸ்சுக்கு ஓடனை !"

காலையில் இருந்து பம்பரமாகும் அவளுக்கு அண்ணனின் பிள்ளைகளே தன்னுடையவை போல ஓர் பாசம். அன்புப் பிணைப்பு. கணவனின் பிரிவு.

பிள்ளை இல்லை அண்ணனுடன் ஒட்டிக் கொண்டாள். வயது அவள் உடல் பம்பரமாக செயற்பட இடம் கொடுத்திருந்தது. அப்போது

மாட்டுக்கட்டையில் இருந்து 'அம்மா" என்ற பெரிய கிழவியின் குரல். 'கிழவி" எத்தனையோ கன்றுகள் ஈன்று விட்டபோதிலும் கடைசிவரை வீட்டுக்கு சேவை செய்யும் விசுவாசி கடந்த மாதம் தான் நாகு கண்டு ஒன்றை போட்டிருந்தது. 'அம்மா" பெரிய கிழவியின் குரல் அன்னத்துக்கு இன்னொரு பிள்ளையின் அழைப்பு. மற்ற வேலையின் நினைவூட்டல். புட்டுப்பெட்டியை தட்டுப் பெட்டியால் தட்டி மூடிவிட்டு குசினி படலையை கட்டியவாறு வெளிவருகிறாள். பித்தளை செம்பில் குடத்தில் இருந்து தண்ணீரை மொண்டு ஆள்காட்டி விரலில் கொழுவியவாறு வளவு பின் தட்டியைத் திறந்து கொண்டு மாட்டுக்கட்டையை நோக்கிச் செல்கிறாள். பெரியகிழவி தலையை ஆட்டி ஆமோதிக்கின்றது. செம்பை வைத்துவிட்டு சாணகக் கடகத்தையும் கங்குமட்டையையும் எடுத்துக் கொள்கிறாள். இலாவகமாக கங்குமட்டையால் சாணகத்தை சேகரித்து கடகத்தில் இட்டு சாணகக் கூட்டில் கொண்டு சென்று கொட்டுகிறாள். மாட்டுக்கட்டை துப்பரவாகிவிட்டது. பெரிய கிழவியின் முதுகண்டொன்று கட்டையில் கால் பிணைந்திருக்கும் நிலையில் அன்னத்தை ஆவலுடன் நோக்குகிறது. அதன் கேள்வி எப்போ என்னை அவிழ்பியள் என்னுமாப் போல் இருந்தது. பெரியகிழவி தலையை ஆட்டியது. 'என்னையும் சேர்த்துத்தான்" என்பது போல அதன் பாவனை இருந்தது. புதிய வருகை தன் பலத்தை கட்டையில் காட்டியவறு உன்னிக் கொண்டு நின்றது. கையைத் தட்டி தென்னையில் துடைத்துக் கொண்ட அன்னம் நாகு கண்டை அவிட்டு விடுகிறாள். தாயின் மடியில் தலையால் இடித்து நுரைதள்ள பாலை உறிஞ்ச ஆரம்பிக்கின்றது. கண்டை இழுத்து கட்டையில் மீண்டும் கட்டிய அன்னம் செம்பை கையில் எடுத்து கைகளை நனைத்து கழுவுகிறாள். பெரியகிழவி நிறைந்த மடியை லாவகமாக அன்னத்துக்கு காட்டியபடி நிற்கிறது. மீதி நீரால் மடியை கழுவியபின் குந்தி இருந்து காலிடுக்கில் செம்பை செருகி இரு கைகளாலும் முலைகளை மாறி மாறி பிதுக்குகிறாள். செம்பில் பால் சேருகிறது. ஒருக்கால் எடுத்தால் காணும் கண்டுக்கும் வேணும். சேர்ந்த பாலை வைத்துவிட்டு கண்டை அவிட்டு விடுகிறாள். தாயின் மடியில் பாலை பருக ஆரம்பிக்கிறது கண்டு உள் வளவுக்கை சென்று குசினிப் படலையை அவிட்டு செம்பை வைத்து பக்குவமாக மூடியபின் தலைவாசலில் மச்சாள் இருக்கிறாவா என நோக்குகிறாள். மச்சாள் செல்வம் அண்ணையுடன் ஏதோ சம்பாசணை

"பெரிய தங்கச்சிக்கு வயதாகுது ஆரிட்டையும் கேட்டுப் பார்த்தனீங்களே!"
"நான் என்ன சும்மாவே திரியிறன், தோதாய் வந்தால் தானே !"

எரிச்சலுடன் அவர் பதில் வெளிவருகின்றது.

"சாதகம் பொருந்தினால் காசு பொருந்துதில்லை நான் அள்ளிக் குடுக்க இஞ்சை என்ன கட்டி வைச்சிருக்கிறனே ! விரலுக்கேத்த வீக்கமாய் பார்க்கிறன்."

மச்சாள் ! மச்சாள் ! அன்னத்தின் குரல் அவர்களின் சம்பாசணையை ஊடறுக்கிறது.

"பால் கறந்து போட்டன் காய்ச்சி அண்ணைக்கும் குடுங்கோ"

துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு ஓலைப்பட்டைகளை கையிலெடுத்தவரை

"பாலைக் காய்ச்சித்தாறன் குடிச்சிட்டுப் போங்கோ ! "
என்ற செல்வத்தின் குரல் மீண்டும் திண்ணையில் அமர வைத்தது.

"துரவுக்கை தண்ணி ஊறியிருக்கும் இனி இறைக்க தொடங்கினால் தான் மற்ற மிளகாய் வாய்க்கால்களை ஒப்பேத்தலாம். கெதியாய் கொண்டுவாரும் !"

தேனீரை பருகிய அம்மான் பட்டைகளை கையிலெடுத்தபடி.

"இறைச்சுப் போட்டு வந்து நேற்று ஆஞ்ச பிஞ்சு மிளகாயை சந்தையில குடுக்கவேணும், ஏதும் கறியும் வேண்ட வேணும் !"
கூறிக்கொண்டு நடக்கிறார்.

இல்லத்தின் வராண்டாவால் இரு மூப்புக் கண்டவர்கள் சுவாரசியமாக அளவாளவியபடி நின்றார்கள்.

"இண்டைக்கு மத்தியானம் விசேட சாப்பாடாம்"
"எட! எனக்கு இந்த டயபற்றிக்காலை பாயாசம் குடிக்கேலாது வடையோடை திருப்திப்பட வேண்டியது தான்"

மற்றவர் சூள்கொட்டிக் கொண்டார்.

"எங்களுக்கு கிழமையிலை இரண்டு, மூண்டு நாளைக்குப் பரவாயில்லை !" இண்டைக்கு சாப்பாடு ஞாபகார்த்த சாப்பாடாம் பிள்ளையள் வெளிநாட்டிலை இருந்து காசை அனுப்பியிருக்குதாம். இஞ்சை எங்களுக்கு சாப்பாடு கொடுக்கச்சொல்லி"

முன்னவர் கூறி நிறுத்தினார்.

"அவருக்கும் எங்களைப் போலைத்தான் எங்கையேனும் இல்லத்திலை தான் கடைசிக்காலம் போனதோ. தெரியேல்லை !"

அவரின் குரலில் இருந்தது ஏக்கத் தொனிப்பா? அல்லது விரக்தி வெளிப்பாடா. புரியாதநிலை. உரையாடலைக் கேட்டபடி இருந்த அன்னமும் அருகிலிருந்த மூதாட்டி ஒருவரும் ஒருவரை ஒருவர் ஒரு கணம் நோக்கிக் கொண்டார்கள். அன்னம் காலை ஒருமுறை நீட்டி நிமித்தி உருவிக் கொண்டாள். கொஞ்சநாளா காலுக்கை ஒரு உழைவு. மற்றவள் அருகில் சுவரில் எழுதப்பட்டிருந்த வசனங்களை வாசித்துக்கொண்டாள். அவள் முன்பும் எத்தனைமுறை படித்திருப்பாள்.

"அக்கா இதிலை வரும் வசனத்தைப் பாருங்கோ !"

"எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும் "

"நீ வரும் போது ஒன்றையும் கொண்டுவருவதுமில்லை !
போகும் போது கொண்டு போகப் போவதுமில்லை !! "

எவ்வளவு அர்தமான வசனங்கள் பாருங்கோ ! முகத்தில் மலர்ச்சியுடன் அவள் கூறுவதை அன்னம் செவிமடுக்கிறாள். எவ்வளவு ஆழ்ந்த கருத்துள்ள சொற்கள் ம் ! இதை யார் யோசிக்கிறார்கள். யோசிக்காததாலை எவ்வளவு சச்சரவுகள். எனக்குக்கூட இஞ்சை வந்த பிறகுதான் இப்படி யோசிக்க வைக்குதோ என எண்ணிக் கொண்டாள் அன்னம்.

உழைத்து. உழைத்து இறுதிவரை மாய்ந்த அவளின் அண்ணனும். மச்சாள் செல்வமும் ஒருவர் பின் ஒருவராக உலகை விட்டு சென்று விட்டார்கள். பிள்ளைகளும் கலியாணம் கட்டிவிட்டார்கள். இந்த வீடும் வளவும் சின்னத்தங்கச்சிக்கு சீதனம். சின்னத்தங்கச்சி குடும்பத்தோடேயே ஒண்டிக் கொண்டாள் அன்னம்.

காலம் சுழன்றது இப்போதெல்லாம் அன்னத்துக்கு முன்னைய மாதிரி வேலை செய்ய முடிவதில்லை. ஆனால் அதற்காக அவள் வேலை செய்யாமல் இருக்கவுமில்லை.

"மாமி ஒருக்கா காலமை கிழிச்ச உந்தகிழங்கை வெயிலுக்கை போட்டு விடுங்கோ !"

சின்னத்தங்கச்சி கூறியபடி அப்பால் நகர்கிறாள். வருசத்திலை கிழங்குப்பாத்தி கிண்டும் வேலை வந்தால் இவை போன்றவை வழமையான வேலைகள். ஒடியல் வால் முறித்தல். அவித்த கிழங்கை தும்பு வார்ந்து வெயிலுக்கு போடுதல். காய்ந்த ஒடியலை தரம் பிரித்து முறியாக்குதல். இப்படி தொடரும் வேலைகள். நிலவொளியில் பலமணி நேரம் இவ்வேலைகளை முற்றத்தில் அமர்ந்து செய்வதில் எவ்வளவு பரமசந்தேசம். பதப்படுத்தப்பட்ட ஒடியல் வருசம் பூராவும் தேவைக்கு மிச்சம். அம்மானுக்கு மதியம் சோற்றுடன் ஒடியல்புட்டு முக்கியம். ஒடியல்புட்டை மீன்குழம்புடன் குழைத்து ஒருபிடி பிடிப்பதில் அவருக்கு பரமசந்தோசம். இடையிடையே கீரை மீனை ஒடியல்புட்டுடன் இணைத்து கீரைமீன்புட்டாகவும் சாப்பிடுவார். ஆனால் அம்மான் இன்றில்லை. அன்னையின் நினைவு அன்னத்தின் கண்களில் கண்ணீரை பனிக்க வைத்தன.

கதிரவன் தன் கதிர்களின் வெம்மைத் தாக்கத்தால் மதியமாகி விட்டதை வெளியே உணர்த்திக்கொண்டு இருந்தான். அந்த இல்ல அனைவரும் மதிய உணவுக்கூடத்தை நோக்கிச் சென்று கொண்டு இருந்தனர். அன்னமும் கை. காலலம்பி திருநீறுபூசி உணவுக்கூட்டத்தை நோக்கி நகர்கிறாள். யாவர் முன்பும் நல்ல தலைவாழை இலைகளில் உணவு பரிமாறப்பட்டு இருக்கிறது.

"இண்டைக்கு வசாவிளான் அமரர் பூரணம் அவர்களின் ஞாபகார்த்தமாக மதிய உணவு"

விடுதிப் பொறுப்பாளர் ஓர் அறிவித்தல் போன்று கூடத்தின் முன்னின்று சற்று உரத்து கூறினார். முதியவர் ஒருவர் எழுந்து நின்று தன் இரு கைகளையும் மிகவும் பவ்வியமாக கூப்பி கண்களை மூடி தியானித்து 'தோடுடையசெவியன் தூவண் மதி சூடி' என பாட ஆரம்பித்தார். அனைவரும் அமைதியாக தியானத்தில் பங்கு கொண்டனர். அவர்களின் மனங்கள் பூரணத்தின் ஆத்ம சாந்திக்காக பிராத்தித்து இருக்க வேண்டும். முதியவர் அமர்ந்தார். அனைவரும் ருசித்து உணவை உண்ண ஆரம்பித்தனர். பொறுப்பாளர் புகைப்படக்காரர் ஒருவருடன் வந்தார். யாவரும் உணவு உட்கொள்ளும் காட்சி புகைப்படம் பிடிக்கப்பட்டது.

"இரண்டு கொப்பிதாரும். பூரணத்தின் மகன் சுவிஸிலை அவருக்கு ஒரு கொப்பி அனுப்ப வேணும்"

சிலர் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஏனெனில் அவர்களில் சிலரின் பிள்ளைகள் வெளிநாட்டிலை. இந்தளவுக்காயினும் அவர்கள் செய்வார்களா? தங்களைத் தாங்களே வினாவுவது போன்று தோன்றியது.

அன்னம் கை கழுவி மண்டபத்தே தனது கட்டிலை நோக்கி நகர்கிறாள். தன்னிடம் இருந்த பனையோலை விசிறியை எடுத்து விசிறிக் கொள்கிறாள். என்ன இருந்தாலும் குளவெட்டையிலை இருந்து எந்த நேரமும் வீசும் காற்றுக்கு ஈடாகுமே ! மனம் வினாவுடன் பின்னோக்கியது.

"மாமி மகனை வெளியிலை அனுப்பவேணும் இஞ்சை நாட்டு நிலைமையும் வர வர சரியில்லை எல்லா வளந்த பெடியளும் போய்க்கொண்டு இருக்குதுகள் அதுதான் .... "

இழுத்தபடி அன்னத்தின் முன் சின்னத்தங்கச்சி நின்றிருந்தாள். என்ன கூற வருகிறாள் எனும் வினாவுடன் அவளை ஏறிட்டாள் அன்னம்.

"உங்களிட்டை இருக்கிற நகையளை தந்தியள் எண்டால் சேர்த்து வித்துப்போட்டு ஏஜென்சிக்குக் காசுகட்டலாம்"

சின்னத்தங்கச்சி முடித்தவுடன் அன்னத்திடம் இருந்து பதில் உடன் வந்தது.

"எனக்கேன்பிள்ளை நகையளை எப்ப எண்டு சொல்லு தாறன். என்ரை பேரிலை உள்ள இந்த பனைவடலி காணி பத்துப் பரப்பையும் உங்கடை பேருக்கே எழுதிவிடுறன் உங்களோடைதானே இருக்கிறன் இருக்கவும் போறன் வேறை ஆளுக்கு இதுகளெல்லாம் எப்ப எண்டாலும் உங்களுக்குத் தானே !"

அன்னத்தின் பதிலால் சின்னத்தங்கச்சியின் முகம் மலர்ந்தது. அன்னத்தின் கைகள் ஓலை முறிந்து கிடுகாக்கி விற்ற காசாலும் தனக்கென வளர்த்த கோழிகள் இட்ட முட்டைகள் விற்ற காசும் சிறுகசிறுக சேமித்து உருவாக்கிய நகைகள் அவை. பத்துப் பரப்புக் காணியும் தகப்பன் வழி முதுசம். இன்னுமென்ன அவளுக்கென்று ஒரு சூட்கேஸ் நிரம்பிய உடுபிடவைகள். அவளது செல்வங்கள் ஆடு, மாடுகள் தனது இறுதிக்காலம் அவர்களுடன் என்ற நம்பிக்கை இவையனைத்தும் மனப்பபூர்வமான ஒப்படைப்பு.

காலம் உருண்டது. இப்போதெல்லாம் முன்பு மாதிரியில்லை மாலையானதுமே ஊரடங்கி விடுவதும். இடப்பெயர்வும் வழக்கமாகிவிட்ட விடயங்கள். சண்டை வலுத்தால் சின்னத்தங்கச்சி குடும்பம் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுவிடுவார்கள். சண்டை ஓய திரும்ப வருவார்கள். அன்னம்தான் வீட்டுக்காவல், நாய் மாடுகளுக்கு கவனிப்பாளர். அன்றொருநாள் விடிகாலையிலேயே வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கிவிட்டன. கிராமமே

ஓரிருவரை தவிர இடம்பெயரத் தொடங்கிவிட்டது. இடம்பெயரா அந்த ஓரிருவரில் அன்னமும் ஒருத்தி. படிப்படியாக மிக அண்மையாக ஷெல்கள் வந்து வீழ்ந்து பெரும் ஓசையுடன் வெடிக்கத் தொடங்கின. அன்னமும் செல்லாதிருந்த ஒரு சிலரும் கோவில்லை போயிருப்பம் என வீதி ஓரத்தே இருந்த கோவிலுக்கு செல்கிறார்கள். அங்கும் நிலமை மோசமடையவே அருகமைந்த கிராமத்துக்கு செல்கிறார்கள். அங்கு இரவு கழிகிறது. வந்தவர்கள் கிடைத்த உணவை அன்னத்துடன் பகிர்ந்து கொள்கிறார்கள். மறுநாள் காலை சிறிது சத்தங்கள் ஓய்கின்றன. சின்னத்தங்கச்சியின் இளையவன் அங்கு சைக்கிளில் வருகிறான்.

"ஆச்சி நீங்கள் இஞ்சை இருக்கிறியளே, நல்லகாலம் இனி ஒருதரும் அங்காலை போகேலாதாம் ! அம்மா பார்த்து வரச்சொன்னவ நாங்கள் ஒரு மாமா வீட்டிலை தற்சமயம் இருக்கிறம். கவனமாய் இருங்கோ ! ஐயா இவவையும் பார்த்துக் கொள்ளுங்கோ !"

பதிலுக்குக் காத்திராத இளையவனின் சயிக்கிள் திரும்பிப் பறக்கிறது.

"ஆரை ஆர் பார்க்கிற தெண்டு தெரியாமல் கிடக்குது இனி என்ன நடக்குமோ, எங்கை போறதோ ! அவையோடை நீ போகேலாதே !"
அருகிருந்தவரின் குரல் அன்னத்தை உசுப்புகிறது.

"அவையே ஆற்றையோ வீட்டிலை இருக்கினமாம் அங்கையெண்டாலும் பாதுகாப்பா இருக்கட்டும் நான் தனியன்தானே, சமாளிப்பம்"

முதுமையிலும் அன்னம் விட்டுக்கொடாது பேசினாள். நாட்கள் நகர்கின்றன. முகாம் வாழ்க்கை, வந்த நிவாரணத்தை அருகிருந்தவர்களிடம் கொடுத்து உணவைப்பெற்றுக் கொண்டாள் அன்னம். ஏதோ ஒரு சங்கம் மாற்று உடுப்புக்கள் வழங்கியிருந்தது. மக்களின் வேறு இடங்களை நோக்கிய பயணம். எங்கே செல்கிறார்கள்? எங்கு இது நிற்கும்? திசை தெரியாத பயணம்.

சின்னத்தங்கச்சி பல மைல்களுக்கப்பால் சண்டை இல்லாத இடத்தில் குடும்பத்துடன் இருக்கிறாள். தற்செயலாக ஒரு நாள் சமூகசேவையில் ஈடுபடும் ஊர் இளைஞன் ஒருவன் சின்னத்தங்கச்சியை கண்டுவிட்டான்.

"என்ன சின்னக்கா எங்கை இருக்கிறயள்"
"இதிலை கிட்டத்தான், இடம் பரவாயில்லை. இருக்கிறம்"
"அன்னம் ஆச்சி அங்கை முகாமிலை இருக்கிறா, பாவம் கஸ்ரப்படுறா ஏன் அவவைக் கூட்டி வரேல்லை"

"நாங்களே கஸ்டம் தம்பி பிறகு அவவை எங்கை வைத்திருக்கிறது"

"என்ன எண்டாலும் அவவை அப்பிடி நீங்கள் விட்டிருக்ககூடாது"

"அவவை இஞ்சை இருக்கிற இல்லத்திலை எண்டாலும் சேர்த்துவிட வேணும்"

"யார் தம்பி உதை பொறுப்பெடுத்து செய்யிறது"

"ஏன் நீங்கள் செய்யலாம் தானே !"

வயதுக்கேற்ற தொனி அவன் வார்த்தைகளில் தெறிக்கிறது.

"என்னவோ இவ்வளவு நாளும் வைச்சுப் பார்த்திட்டம். இவ்வளவு தான் எங்களாலை ஏலும்"

சின்னத்தங்கச்சியின் குரல் பேச்சை முடிக்கிறது.

"யார் யாரை பார்த்தது? யாருக்கு யார் உதவியாக இருந்தது" இடம் பெயர்ந்த நாய் ஒன்று உஸ்தஸ்தாயியில் ஊளையிட்டவாறு ஓடுகிறது.

அந்த இளைஞனின் முயற்சி அன்னத்தை இந்த இல்ல அங்கத்தவர் ஆக்கிவிட்டிருந்தது. தோழமையுடன் கூடிய முதுமைத்தோழிகள், கலகலப்பான கவலையில்லா இல்லம், ஆண்டவன் அமைத்துத் தந்த இறுதி இடம். அன்னத்தின் நாசியில் இருந்து மூச்சொன்று கிழம்பி காற்றுடன் கலக்கிறது.

அருகிருந்த முருகன் கோவிலில் இருந்து கந்தசஷ்டி கவச பாடல் விடிகாலை ஐந்துமணியாகிவிட்டதை உணர்த்துகிறது. பறவைகள் தங்கள் தேடல் களுக்காக வழக்கமான சுறுசுறுப்புடன் புறப்படத் தொடங்கியிருந்தன. அன்னம் கட்டிலில் நிமிர்ந்து இருந்து ஒருமுறை கைகளை உயர்த்தி சோம்பல் முறித்துக் கொண்டாள். அவளுக்கு விடிகாலையில் எழுவது என்பது பழக்கமான ஒன்று. இல்லத்தில் சிலரும் இவ்வாறு எழுந்து விடுவார்கள். அவர்களுள் தங்கம்மாக் கிழவியும் ஒருத்தி. பெயருக்கேற்ற தங்கநிறம். முதுமையிலும் மகிழ்ச்சிக் களை கொண்ட மலர்ந்த முகம். சற்றுப் பருத்த சரீரம்.

பிள்ளைகள் வெளியிலையாம் பார்க்க ஆட்களில்லை. இஞ்சை கொண்டுவந்து விட்டிட்டினம். தங்கம்மாக் கிழவியைப் பற்றி அறிந்தவை இவ்வளவுதான். வழமையில் விடிகாலையில் எழுந்து கடன்களை முடித்து நெற்றியில் நீற்றுடன் நிலம்வெளிக்கையில் தன் கட்டிலில் இருந்தவாறு மெல்லிய குரலில் கீர்த்தனங்களைப் பாடும் அழகே அழகு. ஆனால் இன்று ஏனோ தங்கம்மாக்கிழவி படுக்கையிலேயே கிடந்தாள். தங்கம்மாவுக்கு ஏதேனும் உடம்புக்கு ஏலாதோ? அன்னம் தனக்குள் வினவிக் கொண்டாள். நன்றாக வெளிச்சம் பரவிவிட்டது. கவனிப்பாளர் இல்லை. வராண்டாவால் நடந்து வருகிறார்.

"தங்கம்மாச்சி என்னணை இண்டைக்கு உனக்கு விடிஞ்சது தெரியாமல் நல்ல நித்திரை அடிக்கிறாய்"

அன்பாக கூறியபடி கவனிப்பாளர் தங்கம்மாக்கிழவியின் கட்டிலருகே செல்கிறார். அவளிடம் இருந்து எதுவித பதிலும் இல்லை. நிலமையின் அசாதாரணத்தை உணர்ந்து கவனிப்பாளர் உசாரடைகிறார். அவளை தட்டி எழுப்பிப் பார்க்கிறார். அவளின் உயிரற்ற உடல் தானே கிடக்கிறது. செய்தி இல்லத்தே பரவுகிறது. பொறுப்பாளர் வைத்தியருடன் வருகிறார். தங்கம்மாக் கிழவியின் இறப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது. நடக்க வேண்டியதைக் கவனிப்பம் கூறியபடி நகர்கிறார் பொறுப்பாளர்.

தங்கம்மா கிழவியின் உடல் குளிப்பாட்டப்பட்டு வெண்ணுடையில் பிரார்த்தனை மண்டபத்தே கிடத்தப்பட்டு குத்துவிளக்கொன்று தலைமாட்டில் எரிகிறது. முதியவள் ஒருத்தி தானே தொடுத்த மலர்மாலையை உடலுக்கு அணிவிக்கிறாள். கூடியிருந்த பலரின் கண்களில் நீர்குளமாகி இருந்தது.

"தங்கம்மா ஆச்சிக்கு தனது கடைசி ஆசை, தான் போனப்பிறகு தனது உடலை பல்லைக்கழக கல்விக்காக மருத்துவபீடத்துக்கு ஒப்படைக்க வேணும் என்பது"

பொறுப்பாளர் அமைதியைக் குலைத்தவாறு பேசினார்.

"பெயருக்கேற்ற குணமும் தங்கம் தான் தங்கம்மாச்சிக்கு"
ஒருவர் கூறுவது கேட்கிறது.

"பாரொடு விண்ணாய் பரந்த எம்பரனே ! பற்று நான் மற்றிலேன் கண்டாய்"
என முதியவர் ஒருவர் நெஞ்சுருகி பாடுகிறார்.

தங்கம்மாக் கிழவிக்கு விடுதலை. தனித்தே வந்தோம் தனித்தே போகிறோம். என அவளது உடல் அமைதியாக கிடக்கிறது. அன்னத்தின் கண்களில் இருந்து நீர் பெருகி கன்னத்தில் வழிகிறது. தங்கம்மா போயிட்டா ! 'எனது உடல் கொட்டில் இருந்து இந்த உயிர் எப்போது அகலும்' அன்னத்திடம் திரண்ட சிந்தனை ஏக்கமாக நெஞ்சை நிறைக்கிறது. மருத்துவபீட வாகனம் வாசலில் வந்து நிற்கிறது.

---

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய போட்டியில் - 'சிறுகதைக்கான இளைஞர் விருது - 2003'



# ஒளி வழிப்பயணம்

அதிகாலை நான்கு மணி ஆகிவிட்டது என்பதை பிள்ளையார் கோயில் மணி உணர்த்தியது. கண்களை கசக்கியபடியே கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டான் நந்தன். இரவு வெகுநேரம் வரை அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அப்படி, இப்படியென ஆயிரம் கனவுகள். நடந்த நிகழ்ச்சிகள் பற்றியதொரு நீள் பரிசீலனை. இவ்வாறாக தொடர்ந்து மன அலைகளில் சஞ்சரித்த எண்ணங்களை சுமந்து தூக்கத்தைத் தொலைத்திருந்தான். இன்றை நாள் அவனுக்கு மட்டுமல்ல, வீட்டாருக்கும் மகிழ்ச்சியான நாள்.

"சொய்....ய்....ய்...." என்ற சத்தம் அம்மா தோசை சுடுகிறாள் என்பதை தெளிவாக்கியது. எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டு அறைக்கு வெளியே வந்தாள்.

"வழமையாக, ஏழு மணிக்குத்தான் எழும்புறவர். இண்டைக்கு நான்கு மணிக்கே எழும்பிவிட்டார்" என்று சொல்லி தங்கை மீரா நளினமாகச் சிரிக்கிறாள். 'ஓ'! இவளும் என் சந்தோசத்திற்காக பங்கெடுக்க முன்னதாகவே எழுந்து விட்டாள் என்று நினைத்தபோது அவன் நெகிழ்ந்து போனான். இருந்தும் செல்லமாக

"உதில் இருந்து சும்மா விளல் அலம்பாம, போய் படிக்கிறத பார் !"

என பொய்யான கோபத்துடன் வார்த்தையை விட்டெறிந்தான். தொடர்ந்து தன் அலுவல்களை கவனிக்கலானான்.

நந்தன் பற்றி ஆரம்பத்தில் வீட்டாரிடத்தே அதிகமான கவலைகள் இருந்தது என்னவோ உண்மைதான். கால ஓட்டத்தில் நடந்த மாற்றங்கள் அதை தலைகீழாக மாற்றிவிட்டது. சிறுபராயத்திலேயே நந்தன் வீட்டிலிருக்கும் போது அயலவர்களும், உறவினர்களும் அவனது உளநிலையை பாதிக்கும் வகையில் பேசியும், நடந்தும் உள்ளனர். அதே வேளையில் அவனில் அவனையறியாமலே, ஒரு தாழ்வுணர்ச்சி குடிகொண்டிருந்தது. அவர்களையெல்லாம் சந்திக்கவே அவன் அச்சப்பட்டான். தான் ஒரு வேண்டாத பிறவியாக உருப்பெற்று விட்டேனா என்ற எண்ணம் அவனை முழுமையாக தொற்றிக்கொண்டது.

"என்ன கறுமத்துக்கு இந்தப் பிள்ளைக்கு இப்படி வந்ததோ தெரியாது. ஏதும் கோயில் குறைபாடுகளா இருக்கும். இந்த கிரகங்களுக்கு ஒருக்கா அர்ச்சனை செய்யுங்கோ !"

இப்படியாக பலர்தன் தாயிடமும், தந்தையிடமும் கூறக்கேட்டிருக்கிறான்.

"இந்தப் பிள்ளை காலம் பூராவும் உங்களுக்கு சுமையாய்த் தானே இருக்கும் "

இப்படிக் கூறுபவர்களிடமெல்லாம் வெளிப்படுவது அனுதாபமா, அக்கறையா? என பகுத்தறிந்து கொள்ள அன்று அவனால் முடியவில்லை. இப்படியான பேச்சுக்கள் அவனைவிட அவனது வீட்டாரை அதிகமாகவே பாதித்திருந்தது.

எத்தனை நாள் தாய் அவனைக் கட்டிக்கொண்டு அழுதிருப்பாள். அப்போது அவனால் புரிந்து கொள்ள முடியாதிருந்தபோதும் இப்போது 'அவள் ஏன் அழுதாள்' என்பதை புரிந்து கொண்ருக்கிறான். மருத்துவ சிகிச்சை, கோயில் குளமென்று காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தபோது தான் அவர்களது குடும்ப நண்பர் ஒருவர்

"இவனை சும்மா வீட்டிலை வைச்சிருந்து பழுதாக்காம படிக்க விடுங்கோ. அதற்கான வசதியெல்லாம் இப்ப வந்திட்டுது"

கூற தந்தை உடனே சம்மதித்து விட்டார். ஆனால் தாய்க்கு ஏதோ இனம் புரியாத தயக்கம், ஒருவித தவிப்பு. ஆனால் நந்தனின் விடாப்பிடியான போக்கு அவனை கல்வியுலகில் பிரவேசிக்க வழி செய்தது.

படிப்படியாக அவனுக்கிருந்த கூச்ச சுபாவம் அகலத் தொடங்கியது. நண்பர்கள் ஆசிரியர்கள், அறிவுலக சமூகம் என்று அவனது தொடர்புகள் அதிகரித்துக் கொண்டே போனது. பாடசாலை, பின் பல்கலைக்கழகம் என்று அவனது கல்வி வாழ்க்கை தொடர்ந்தது. இப்போது அவனொரு கலைப்பட்டதாரி. அது மட்டுமன்றி இன்று ஆசிரியர் பணியில் இணைந்து கொள்ளப் போகிறான். இது அவனுக்கு மட்டுமல்ல வீட்டிலுள்ளோருக்கும் பெரு மகிழ்ச்சி தருவதாகும்.

கல்வி கற்கும் காலங்களில் கூட சில சமயங்களில் உள ரீதியான துன்பங்களுக் அவன் ஆட்பட்டிருக்கிறான். அந்தச் சமயங்களிலெல்லாம் நல்ல நண்பர்களின் அன்புக் கரங்களும், சில வாண்மை உள்ள ஆசிரியர்களின் அறிவுரைகளும் அவனைத் தூக்கி நிறுத்தியிருக்கின்றன. அத்தகைய நல்ல உள்ளம் படைத்தவர்களில் பலர் இப்போது அவன் அருகில் இல்லை. சிலர் வாழ்க்கைக் கோலத்திலுருந்தே விலக்கப்பட்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் நினைத்தபோது ஓர் இனம் புரியாத உணர்வால் நெஞ்சு கனத்தது. அது தவிர அவனை ஏளனமாகப் பார்த்தவர்களினதும், சுமையெனக் கருதியவர்களும் எண்ண ஓட்டங்கள் மாற்றமடைந்திருக்கின்றன.

"அவனுக்கென்ன, படிச்சிட்டான், வேலையும் கிடைக்கப் போகுது ! இனி ராசா மாதிரி இருக்க வேண்டியதுதானே"

பக்கத்து வீட்டு பீதாம்பரண்ணை கூறக்கேட்டபோது அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவனது தாய், தந்தையரிடம் பற்றியிருந்த நந்தனைப் பற்றிய அர்த்தமற்ற கவலைகளெல்லாம் ஓடி மறைந்தன.

"என்ர பின்னடிக்கு நான் தம்பியோட தான் இருப்பன்" என்று ஒருநாள் சாவதானமாக கதைத்துக் கொண்டிருக்கும்போது தாய் சொன்னாள். அவளது ஆசையை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று அவன் முடிவு கட்டியிருந்தான்.

அண்ணே உன்ர ரவூசரும், சேட்டும் எடுத்து வைச்சுக்கிடக்கு. முதல் மாச சம்பளத்திலை எனக்கொரு சாறி வாங்கித்தர வேணும் சொல்லிப் போட்டன். கூறிய தங்கையை நோக்கி அர்த்தமுள்ள புன்னகையொன்றை உதித்தான் நந்தன்.

"சும்மா இரு பிள்ளை? கொண்ணனை இடைஞ்சல் படுத்தாதை. அவனை எப்பன் அமைதியாய் வெளிக்கிட விடு !"

கூறியவாறே தாய் உணவுப்பொட்டலத்தை அவன் கொண்டு செல்ல இருந்த பையிற்குள் திணிக்கிறாள்.

"அவளுக்கு சும்மா என்னோட ராத்தாட்டி விடியாது. அவளை அவளின்ரை போக்கிலை விடுறது தான் நல்லது" பிணை எடுக்கும் பாணியில் கூறினான் நந்தன்.

"சரி, சரி உதுகளை விட்டுட்டு முதன்நாள் போகேக்கையே அதை விட்டுட்டு போட்டன், இதை விட்டுட்டு போட்டன் என்று பிறகு புலம்பாமல் எல்லாத்தையும் ஒழுங்கா எடுத்து வை !" என்று தாய் கண்டிப்புடன் கூறினாள்.

காலைப் பொழுதுக்கே உரிய பரபரப்பை வீதி உள்வாங்கியிருந்தது. வாகனங்களின் தொடர்ச்சியான இரைச்சலையும், மக்களின் பரபரப்பான நகர்வுகளையும் அவதானித்தவாறே சூரியன் புவிப்பரப்பில் தன் கதிர் கரங்களை படர விட்டிருந்தான்.

நந்தனுக்கு தான் முதன் முதலாக வேலைக்குப் போகிறேன் என்ற ஆனந்தம் ஒரு புறமும், பதட்டம் மறுபுறமுமாக அவனை ஆட்கொண்டிருந்தது. வாசலில் மோட்டார் சைக்கிள் வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது.

"அம்மா ! மாறன் வந்திட்டான் நான் போட்டு வாறன். வாசலில் வந்தது தன் நண்பன் மாறன் தான் என்பதை அவன் ஊகித்திருந்தான். மாறனும் அவனும் பள்ளிப் பராயத்திலிருந்தே ஒன்றாகப் படித்தவர்கள். பல்கலைக்கழகத்திலும் அப்படித்தான். நந்தனின் முன்னேற்றப் பாதையில் வேண்டிய உதவிகளையெல்லாம் மாறன் சிரமத்தைப் பாராது செய்வான். இப்போதும் ஒரே பாடசாலையிலேயே இருவருக்கும் நியமனம் கிடைத்திருக்கின்றது. தன் பையை தோளில் மாட்டியபடி நந்தன் மீண்டும்

"சரியம்மா நான் போட்டு வாறன்" என்றவன் தாயிடமிருந்து பதில் வராததால். "என்னம்மா ! பேசாமல் இருக்கிறியள்" என்றான்

"ஓம் தம்பி போட்டு வா !" என்று தாய் கூறிய போது தான் அவள் அழுதிருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது.


"ஏன் அம்மா இப்ப அழுறியள்?" நந்தன் பரிதாபப்பட, "அது ஆனந்தக் கண்ணீரண்ணா. இதுகள் உனக்கு விளங்காது" தங்கை மீரா கூற தாய் உட்பட அனைவரும் சிரிக்கின்றனர்.

"ஆ....! அண்ணா !! நீ உன்ரை 'வெள்ளைப் பிரம்பை' விட்டுட்டுப் போறாய் உதுக்குத்தான் அப்போதே அம்மா அடிக்கடி சொன்னவா ! உனக்கொரு கண்டறியாத மறதி" செல்லமாகக் கடிந்தவாறே அவனிடம் வெள்ளைப் பிரம்பைக் கொடுக்கிறாள் மீரா.

"சரி தம்பியவை சந்தோஷமாகப் போட்டு வாங்கோ" நன்றியோடு மாறனையும் பார்த்துக் கூறிய தாயின் வார்த்தைகளில் ஒருவித தெளிவும், நம்பிக்கையும் கலந்திருந்தது. நந்தன் நாளைய நம்பிக்கைகளை சுமந்தபடி மாறனின் கையைக் கோர்த்தவாறு வாசலை நோக்கி விரைகிறான்.

---

சமூகசேவை அமைச்சும். கட்புலனற்றோர் நிதியமும் இணைந்து அகில இலங்கை ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாமிடம்



# முகத்திரை

உடலுறுப்பும், மனச்சோர்வும் சேர்ந்து தவராசாவைத் தாக்கியது. அறையிலிருந்த கதிரை ஒன்றில் வந்து அமர்ந்து கொண்டான். இன்றோடு அவனுக்கும் அமுதாவிற்கும் திருமணம் நடந்து ஒரு வருடமாகிறது. நினைத்த போதே அவனுக்கு என்னவோ செய்தது. பக்கத்து அறையிலிருந்து அமுதா ஆடையலங் காரங்களுடன் வெளிப்பட்டாள். அவளைக் கண்டதும் கேட்டான்,

"எங்கையப்பா போறீர்? கோவிலுக்கே?"

"எட நீங்கள் வந்திட்டயளே ! கெதியாய் முகத்தைக் கழுவிக் கொண்டு நீற்றாய் வெளிக்கிட்டு நில்லுங்கோ, இப்ப எல்லோரும் வரப்போகினம்" என்றாள் அதிகாரம் தொனிக்கும் தோரணையில்.



முகமாலை சேகர்

"ஆர் வரப்போகினம்? எதுக்கு? இஞ்சை என்ன கலியாண வீடே நடக்கப்போகுது"

எரிச்சலுடன் கேட்டான் அவன்.

"என்ன பேக் கேள்வியெல்லாம் கேட்கிறியள்? எங்களுக்கு கலியாணம் முடிஞ்சு ஒரு வருஷம் அல்லே ஆச்சு. அதைக் கொண்டாடத்தான் ஆட்களெல்லாம் வருகினம்"

"ஆரைக் கேட்டு இந்த ஏற்பாடெல்லாம் செய்தனீர்"

"ஆரைக் கேட்க வேணும் எண்டு கேட்கிறன். சும்மா விழல் அலம்பிக் கொண்டிருக்காமல் வெளிக்கிடுங்கோ, நான் பரமேஸ் அக்கா வீட்டிலை செய்யக் கொடுத்த லட்டை எடுத்துக் கொண்டு வாறன்"

கூறிவிட்டு வெடுக்கென்று அறையை விட்டு வெளியேறினாள்.

தவராசா அப்படியே சமைந்து போய் உட்கார்ந்து விட்டான். கடந்த காலத்தில் நடந்த சம்பவங்கள் சில அவனை அரவணைத்துக் கொண்டன.

இப்படித்தான் ஒரு மாலை நேரம். அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கு வந்த தவராசா கை, கால் அலம்பிக் கொண்டு மாமரத்தின் கீழ் கிடந்த சாய்மானக் கதிரையில் வந்து சாய்ந்து கொண்டான்.

"தவம் தேத்தண்ணி பனங்கட்டியோடையோ? அல்லது சீனி போட்டோ?" அவனின் தாய் கேட்டாள்.

"பனங்கட்டியோடை கொண்டு வாருங்கோ" சொல்லிவிட்டு கதிரைச் சட்டத்தினுள் செருகப்பட்டிருந்த பத்திரிகையை எடுத்துப் புரட்டினான்.

"இந்தா மோனை தண்ணியைக் குடிச்சிட்டு பேப்பரைப் பார்"

அவனிடம் தேநீரை நீட்டிவிட்டு அவனருகில் மணலில் உட்கார்ந்து கொண்டாள் தாய்.

"அம்மா ஆற்ரையேன் காகிதம் வந்ததே"

"காகிதம் ஒண்டும் வரேல்லை. உவர் இராமலிங்கண்ணை வந்தவர்" தாய் தொடர்ந்தாள்.

"நல்லதொரு குறிப்புக் கிடக்காம் தங்கச்சிக்கு பாப்பமே எண்டு கேட்டார்"

"அதுக்கென்னம்மா, பார்க்கலாம்தானே குறிப்பை வேண்டித் தாங்கோவன்"

"ஆனால்....."

"என்னம்மா ஆனால் எண்டு இழுக்கிறியள்" அவன் பரபரப்புடன் கேட்டான்.

"நல்ல உத்தியோகம், அதாலை சீதனம் கொஞ்சம் கூட கேப்பினமாம்"

"எவ்வளவு எதிர்பார்க்கினமாம்?"

ஆதங்கத்துடன் கேட்டான் அவன்.

"வீடு, வளவோடை ஒரு அஞ்சு லட்சம் கேட்கினமாம். அதுதான் நாங்கள் கையை விட்டுட்டம்" தொடந்தாள் தாய்.

"நீ எடுக்கிற மூவாயிரம் ரூபா சம்பளத்தோடை கொப்பான்ரை பென்ஷன் தானே எங்களுக்கு ! இதை வைச்சுக் கொண்டு அஞ்சு லட்சத்தை என்ன வழியெண்டு குடுக்கிறது"

"எதுக்கும் அப்பாவோடை உதைப்பற்றிக் கதை. எனக்கு குசினிக்கை வேலை கிடக்குது " என்று கூறிவிட்டு இடத்திலிருந்து எழுந்து சென்றாள்.

இரவு உணவுக்குப் பின் தந்தையோடு இவ் விடயம் பற்றி பிரஸ்தாபித்தான்.

"அப்பா எனக்கொரு நல்ல யோசனை தெரியுது. சரியெண்டால் சொல்லுங்கோ! வெளிநாட்டுக்குப் போவமெண்டு பார்க்கிறன். அப்பதான் எங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு வருமெண்டு நினைக்கிறன்"

"உது சரிவராது. நீ கண்ணுக்கெட்டாத தூரத்திலிருக்க எங்களுக்கேதும் ஒண்டண்டாலும் ஆர் ஆறுதல்" கூறும்போதே அவர் குரல் கம்மியது.

"இதுக்கு மேலே எனக்கு ஒண்டும் தெரியாதப்பா ! இனி நீங்கள் தான் நல்ல முடிவாக எடுக்க வேணும்"

"எனக்கொரு யோசனை வருகுது தம்பி"

எப்படி? என்ற ஆர்வத்தோடு தந்தையின் முகத்தை நோக்கினான் தவராசா.

"நீ ஒரு கலியாணத்தைச் செய்யன்"

"நான் கலியாணம் செய்தால் தங்கச்சிமார்"

"உன்ரை சீதனத்தை வேண்டி தங்கச்சிமாருக்கு குடுக்கலாம்தானே ?"

அவர் நிறுத்துமுன்பே குறுக்கிட்டான் தவராசா.

"எங்கடை கஷ்டத்துக்காக இன்னொருவரை வருத்துவது நல்லதில்லையப்பா"

"இதிலை என்ன தம்பி வருத்தக்கிடக்குது. வசதியான இடத்திலை செய்தால் போச்சுது."

"உப்பிடி நீ கதைச்சிக் கொண்டு இருந்தியெண்டால் காலாகாலத்திலை இந்த மூன்று குமருகளும் கரைசேராது எண்டதை நினைவில் வைத்துக் கொள்"

"அப்பா என்னை என்ன செய்யச் சொல்லுறியள்"

"பேசாமல் நான் சொல்லுற மாதிரி ஒரு கலியாணத்தை கட்டு. அப்பதான் நாங்கள் தலையெடுக்கலாம்"

தீர்மானமாக ஒலித்தது தந்தையின் குரல்.

"என்னண்டான செய்யுங்கோ உது எங்குதான் போய் முடியுதோ தெரியாது"

"நீ ஒண்டுக்கும் யோசியாதை. எல்லாம் நல்லபடி நடக்கும்" கூறிவிட்டு மகிழ்ச்சியுடன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தார் தந்தை.

இது நடந்து சுமார் ஒரு மாதமிருக்கும். ஒரு நாள் அவன் அவசரமாக அலுவலகத்துக்குப் புறப்பட்டுக் கொண்டு இருந்தான். தவராசா சாப்பாட்டுப் பார்சலை அவனது அலுவலக பையில் திணித்தபடி நாளைக்கு நீ லீவுபோட்டுட்டு வா என்றாள் தாய்.

"என்னத்துக்கம்மா?"

அவன் புரிந்தும் புரியாத மன உணர்வோடு கேட்டான்.

"நாளைக்கு எங்கள் அம்மன் கோவில் திருவிழாவல்லோ, அந்தப் பிள்ளையும் வரும், நீ வந்தாற்தானே பார்க்கலாம். வீட்டிலே போய்ப் பார்க்கிறது அவ்வளவு சரியில்லை கண்டியோ, தற்சேல் பிடிக்கேல்லை எண்டாலும் என்னண்டு நேரிலை சொல்லுறது. அதுதான் கோவில்லை வைச்சுப் பார்ப்பமெண்டு, பொம்பிளையை கூட்டி வரச்சொன்னனாங்கள். நல்ல குடும்பம், சீதனம், ஆதனமெல்லாம் நேற்றுத்தான் கதைச்சு முடிச்சது"

தாயின் பேச்சை மேலும் வளர விடாது.

"அம்மா நான் பார்க்க வேணும் எண்டு அவசியமில்லை. நீங்கள் பார்த்தால் சரி" என்றான் அவன்.

"இல்லை தம்பி நீ நாளைக்கு லீவு போட்டுட்டு வா" வீட்டின் உள்ளிருந்து தந்தையின் கட்டளை அவனது வாயைக் கட்டிப் போட்டது.

மறுநாட் காலை மாறு கரை வேட்டியோடு அவன் கோவிலுக்குப் புறப்பட்டான். அவனது பெற்றோருக்கு தங்கைமாரும் அவனுக்கு முன்னதாகவே கோயிலுக்கு சென்று விட்டனர். தனியாகவே அவன் ஆலயத்தை நோக்கி நடக்கலானான்.

இரவு பெய்த மழையினால் நிலம் குளித்து பூரித்திருந்தது. ஆங்காங்கே தேங்கி நின்ற நீரில் சூரியனின் கதிர்க்கரங்கள் பட்டுத் தெறித்தன. தவராசாவின் உடலை மெல்லிய குளிர்காற்று வருடி விலகிக் கொண்டிருந்தது. வீதி இருமருங்கிலுமுள்ள பூவரசின் இலைகளில் இருந்து நீர்த்துளிகள் இன்னமும் சிந்திக் கொண்டிருந்தன.

'டாங்' 'டாங்' என்று அம்மன் கோவில் மணி ஒலிக்கும் ஓசை கேட்டது. அவனையும் அறியாது கரம் ஒரு தரம் கூப்பிக் கொண்டது. 'அம்மாளாச்சி' என்று வாய் முணுமுணுத்துக் கொண்டது. கோயில் சுற்றுப்பிரகாரம் எல்லாம் சனக் கூட்டத்தால் நிறைந்திருந்தது. பூசையும் ஆரம்பித்து விட்டது.

"தம்பி தம்பி" என யாரோ அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பினான். அங்கே இராமலிங்கம் நின்று கொண்டிருந்தார்.

"உம்மைத்தான் பார்த்துக் கொண்டு நிண்டனானப்பா. அம்மா எல்லாரும் கோயிலுக்கைதான் நிக்கினம். வாரும் பூசை தொடங்கிவிட்டது." கூறிவிட்டு முன்னே நடக்க ஆரம்பித்தார்.

அவன் எதுவும் பேசாது மௌனமாக நடந்து கோயிலுக்குள் நுழைந்தான். பூசை முடிவுற்றபின் இராமலிங்கமும் அவனும் கோயிலை வலம் வந்தார்கள். கோயிலின் பிரதான வாயிலின் வலப்புறத்தே பெண்கள் கூட்டம் ஒன்று சலசலத்துக் கொண்டு நின்றது. அவர்களைக் கடந்து சென்றதும் இராமலிங்கம் நின்றார். அவன் அவரைக் கடந்து செல்ல முற்பட்டான். ஆனால் அவர் சைகை காட்டி நிறுத்தினார்.

"தவம் அங்கை பாரும் மெல்லிய மஞ்சள் நிற சாறி கட்டின பிள்ளைக்குப் பக்கத்திலை நீலச் சாறியோடை ஒரு பொம்பிளை நிற்கிறா பாரும். அவதான் உம்மடை ஆள்" கவனமாய் பாரும். பிறகு என்னைக் குறை சொல்லக் கூடாது

தனது அறிமுக உரையை சுருக்கமாக முடித்து வைத்தார் இராமலிங்கம். அந்தப் பெண் கூட்டம் இவர்களைச் சட்டை செய்யவில்லை. அதனால் அவன் அமுதாவைக் கண்களால் அளந்தான். அவனிலும் சற்றுக் குறைவான உயரம், கறுப்புத்தான் என்றாலும் அதிலும் ஒரு அழகு இருக்கத்தான் செய்தது. ஒரு முறை அவள் தவராசாவை பார்ப்பது போலிருந்தது. அவன் பார்வையை வேறு திசைக்குத் திருப்பிக் கொண்டான்.

"தம்பி பேந்து ஆறுதலாய் பாரும். இப்ப வீட்டை போவம் வாரும்"

இராமலிங்கம் அவனின் தோளைத் தட்டினான். திடுக்குற்று திரும்பியவன்,

"ஓமோம் போவம் நான் நினைச்சன் நீங்கள் கும்பிட்டுக் கொண்டு நிற்கிறியளாக்குமெண்டு" என்று கூறி சமாளித்துக் கொண்டு அவருடன் கூட நடந்தான்.

கோவிலில் இருந்து வெளியேறி சனநெரிசல் குறைந்த இடத்தை இருவரும் அடைந்தனர். இராமலிங்கம் தொடர்ந்தார்.

"பெடிச்சியை பிடிச்சிருக்கோ"

"அம்மா, அப்பாவைக்குப் பிடிச்சால் சரி"

"நல்ல குடும்பம், தேப்பன் பெரிய கடை முதலாளி. உவளின்ரை இரண்டு தமயன்மாரும் வெளியிலை இருக்கினம் ! சீதனத்தைப் பற்றி சொல்லவும் வேணுமே, அப்பா உதைப்பற்றி உமக்கு ஏதேனும் சொன்னவரே"

அவன் மௌனமாக இருப்பதைக் கண்டு அவரே தொடர்ந்தார்.

"பன்னிரண்டு லட்சம் காசாய் தாறதுக்கு ஓமண்டு இருக்கினம். அதைவிட மூன்று லட்சம் பெறுமதியான சாமான்கள், இதோடை வீடு, வளவு தோட்டம் துரவோடை ஒரு பதினைந்து ஏக்கர் காணி எல்லாம் தருவினம். அவை என்ரை தூரத்தினாக்கள்தான். பக்கத்து ஊரிலைதான் அவவின்ரை சித்திக்காறி இருக்கிறா, கோயிலுக்கு வாறதுக்கெண்டு நேற்றே அங்கு வந்து நிண்டதாம்"

என்ன நினைத்தாரோ திடீரென்று பேசுவதை நிறுத்தி மௌனமாக நடந்தார். கலியாணச் சந்தையில் அவன் விலை பேசப்பட்டிருக்கிறான் என்பது புரிந்தது. அவன் மனதுள் குற்றம் செய்ததைப் போல் ஒரு குறுகுறுப்பு. இவ்வளவு அதிகமாக நான் சீதனம் வாங்கலாமா? என்ற கேள்வி அவனைக் குடைந்து கொண்டு இருந்தது. மனம் அதற்கு விடை தேட முற்பட்டது.

இப்படி சீதனம் வாங்காட்டில் தங்கச்சிமாரை கரை சேர்க்க இயலாது; வெளிநாடு போகவும் அப்பா, அம்மாவுக்கு விருப்பமில்லை. கடனும் வேண்ட இயலாது. அப்ப என்ன செய்யலாம். சீதனத்தை வாங்கத்தான் வேணும். தனக்குள்ளே குழம்பி முடிவில் தன்னையே தேற்றிக் கொண்டான்.

அன்றிலிருந்து வீடு கலியாணக் களை கட்டியது. திருமண ஏற்பாடுகள் தடல்புடலாக நடந்தேறியது. அவனின் பெற்றோரின் மகிழ்ச்சிக்கு எல்லையேது அவர்கள் இன்புறுவதற்கு இரண்டு காரணங்களிருந்தன. ஒன்று அவனுக்கு திருமணம் நடைபெறவிருப்பது, மற்றையது அவர்களை அழுத்திய பெரும் பிரச்சினைக்கு அவனது திருமணம் மூலம் வழி ஏற்படுத்தப்பட்டு விட்டது.

திருமணத்தின் பின் எப்படியோ அப்படி இப்படியென காலம் ஓடிற்று. ஒரு நாள் மாலை அவனும், அமுதாவும் வீட்டின் முன் கூடத்திலிருந்து பேசிக்கொண்டு இருந்தனர். அப்போது அமுதா,

"என்ரை சீதனக் காசுதானே மச்சாள் மாரை வாழ வைக்கப் போகுது" என்றாள்.

இதை எதிர்பாராதவனாக திடுக்குற்று அவளை முறைத்துப் பார்த்தான் தவராசா.

அவள் ஒரு ஏளனச் சிரிப்புடன் தொடர்ந்தாள்.

"என்ரை அப்பாவும், சகோதரங்களும் கஷ்டப்பட்டு சேர்த்த காசு ! நீங்கள் எதுவித கஷ்டமுமில்லாமல் அதை எடுக்கு உங்கட தங்கச்சிமாருக்கு குடுத்திருக்கிறியள்"

"அமுதா நிற்பாட்டு" அவனது குரல் கோபத்தால் படபடத்தது.

"கதைக்கேக்கை யாரோடை என்ன கதைக்கிறம் எண்டதை யோசிச்சு கதைக்க வேணும். ஏதோ உங்கடை குடும்பத்தோடை அள்ளிக் கொண்டு போன மாதிரி எல்லோ கதைக்கிறியள். ஊருலகத்திலை நடக்காததையே நாங்கள் செய்து போட்டம். எங்கடை சமுதாயத்திலை காலம் காலமாய் எத்தினை நடந்திருக்கு. இதை நீர் பெரிசுபடுத்தி வீணான பிரச்சினைகளை ஏற்படுத்துவது நல்லதில்லையெண்டு நினைக்கிறன். உமக்கு இந்தக் கலியாணத்திலை உடன்பாடு இல்லையெண்டால் முன்னுக்கே சொல்லியிருக்கலாம் தானே ! எல்லாம் முடிஞ்சபிறகு இப்ப இதுகளைப்பற்றி கதைத்து என்ன பிரயோசனம்."

அவன் ஆத்திரத்தோடு பேசி முடித்து விட்டு அந்த இடத்திலிருந்து எழுந்து சென்றான்.

இப்படியாக பல நாட்கள் அவர்கள் இருவருக்கும் இடையில் சூடான சொற் போர் நிகழ்ந்திருக்கின்றது. அமுதா அவனது குடும்பத்தைப் பற்றி தரக்குறைவாக பேசியிருக்கிறாள். அவளது பெற்றோரும், சகோதரிகளும் பல தடவை இந்த வீட்டிற்கு வந்து போயிருக்கிறார்கள். அமுதா அவர்களை சரியாக உபசரித்தது கூடக் கிடையாது. ஆனால் அவன் அந்தக் குறை வெளிப்படாமல் இருக்கும் அளவிற்கு நடந்து கொண்டிருக்கிறான். அவளது பிரச்சினைகளை பெற்றோருக்கோ, சகோதரிகளுக்கோ கூறி அவர்களையும் குழப்பத்தில் ஆழ்த்த அவன் விரும்பவில்லை. அவன் மகிழ்ச்சியாக இருப்பதாகவே இதுவரை காலமும் காட்டி வந்திருக்கிறான். அமுதாவின் பெற்றோருக்கு அவன் கௌரவ மாப்பிள்ளை. எப்போதாவது வீட்டில் நிகழும் கொண்டாட்டங்களின் போது மட்டும் அவன் போலியான முறையில் முன்நிறுத்தப்பட்டான். அமுதா கூட அவ்வேளைகளில் அளவுக்கதிகமாக அவனுக்கு மரியாதை செய்வாள். உறவினர்களினதும், நண்பர்களினதும் மேலோட்டமான பார்வையில், அவன் மகிழ்ச்சியாக இருப்பதாகவே தோன்றும். ஆனால் இந்த வாழ்வியலின் பின்னணியில் எத்தனை வேதனையின் தழும்புகள். அவன் அத்தனையையும் மறைத்துக் கொண்டுதான் வாழ்ந்து கொண்டு இருக்கிறான். ஒருமுறை அவனது ஒரு சகோதரி கூட,

"உனக்கென்னண்ணை குறை, மச்சாள் உன்னை நல்ல வடிவா கவனிக்கிறா. உன்ரை வீட்டை வந்து பார்க்கிறவை எல்லாரும் மச்சாளைப் பற்றியும், உன்னைப் பற்றியும் வெளியே நல்ல மாதிரி கதைக்கினம்"

அவள் சொல்லிச் சிரித்த போது, அவனாலும் பதிலுக்கு சிரிக்காமல் இருக்க முடியவில்லை. சகோதரிகளுக்கு வரன்கள் தேடும் படலம் ஓரளவுக்கு பூர்த்தியாக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. எப்படியோ, அவனது குடும்பத்தின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டியவன் அவன்தான். அதன்போது ஏற்படும் சவால்களையும் சச்சரவுகளையும் சமாளித்துத் தான் ஆக வேண்டும் என்ற மனத்திண்மை அவனிடம் இருக்கின்றது. ஆனால் அவன் சில வேளைகளில் எதிர்மறையாகக் கூட சிந்திப்பதுண்டு. அதாவது இந்த வாழ்க்கைச் சூழலில் இருந்து எப்படியாவது விடுதலை பெற்று விடவேண்டும் என்று எண்ணுவான். அப்போது எல்லாம் சமுதாயம் என்ற வேலிப்படை அவனை சூழ்ந்திருப்பதை அவன் உணர்ந்திருக்கிறான்.

நான் ஏதாவது ஏடகூடமாகச் செய்தால், என்னைப்பற்றி என்ரை பெற்றோரைப் பற்றியெல்லாம் இந்த சமூகம் பல மாதிரி கதைக்கும். சும்மா கிடந்த வாய்க்கு அவல் கிடைத்த மாதிரி என்ரை குடும்ப விடயம் மாறிப்போகும். இந்நிலை ஏற்படக் கூடாதெண்டால் போலியாகத்தானும் வாழத்தான் வேணும். தனக்குள்ளே சமாதானம் செய்து கொள்வான் தவராசா.

அமுதாவோடு அவன் பல தடவை பல விடயங்களில் விட்டுக் கொடுத்து நடந்திருக்கிறான். ஏனோ அவள் அவற்றையெல்லாம் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. அவன் தொடர்பான விடயத்தில் ஏதோவொரு வகையில் அவள் குற்றம் கண்டு கொண்டே இருந்தாள். இது அவளது சுபாவமாகக் கூட இருக்கலாம். எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியாகவா இருக்கிறார்கள். இல்லையே ! ஆனால் அவர்கள் தமக்கு வேண்டப்பட்டவர்களுக்காக தம்மை மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லது வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதே வெளிப்படை. தவராசா அமுதாவின் சிந்தனைகளுக்கேற்ப தன்னைச் சில விடயங்களில் மாற்றிக் கொண்டிருக்கிறான். இப்படியாக அமுதாவும் தனக்கேற்ற முறையில் சில விடயங்களில் விட்டுக் கொடுத்து நடக்க வேண்டுமென்று அவன் எதிர்பார்த்தான். ஆனால் அது பலிக்கவில்லை. இந்த எதிர்பார்ப்பின் எச்சங்களாக மிஞ்சி நின்றவை முரண்பாடுகளும், மனக்கசப்புகளும் மட்டுமே. அவன் தனது இல்லற வாழ்க்கையை ஆரம்பித்த போது பலவிதமான கனவுகள் நெஞ்சத்தை நிறைத்திருந்தன. அவையெல்லாம் கானல் நீராகி விடுமா? இப்படி எண்ணமிட்ட போதே அவனது கண்கள் பனித்தன.

இப்படியான எண்ண அலைகள் அவனது இதயப்பரப்பில் மோதிக் கொண்டிருந்த போது யாரோ அவனது தோளைப் பற்றி உலுக்கியதை உணர்ந்தான். அருகில் அமுதா நின்று கொண்டு இருந்தாள். தணிந்த குரலில் ஆனால் அழுத்தமாக,

"என்ன உதிலை தியானத்திலேயே இருக்கிறியள்" அங்கை எல்லோரும் வந்திட்டினம். பெரியப்பா இப்ப உங்களை எங்கையெண்டு கேட்டவர். நான் நினைச்சன் நீங்கள் இப்ப வெளிக்கிட்டு இருப்பியளாக்குமெண்டு, நீங்கள் என்னடாவெண்டால் இதிலை குந்திக் கொண்டு இருக்கிறியள். கெதியா போய் முகத்தை கழுவிக் கொண்டு வெளிக்கிட்டுக் கொண்டு வாங்கோ, எங்களைப்பற்றி மற்றவை என்ன நினைப்பினம்"

அதிகாரம் தொனிக்கும் குரலில் துரிதப்படுத்தினாள்.

அவன் கதிரையை விட்டு எழுந்து மௌனமாக கிணற்றடிப் பக்கம் சென்றான். சிறிது நேரத்தில் முகத்தை அலசி உடைமாற்றிக் கொண்டு கண்ணாடிக்கு முன் வந்து நின்றான். அவனது முகம் வாடியிருந்தது. வெகு சிரமப்பட்டு புன்னகையை வரவழைத்து உதட்டில் பொருத்திக் கொண்டான். வீட்டின் முன்றலில் பலரது பேச்சுக்குரல் கேட்டது. பலர் உள்ளே வருவதும் முன்கூடத்திற்குச் செல்வதுமாக இருந்தார்கள். தவராசா தன்னை முற்றிலும் தயார் படுத்திக் கொண்டு அந்த அறையை விட்டு வெளியே வந்தான்.

அமுதா பம்பரமாக இயங்கிக் கொண்டு இருந்தாள்.

" அத்தானுக்கு ஒவ்பிசிலை இருந்து வரைக்கை சரியான தலையிடி. இவ்வளவு நேரமும் படுத்திருந்தவர் இப்பதான் குளிசை போட்டுட்டு எழும்பி வாறார்."

என்று அவனை நோக்கியபடி அவள் கூற அவனும் அதை அங்கீகரிப்பது போல் அதிகமாகப் புன்னகைத்தபடி கூடத்தில் காலியாகக் கிடந்த கதிரையொன்றில் வந்து அமர்ந்தான்.

அமுதாவின் உறவினர்கள், நண்பர்கள் என அந்தக் கூடம் பலரால் நிறைந்திருந்தது.


அப்போது வீட்டின் கேற் திறபடும் சத்தம் கேட்டது. அவனது பெற்றோரும் சகோதரிகளும் மகிழ்ச்சி பொங்க வந்தார்கள்.

சோகத்தின் சாயலைப் போர்த்தியிருந்த அவனது முகம் திடீரென போலி முகத்திரையை அணிந்து கொண்டது.

அவர்களை வரவேற்பதற்காக மன நிறைவுடன் அவன் எழுந்து நின்றான்.

---

தினகரன் வாரமலர் 12 ஏப்ரல் 98



# இருளில்

அந்திமகள் இரவை வரவேற்கும் அவசரத்தில் ஒப்பனைகளை தழுவி உருமாறிக் கொண்டிருந்தாள். பிக்காசோ கிறுக்கிய ஓவியங்களால் நிஜஜாலங்கள் வான வெளியில் பரந்து கிடந்தன. உலர்த்தப்பட்ட புகையிலையின் நெடி காற்றில் கலந்திருந்தது. சோளகத்தின் சுகத்தை அனுபவித்தபடியே பறவைகள் கூடுகளை நோக்கி பறந்து கொண்டிருந்தன. வீட்டின் முன்பாகத்தில் தினசரியைப் படித்தவாறு அமர்ந்திருந்தாள் பார்வதி.

வாசலில் யாரோ வந்து நிற்பது போன்ற பிரமை. நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களை அவளாலேயே நம்ப முடியவில்லை. அவன்தான் !

அவனேதான் நின்றிருந்தான். சில கணப்பொழுதுகள் உறைந்து போனாள். பின்தன்னைச் சுதாகரித்துக்கொண்டு 'தம்பி !' என பலமாய் கத்த எண்ணி ஏதோ ஒன்று தடுக்க அமைதியாய் வாசலுக்கு ஓடி அவனை அணைத்துக் கொண்டாள். அவனது கரத்தைப் பற்றி விம்மியவளை அவனும் அணைத்துக் கொண்டு உள்ளே நுழைகிறான் தேவன் .

"ஏன் அம்மா இப்ப அழுகிறாய்? ஒண்டுக்கும் யோசியாதேங்கோ ! நான் நல்ல மாதிரித் தான் இருக்கிறன்."

சமாதானமாக தாயை சமாளிக்க முனைந்தான். ஆனால் எளிதில் பலனேதும் ஏற்படும் போல் தெரியவில்லை. அயல் வீட்டைக் கருத்திக் கொண்டோ என்னவோ, அவளது அழுகை கூட அடக்கமாக இருந்தது.

அந்த நாற்சதுர வீட்டின் உள்முற்றத்தில் கிட்டினர் படுக்கையாய்க் கிடந்தார். இடையிடையே எழுந்து கொண்டிருந்த அவரின் பலவீனமான இருமல் சத்தம் அவரின் இருப்பை இனங்காட்டிக் கொண்டிருந்தது.

"அம்மா நான் வந்திருக்கிற விசயத்தை அப்பாவிற்கு பாதகமில்லாதபடி சொல்லுங்கோ ! நான் பின்னால வாறன்"

தாயிடம் தணிந்த குரலில் கூறிவிட்டு, வீட்டின் வெளிப்புறம் ஒருதரம் முழுதளாவிய நிலையில் பார்வையை ஓடவிட்டான். இதற்குள் கிட்டினரின் இருமல் ஒலி இடைவெளியின்றி தொடர்ந்து கேட்கிறது.

"தம்பி ! தம்பி !!" அவரின் குரல் ஏக்கத்துடன் ஒலித்தது.

தாமதிப்பது நல்லதன்று என்பதை புரிந்து கொண்டவன் உடனடியாகவே வீட்டினுள் நுழைகிறான். தான் அழுது ஆர்ப்பாட்டம் செய்தால் கணவன் பாதிக்கப்படுவான் என்ற எண்ணத்தில் பார்வதி தன் அழுகையை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு பேசினாள்.

"தம்பி நீ எங்களை விட்டுப் போன கையோட அப்பாவும் படுக்கேல போட்டார்."

"எல்லாம் எனக்குத் தெரியுமம்மா, நான் நேரில் வந்து பார்க்கிற நிலமேல இருக்கேல்ல. இப்பகூட எப்படியெண்டாலும் பார்க்க வேண்டும் என்றுதான் வந்தனான்" என்று அவன் கூற,

"எப்படி தம்பி சுகமாய் இருக்கிறியே" கிட்டினர் கேட்கும் போதே நா தழுதழுத்தது.

"நான் இருக்கிறனப்பா ! நீங்கள் என்னைப் பற்றி யோசிச்சு வீணா மனதை அலட்டிக் கொள்ளாதேங்கோ"

அவன் நிதானமாக பேசினான். பார்வதி அவசர அவசரமாக தேநீர் தயாரித்துக் கொண்டு வந்தாள். தேவன் அதை ஆவலோடு வாங்கிப் பருகினான்.

"என்ர கையாலை நீ சாப்பிட்டு எவ்வளவு காலம்" என்று கூறி தாய் விம்ம, சைகை காட்டி அடக்கினான் அவன்.

"தங்கச்சியவை எல்லாம் எங்கை போட்டினம்" அவனது ஆவல் கேள்வியாய் கிளம்பியது. தந்தை சிரமப்பட்டு பதிலளித்தார்.

மூத்தவளை ஒருமாதிரி அங்க இஞ்சையெண்டு கடன்வாங்கி பேரம்பலத்தாற்ரை பெடியனுக்கு கட்டி வைச்சிட்டம். அவள் இப்ப லண்டனிலை இருக்கிறாள். இளையவள் எங்களோடைதான் இருக்கிறாள். இப்ப வெளியிலை யாரோ சிநேகிதிட்ட போட்டாளாம்"

அவர்கூற தான் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து நடுவிவிட்டோமா என்று தனக்குள் எண்ணிக் கொண்டான். இருந்தும், தன் கடமை பரந்த அளவில் எங்கோ ஒரு இடத்தில் நிறைவு செய்யப்படுகின்றதென்ற திருப்தி மனதில் எழ அமைதியானான்.

"நாங்கள் வாங்கின கடனையெல்லாம் மருமோன் நல்ல பெடியனண்ட படியால அடைச்சுப் போட்டான். இவள் இளையவள் அமராவிற்கும் எங்கையாவது பார்த்து செய்து விட்டால், நான் கொஞ்சம் நிம்மதியாய் கண்ணை மூடலாம்." என்று தொடர்ந்து இடைக்கிடையே இருமியபடி தந்தை கூறி முடித்தார்.

"அப்பா இப்ப அமைதியாய் இருங்கோ ! நான் முன்னுக்கிருந்து அம்மாவோடை கதைச்சுப் போட்டு வாறன்." என்று தந்தையிருந்த இடத்தில் இருந்து மெதுவாக விலகினான் தேவன்.

அவனைத் தொடர்ந்து வந்த தாயிடம் .
"அம்மா என்னைப்பற்றி யாரும் விசாரிக்கிறவையே" அவனது கேள்வியில் பதட்டமும், கவலையும் கலப்படமாய் இருந்தது.

"கொஞ்சநாளா கேட்டவை தம்பி. நீ இந்தியாவுக்கு போகேக்க காணாமல் போட்டாயென்று சமாளித்துப் போட்டம்"

இதை சொல்வதற்கு அவள் சிரமப்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் அவள் வார்த்தைகளை மென்று விழுங்கியபடி பேசினாள்.

"அது தான் நல்லதம்மா. நீங்கள் பிரச்சனை இல்லாமல் இஞ்ச இருக்கிறதுக்கு அப்படி சொன்னதுதான் சரி" என்று கூறி தாயிற்கு ஏற்பட்ட சங்கடத்தைத் தணித்தான்.

முன்பெல்லாம் தேவன் பாடசாலை விட்டு வந்த பிற்பாடு அவனது புத்தகப் பையை பரிசோதிப்பதில் பார்வதிக்கு அலாதிப் பிரியம். ஆனால் இன்று அவன் கையில் வைத்திருந்த பொதியை பிரித்துப் பார்க்கும் தைரியம் அவளுக்கு இல்லை. அவள் அவனது முகத்தைக் கூர்ந்து பார்க்கிறாள். கடந்த காலங்களில் அவன் நடந்து வந்த பாதைகளின் சுவடுகள் அவன் முகத்தில் அப்பிக்கிடந்தன. இருவரும் ஏதேதோ பேசினார்கள்.

"அம்மா பசிக்குது சாப்பிட ஏதாவது கிடந்தா தாவன்" என்று தாயிடம் உரிமையுடன் கேட்டு வாங்கிச் சாப்பிட்டான் தேவன். இன்று மின் வெட்டு என்பதால் விளக்கை ஏற்றினாள் பார்வதி.

"தம்பி கவனமாய் திரிராசா இதுக்கு மேல எதுவும் எனக்கு சொல்ல தெரியேல்ல" ஒரு சராசரி தாயின் ஆர்த்மாத்தமான ஈடுபாடு அவளது வார்த்தையில் தெரிந்தது. தொடர்ந்தும்

"நாங்கள் கோயிலுக்கு போற நேரமெல்லாம் உன்னை நினைச்சுத்தான் கும்பிடுறது. ஏதோ கடவுள்தான்......... " என்றாள் தாய்.

"அம்மா என்னைப் பற்றி யோசிச்சு நீங்களும் வருத்தக்காரியானால் எங்கட குடும்பத்தை யார் கொண்டிழுக்கிறது?" அதால நீங்கள் தைரியமாய் இருங்கோ ! நான் எங்கையெண்டாலும் சமாளிச்சுக் கொள்ளுவன்". தாயை தேற்றினான். சில நிமிடங்கள் மௌனத்துடனேயே கரைந்தன..

"அதுசரி தம்பி இப்ப சாப்பாடெல்லாம் என்ன மாதிரி." அக்கறையோட விசாரித்தாள் தாய்.

"முந்தியம்மா வெள்ளிக்கிழமை விரதம் இருக்கச் சொன்னா அடம் பிடிப்பன். இப்ப நான் அப்படியில்லை. நல்லா விரதமிருக்க பழகி விட்டன் என்று விட்டுச் சிரித்தான்."

இதற்கு மேலும் இங்கு தாமதிப்பது நல்லதல்ல என்பதைப் புரிந்து கொண்ட தேவன்,

"அம்மா போட்டு வாறன் ! இனியும் சந்தர்ப்பம் கிடைத்தால் வாறன் ! என்றவன் தொடர்ந்தும்" அதுசரி தங்கச்சி அமரா எங்கையம்மா. இன்னும் வரேல்ல" உருக்கத்தோடு கேட்டான்.

"யாரோ சிநேகிதியின்ரை பிறந்த தினமென்று போனவள்டா, நாளைக்குத் தான் வருவள். இண்டைக் கொண்டு பார்த்து......." மேலும் தாய் கூறப் போவதை புரிந்து கொண்டவனாய்,

"பரவாயில்லையம்மா, அமராவைக் காணாமல் போறது எனக்கும் வருத்தமாத்தான் கிடக்குது. இனிமேலும் சந்தர்ப்பம் கிடைக்கேக்கை பார்ப்பம். நான்வந்து போனதாய் சொல்லுங்கோ அவளுக்கு" கூறும் போதே அவனது குரல் ஏனோ சிக்கிக் கொண்டது. தொடர்ந்தவன்,

"அம்மா சிலதுகளுக்காக நாங்கள் சிலதுகளை தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கும்" என்றவாறு உள்ளே சென்று தந்தையின் கரத்தை

அழுத்தமாய் பற்றி அவரிடம் விடைபெற முனைகிறான். அவர் சிரமப்பட்டு சிரமப்பட்டு எழுந்து உட்கார்ந்து .

"தம்பி எனக்குக் கொள்ளிவைக்க வருவியே? " என்று கண்ணீர் விட்டு அழுதார்

"அப்பா இனி நான் இஞ்சைதான் இருப்பேன்; அடிக்கடி வருவேன் !" என்று சமாளித்துக் கொண்டு, "நீங்கள் நல்லா சாப்பிட்டு உடம்பை கவனித்துக் கொள்ளுங்கோ !, நான் போட்டு வாறனப்பா !!" என்றவாறு தன் கரத்தை விடுவித்துக் கொண்டு வாசலுக்கு வந்தான் தேவன். தந்தையைத் திரும்பிப் பார்க்கும் அளவிற்கு அவனுக்கு அப்போது மனோதைரியம் வரவில்லை. அவன் ஆட்பட்டிருக்கும் மனச்சஞ்சலங்கள் எதையும் வெளிக்காட்டி விடக் கூடாதே என்பதில் அவன் குறியாக இருந்தான்.

அவன் வாசலைத்தாண்டி வீதிக்கு வந்தபோது,

"வீதியில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஏதாவது...... பார்த்தவாறு தாய் நின்றிருந்தாள். வீதி அடங்கியிருந்தது. ஆனால் அவர்களது இதயங்களில் ஆயிரம் ஆயிரமாய் எண்ணங்களின் பயணிப்புக்கள்.

இப்போது, அந்தி தன் முகத்தை முற்றாக இழந்திருந்தது.

"அம்மா, வாறன், " என்று கூறி வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினான். அவனது உருவம் கண்ணிலிருந்து மறையும் வரை சிலையாய் நின்றிருந்த அவளின் கண்களில் நீர் திரையிட்டது. இருந்தாலும் நெஞ்சின் ஓர் மூலையில் ஏதோ ஒரு நம்பிக்கை கீற்று. கணவனின் இருமல் ஒலி கடமையை நினைவுறுத்த வீட்டினுள்ளே நுழைகின்றாள்.

தாயகம் சஞ்சிகை



# உதிராத பூ

கருமுகிற் கூட்டம் ஒன்று வானத்தை மூடியிருந்தது. குளிர்ந்த காற்று மெல்லியதாக வீசியது. மழை இன்னும் சற்று நேரத்துக்குள் பெய்யத் தொடங்கி விடும் என்று நளினா தனக்குள் கணக்குப் போட்டுக் கொண்டாள். அதே சமயம் தான் குடையை கொணராதது ஞாபகத்துக்கு வந்தது. முகிற்கூட்டத்தின் கனத்த போர்வையைப் போல நளினாவின் இதயச் சுவரிலும் சோகப் படலம் அப்பிக்கிடந்தது. எச்சிலை சிரமப்பட்டு விழுங்கிக் கொண்டாள். எத்தனை நாளுக்குத்தான் அவள் தன்னை ஒறுத்துவாழ முடியும்.

தனக்காக இல்லாவிடினும் வயிற்றில் வளரும் பிள்ளைக்காகவாவது அவள் வாழத்தான் வேண்டும். அவளுக்கு

தலைசுற்றுவது போலிருந்தது. நடையின் வேகத்தை நிதானப்படுத்திக் கொண்டாள். எத்தனை நாளுக்குத்தான் அவள் அலைந்து கொண்டிருக்க முடியும். நம்பிக்கைகள் கருகிப் போய்விடவில்லை. இதனாலேதான் இப்படியாகத் தினமும் முக்கியமான சிலரைக்கண்டு, தன் பிரச்சினைக்கு முடிவுகட்டச் சென்றுவந்து கொண்டிருக்கிறாள்.

"நாசமாய்ப் போவார்."

என்று அவளது வாய் முணுமுணுத்தது. கடந்த ஆறுமாதங்களாக அலைந்து திரிந்தும் இன்னமும் அவளுக்குப் பலன் கிடைக்கவில்லை.

வீதியில் பாடசாலை சீருடைகள் பல வீட்டை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றன. கூட்டம் கூட்டமாக அவர்கள் செல்லும் அழகை நளினாவால் ஒரு கணம் இரசிக்க முடிந்தது. மறுகணம் ஏதோ ஒரு பாரம் அவளது நெஞ்சை அழுத்தியது.

"என்ன பிள்ளை ஏதும் தகவல் கிடைச்சுதே"

எதிரில் வந்துகொண்டிருந்த கந்தசாமியண்ணை கேட்டார். இல்லை என்ற தலையசைப்புடன் தொடர்ந்து நடந்தாள். பொங்கி வந்த அழுகையை அடக்கச் சிரமப்பட வேண்டியிருந்தது. ஊராரின் அனுதாபம் கலந்த வார்த்தைகள் ஏனோ அவளை அதிகமாகப் பாதித்தன.

"கலியாணம் கட்டி ஒரு வருஷமாகேல்ல அதுக்குள்ளை இப்படியாய்ப் போச்சு !"

சிலர் அவள் காதுபட பேசியிருக்கிறார்கள். அச்சமயங்களில் தனக்குள் தானே குமுறுவாள்.

வழமையான பதிலாகத்தான் இருக்கும் என்கிற நம்பிக்கையிலோ என்னவோ. அவள் கணவருடன் வேலைபார்க்கும் முருகேசன் அறிமுகத்தை மட்டும் அடையாளப்படுத்திவிட்டு விலகிச் செல்கிறாள்.

தூரத்தே வரும் போதே தாய் வீட்டுவாசலில் நின்றிருப்பதை நளினா கண்டு கொண்டாள். அம்மாவுக்கு என்னத்தை நான் சொல்வேன். தனக்குள் தானே

முனகிக் கொண்டாள். மௌனமாக வீட்டினுள் நுழைய முயன்றவளை இடை மறித்து "பிள்ளை என்ன பாடு" என்றது தாயின் குரல்.

"வாறகிழமை எப்படியும் அறிஞ்சு சொல்லுகினமாம்" கூறும் போதே அவள் படபடத்தாள்.

"இப்படி எத்தனை காலம் தான் போகப் போகிறதோ" தாயின் குரல் கூறி பெருமூச்சுடன் நின்றது.

"என்னம்மா செய்யிறது எங்கட காலம் இப்படியாப் போச்சுது, என்னை மாதிரி எத்தனை பேர் அங்குவந்து போகினம் தெரியுமே? பிள்ளைகளைத் தேடும் பெற்றோர், கணவன்மாரைத் தேடும் மனைவிகள், தந்தையரைத் தேடும் பிள்ளைகள் என எத்தனை ரகமான ஆட்கள் அங்கு வருகினம். அவையோடை கொஞ்சம் கதைச்சாலே மனப்பாரம் கொஞ்சம் குறைஞ்ச மாதிரி இருக்கிதம்மா"

நளினாவின் கூற்றுக்குப் பதிலேதும் பேசாது மௌனமாக அடுக்களைக்குள் நுழைந்தாள் தாய்.

கைப்பையை மேசை மீது விட்டெறிந்து விட்டு எதிரில் இருந்த நாற்காலியில் நளினா அமர்ந்து கொண்டாள். அன்றைய நாளை இப்போது நினைத்த போதும் அவளுக்கு என்னவோ செய்து கொண்டு வந்தது. நினைவுகள் நெஞ்சில் வட்டமடிக்க ஆரம்பித்தன.

அன்று ஒரு சனிக்கிழமை. கரிய இருள் போர்வைக்குள் ஊர் உறங்கிக் கொண்டிருந்தது. இராப்பட்சிகளின் சத்தம்கூட இல்லை. நளினாவுக்கு ஏனோ தூக்கம் வரவில்லை. பற்பல நினைவுகள் சூழப்படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள் தனக்கு பிறக்கப் போகும் குழந்தை பற்றிய கற்பனைகள் திளைக்க வைத்துக் கொண்டிருந்தன.

"இனிமேல் நீ நல்ல குளிர்ச்சியான சத்தான சாப்பாடு சாப்பிட வேணும்" என்று சொல்லிச் சுவையான உண்டி வகைகளையும் பலவகைப் பழங்களையும் அன்று மாலையே வாங்கி வந்திருந்தான். கணவனின் கரிசனையை எண்ணி எண்ணி நெகிழ்ந்து போனாள்.

தூரத்தில் நாய் குரைக்கும் சத்தம் கேட்கிறது. நாய்குரைப்புக்கள் தற்போது வழமையாகிவிட்டதொன்றாகையால் அது பற்றி அவள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. இரவின் அமைதியைக் குலைத்த நாய்க் குரைப்புகளூடே வாகனமொன்றின் இரைச்சல் துல்லியமாகக் கேட்டது. நெருங்கிய வாகன ஓசை தங்கள் வீட்டு வாசலில் வந்து ஓய்ந்தது. நளினியின் அடிவயிற்றில் புளியை கரைத்தாற் போன்ற ஒரு உணர்வு.

"இஞ்சேருங்கோ ஆமிக்காரன் வாறாங்கள் எழும்புங்கோ"

பரபரப்புடன் அருகில் படுத்துறங்கிக் கொண்டிருந்த கணவனைத் தட்டி எழுப்பினாள். அவன் எழுந்திருக்கவும் பூட்சுகள் வளவினுள் பிரவேசிக்கவும் சரியாக இருந்தது.

"நீ பயப்படாதே: சும்மா இப்படித்தான் வருவாங்கள். நாங்கள் என்ன செய்தனாங்கள்? ஒண்டுமில்லைத் தானே ! பேசாமல் இரு"

என்று கூறிய அவன் அவளது கரத்தை ஆதரவுடன் பற்றிக்கொண்டான். அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. சமகாலத்தே வீட்டின் முன்கதவும், பின் கதவும் சப்பாத்துக் கால்களால் தட்டப்பட்டன.

"கதவைத் திறவாதேங்கோ" நாக்குளறக் கூறினாள் நளினி.

"கதவைத் திறவுங்க ! நாம ஒண்ணும் பண்ணமாட்டம்."

கரகரத்த கொச்சத்தமிழ் குரலில் வெளியேயிருந்து ஒருகுரல் வருகிறது. அதில் தொனித்த அதிகாரம் புலனாகிறது. கதவைத் திறந்தான் சிவநாதன். நளினி செயலற்றுப் போய்ச் சிலையாய்க் கட்டிலில் அமர்ந்து கொண்டாள். கதவு திறந்ததும் ஆயுத தாங்கிகள் நாலைந்துபேர் உள்ளே நுழைந்தனர். வீட்டில் சல்லடை போட்டு எதையோ தேடினர். கேள்விமேல் கேள்வி சிவநாதனைத் தாக்கின. நளினா எழுந்து சென்று அவனருகில் நின்று கொண்டாள்.

"நீங்கள் அவங்களுக்கு உதவி செய்தீங்க ! இல்லையா?"

அவர்களிலொருவனின் குரல் இறுக்கமாக வந்தது.

"இல்லை சேர்"

நளினாவின் குரல் முந்திரிக் கொட்டைபோல் முந்திவந்து அவசரமாக தெறித்தது. சிவநாதன் அவளை அமைதியாக இருக்குமாறு ஜாடை செய்தான். நளினா மௌனமானாள். தொடர்ச்சியான கேள்விகள் நுணுக்கமான தேடல்களால் இருமணி நேரம் கரைந்தது. ஈற்றில் அவர்கள் வீட்டைப் விட்டுப் புறப்பட்டார்கள். தனியாக அல்ல ! சிவநாதனையும் கூட்டிக் கொண்டு.

"சேர் அவரை விடுங்கோ ! நாங்கள் பொதுமக்கள். இவர் ஒரு ஆசிரியர்." தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தோடு தமிழையும் கலந்து விளங்கவைக்க முற்பட்டாள். பலனேதுமில்லை.

"நீங்க ஒண்ணுக்கும் பயப்பட வேண்டாம். காலேல விடுவம்"

அவர்களில் ஒருவன் கூறினான். அவள் எவ்வளவு மன்றாடியும் பிரயோசனமில்லை. அவள் முன்னே கணவனை அழைத்து ஜீப்பில் ஏற்றினார்கள். அப்போது அவன் ஓரக்கண்ணால் அவளைப் பார்த்தது தெரிந்தது. அப்பார்வையில் ஆயிரம் அர்த்தங்களும், கனவுகளும் புதையுண்டிருப்பதை நளினாவால் உணரமுடிந்தது. பயத்தால் அவ்ன் முகம் வெளிறிப் போயிருப்பதை நளினா கவனிக்கத் தவறவில்லை. அவளால் கதறுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்.

தொடர்ந்து வந்த விடியல்கள் அவளுக்குத் துயரங்களை வலியுறுத்தின. ஆனாலும், அவள் துவண்டு போய் விடவில்லை. இராணுவ முகாமுக்கும் வீட்டுக்குமாக மாறிமாறி அலைந்தாள். தற்போதும் அலைந்து கொண்டிருக்கிறாள். சாதகமான பதில் இல்லை. ஆனால் நம்பிக்கைத் தீபம் அவள் மனதில் அணையவில்லை. அதனால் தான் இன்னும் கணவனைத் தேடுகிறாள். அரசியல் தலைவர்கள் என்று தம்மை முத்திரை குத்திக் கொண்டவர்களை காணத்தான் இன்றைய தினமும் சென்று வந்திருக்கின்றாள். கண்களில் இருந்து சிலநீர்த் துளிகள் உருண்டு விழுந்தன.

"பிள்ளை இப்படி இருந்து என்ன செய்யப் போறாய்?"

தேநீர்க் குவளையை அவள் முன்னால வைத்தாள் தாய். நளினாவிடம் இருந்து ஒரு பெருமூச்சு மட்டும் விடையாக வருகின்றது.

"நல்லாய் சாப்பிட வேணுமல்லே, வயிற்றிலை ஒரு உயிர் இருக்கின்றதை மறந்து விடாத பிள்ளை"

தாயின் குரல் தழுதழுத்தது.

"ஓம் அம்மா நான் மறக்கேல்ல !"

நளினாவின் பதில் சுருக்கமாக வெளி வந்தது. தாயின் பரிதவிப்பை அவளால் நன்கு உணர்ந்து கொண்டாள். தன்கணவன் தனக்குக் கிடைத்து விடுவான் என்ற நம்பிக்கை மிகத் தீவிரமாக இருந்தது. "என் கணவர் எனக்குக் கிடைப்பார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கம்மா ! நாங்கள் எப்படியெண்டாலும் அவரைத் தேடிக்கண்டு பிடித்துவிடலாம்"

நளினியின் உறுதியான தொனி தாயை அதிசயிக்க வைத்தது. பாரதியின் "மனதில் உறுதி வேண்டும்" எங்கிருந்தோ காற்றில் மிதந்துவந்து, துல்லியமாகக் காதுகளில் விழுகிறது. நளினா புது உணர்வு பெற்றவளாகப் புன்னகைக்கிறாள்.

நான் உளவியல் சஞ்சிகை - ஆடி புரட்டாதி 99



# அரங்கேறும் அனர்த்தங்கள்

நேரம் நடுநிசியைத் தாண்டிக் கொண்டு இருந்தது. கரிய இருளின் முற்றுகைக்குள் சூழல் அகப்பட்டுக் கிடந்தது. எங்கும் ஒரே அமைதி. மார்கழி மாத குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. அந் நேரத்தில் சடுதியான விழிப்பு வந்த எனக்கு அறையில் பலர் போர்வைக்குள் உறக்கத்தில் ஆழ்ந்திருந்ததை அனுமானிக்கக் கூடியதாக இருந்தது. இரவின் அமைதியை குலைக்க பாரிய வெடியோசை கேட்கிறது. துணுக்குற்று படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொள்கிறேன். எனது உடல் மெலிதாக நடுக்கத்துடன் அவ் ஊதலிலும் வியர்க்கிறது. உடல் நடுக்கம் குளிர்காற்று பட்டதால்கூட இருக்கலாம். சுதாகரித்துக் கொள்கிறேன். அங்கு வாழப் பழகிக் கொண்டவர்களுக்கு



முகமாலை சேகர்

இந்த வெடியோசை எல்லாம் சர்வசாதாரணமான நிகழ்வுகள். நாங்கள் மரணத்துடன் கைகுலுக்கிக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள். என்னையும் அறியாது பெரு மூச்சொன்று புறப்பட்டு காற்றில் கலந்தது. இந்த அறையில் அனைவரும் இப்போது தூக்கம் நீங்கி படுக்கையில் இருப்பதும், புரளுவதுமாக இருந்தார்கள்.

"என்ன செல் அடிக்கிறாங்கள் போல"

தூக்கக் கலக்கத்தில் ஒருவனின் குரல்.

"ஓம் போல கிடக்குது. ஒரு சத்தம் தான் கேட்டுது" என்று கூறிவிட்டு மீண்டும் படுத்துக்கொள்ள முயன்றேன். அப்போது நான்கைந்து செல்கள் அருகில் விழுந்து வெடிக்கின்றன. அறையில் இருந்த அனைவருமே துள்ளி எழுந்து கொண்டோம்.

"பங்கருக்கு போவோம் வாங்கோ"

கண்ணனின் குரலைத் தொடர்ந்து அனைவரும் பங்கர் இருந்த இடத்தை நோக்கி விரைகிறோம். பங்கருக்கு செல்வது புதிய விடயமல்லாததால் எம்மால் அந்த இடத்தை இருளிலும் குறிப்பாக அடைய முடிந்தது.

எங்கள் எல்லோரிலும் வயதாலும், அனுபவத்தாலும் மூத்த குமார் அண்ணனின் குரல் உறுதியாக வினாவாக வருகிறது.

"எல்லோரும் வந்திட்டியளோ?"

"இவன் சசியை எழுப்பிக் கொண்டு வந்தனீங்களா?"

சசியின் குரலே "ஓம் ! ஓம் ! நான் இங்கே இருக்கிறன்"

அடிப்பாகத்தே இருந்து மெலிதாக ஒலித்தது.
சசிதான் எங்கள் எல்லோரிலும் இளையவன். அதனால் விஷேச கவனம் அவ்வளவே !

"பயப்படாதேங்கோ ! அப்படி சாகிறது எண்டாலும் நான் செத்த பிறகுதான் நீங்கள்"

குமார் அண்ணன் சொல்லிவிட்டு சிரிக்கிறான். இந்த இக்கட்டிலும் இவரால் எப்படி சிரிக்க முடிகின்றது. அப்போது என்னால் விடைகாண முடியவில்லை. ஆனால் நெகிழ்ந்து போனேன்.

சிறிது நேர இடைவெளிக்குப் பின், மீண்டும் எறிகணைகள் சுற்றாடல்களில் விழுந்து வெடிக்கின்றன. கூடவே துப்பாக்கி வெடியோசைகளும் கேட்கிறது.

"கடவுளே இது என்ன சோதனை! ஏன் இந்த அவல வாழ்க்கை"
ராஜன் நடுங்கும் குரலில் புலம்பினான்

"எடே நீ ஒரு ஆம்பிளைப் பிள்ளையல்லே ! என்னத்துக்கு பயந்து சாகிறாய் !" கண்ணன் அதட்டினான்.

"இதுக்குப் பெயர் பயம் இல்லேடா உனக்கு விளங்காது" அவன் அப்படிக் கூறியதை என்னாலும் விளங்கிக்கொள்ள முடியவில்லை. துப்பாக்கி வேட்டொலிகளும், குண்டுகளின் வெடியோசையும் வர வர அதிகமாகிக் கொண்டிருந்தன. வீதியில் சனங்களின் நடமாட்டம் அதிகமாகிக் கொண்டிருப்பதை பதுங்கு குழிக்குள் இருந்தே என்னால் உணரமுடிந்தது.

"கொஞ்ச நேரம் இருங்கோ பக்கத்து வீட்டை போட்டு வாறன்."
குமார் அண்ணை செல்வது தெரிந்தது. சென்ற வேகத்தில் திரும்பவும் வந்தார்.

"பக்கத்து வீட்டுக்காரர்கள் வெளிக்கிடப் போகினமாம், இனி ஷெல் அடி கூடும் போல கிடக்குது. பாமாவின் பெடியன் ஷெல் அடியிலை சிதறிப் போனானாம்.

குமாரண்ணை ஒரே மூச்சில் கூறி முடித்தார். என்ன செய்வது என்று தெரியாத நிலை எமக்கு.

"நாங்கள் கொஞ்சம் பார்த்து வெளிக்கிடுவம். இப்ப வெளிக்கிடுறது சரியான ஆபத்து"

சரவணன் கூறவும் குமார் அண்ணையின் மௌனம் அதை ஏற்றுக் கொண்டதைக் காட்டியது.

வீதியில் மக்களின் கலவரக் குரல்களும் பரபரப்பும் ஓய்ந்த மாதிரியாக இல்லை. துவிச்சக்கர வண்டிகள் ஓயாது மணிகளை ஒலித்தபடி வீதியில் விரைவது புலனாகிறது. இடையிடையே வெடியோசைகள், மக்களின் கூக்குரல்கள் கேட்டுக் கொண்டு இருந்தது. எனக்கு என்ன செய்வது என்று தெரியாத ஒரு மந்த நிலை பதுங்குழிக்குள் இருப்பதைத் தவிர அப்போதைக்கு வேறு மார்க்கமில்லை. வீட்டாரை ஒரு கணம் நினைத்துக் கொண்டேன். பெரும்பாலும் அவர்கள் அங்கே தூங்கிக் கொண்டு இருப்பார்கள். சிலவேளை அவர்களும் என்னைப் போல் இருக்கக்கூடாது ! இந்த மரணபயம் அவர்களையும் அரவணைக்கக்கூடாது.

யாரோ ஒரு வயது முதிர்ந்த பெண்மணி,

"ஐயோ ! நாசமாய் போவார் என்ரை பெடியனை சாக்கொண்டு போட்டாங்களே " புலம்பலுடன் ஒப்பாரியாக குரல் கொடுத்து வீதியில் நகர்கிறாள்.
இதயத்தை யாரோ குண்டூசியால் குத்தி அசைப்பது போல் எனக்குள் ஓர் உணர்வு.

"பாவம் அந்த மனிசி " யாரோ தெரியாது" எம்மோடு இருந்தவர்களில் ஒருவன் தன்னை மறந்து கூறினான்.

"யார் யாரை பாவம் பார்க்கிறது. இண்டைக்கு இந்தப் பிரதேசத்தில் நாங்கள் எல்லாருமே ஒரே தளத்தில் தான் நிற்கிறோம். அதாவது மரணத்தின் பிடியில் அகப்பட்டு இருக்கிறம்."

கண்ணனின் கூற்று அங்கு இருந்தவர்கள் யாவரையும் சிந்திக்க வைத்திருக்க வேண்டும்.

"உண்மை தான்!"

இரு குரல்கள் சேர ஒலித்தன. சிறிது நேரத்துக்கு வெடிச்சத்தங்கள் ஓய்ந்திருந்தன.

"இப்ப கொஞ்சம் குறைஞ்சிட்டுது போல கிடக்குது. பார்த்து வெளிக்கிடுவம் "

இடம் பெயரும் எண்ணத்தை ஒற்றி வைத்தார் குமார் அண்ணை. ஆனால். எங்கள் நினைப்புக்கள் நிலைக்கவில்லை மீண்டும் எறிகனைகள் வந்து வீழ்ந்து வெடித்தன. பயங்கர வெடியோசை அதிர்வுகள் எங்களின் குரலொலிகளும் அச்சத்தங்களில் அமுங்கின. ஷெல்களுக்கு மட்டும் கேட்கும் சக்தி இருந்தால் நாம் கதறிய ஒலி கேட்டு வெடிக்காமல் இருந்திருக்கும். இதற்கு மேலும் நாம் தாமதிப்பது நல்லதல்ல என்பது அனைவரின் உணர்வு. கையில் அகப்பட்டவற்றை எடுத்துக்கொண்டு வீதியில் இறங்கினோம்.

மார்கழி மாதத்தின் மகத்தான விடியல் ஒன்று பிரசுரமாகிக் கொண்டிருந்தது. மார்கழி விடிகாலையில் திருவெம்பாவைக்கு பதிலாக மக்களின் அவலம் தோய்ந்த குரலொலிகளே கேட்டுக் கொண்டு இருந்தன. எத்தனை நாட்களுக்குத் தான் இந்த அனர்த்தங்கள் அரங்கேறப் போகின்றன. எனக்குள் நானே கேள்வி எழுப்பியபடி நடந்தேன்.

"எல்லோரும் கவனமாக நடவுங்கோ ! ஏதாவது வித்தியாசம் எனக் கண்டால் உடனே விழுந்து படுங்கோ !"

அறிவுறுத்தியபடி பின் தொடர்ந்தார் குமாரண்ணை. ஆங்காங்கே அசைந்து கொண்டிருந்த அரிக்கன் லாந்தர்களின் ஒளிதான் எமக்கு தஞ்சம்.

வீதி ஓரத்தே களைத்து சோர்வுற்ற நிலையில் இருந்த வயது முதிர்ந்த பெண் ஒருவர் மேல் என்னருகே வந்த கண்ணன் விழுந்துவிட்டான்.

"என்னநான் இதிலை இருக்கிறது உங்கடைகண்ணுக்கு தெரியேல்லையே !"

இரைந்தாள் அவள்.

"தெரியாததினால் தானே தடக்கிவிழுந்தனான்"

கூறியபடி எழுந்து நடக்கிறான் கண்ணன். தொடர்ந்து அரை மைல் நடந்திருப்போம் பலர் ஓரிடத்தில் கூடி இருந்தார்கள். விம்மலும், விசும்பலும் அவர்களிடத்தில் இருந்து வெளிப்பட்டது. என்ன என்பதை எட்டிப் பார்த்தேன். மழலை ஒன்று தன் மூச்சை மறந்து மடியொன்றில் கிடந்தது. என் கண்கள் பனித்தன. பூமி வேகமாக சுற்றுவது போன்ற உணர்வு. தாய் அடங்கிப் போய் இருந்தாள். அவளின் முகத்தில் இருந்து விரக்தியும், கோபமும் கலந்த கலவை வடிந்து கொண்டு இருந்தது.

"கெதியாய் நடவுங்கோ"

குமார் அண்ணையின் குரலுக்கு எமது நடை செவிசாய்த்தது. என்னோடு கூட வந்தவர்கள் மனோநிலையும் ஒரே நிலைதான் ஒருவரை ஒருவர் தேற்றிக் கொள்ளாத நிலை. தினமும் நடக்கும் இந்தப் போரினால் எத்தனை உயிர்கள் பறித்தெடுக்கப்படுகின்றன. இந்த சிறுபொழுது அனர்த்தத்திலேயே இத்தனை மோசமான அரங்கேற்றங்கள் என்றால், தினமும் எத்தனை உயிர்ப் பறிப்புக்கள், இழப்புக்கள் இவற்றுக்கெல்லாம் எப்போது முடிவு? மனவோட்டத்தோடு நடைப்பிணமாய் நடந்தேன்.

கதிரவன் தன் வழமையான பயணத்துக்கு ஆயத்தமானான். வானத்தின் தெளிவால் முகில்களின் முற்றுகைக்குள் பகலவன் சிரமப்படவில்லை. தன் கதிர்கரங்களை பூமிப் பந்தில் பதிக்க ஆரம்பித்தான். தூரத்தே எமக்கு அறிவுப் பசியாற்றிய அறிவாலயம் கற்குவியலாக கிடந்தது. நேற்று இருந்தது இன்று இல்லை.

"பார்த்தியளே அநியாயமாக எவ்வளவு அழிவுகள், நடக்குது" ஏன் இந்த சண்டையும் சச்சரவுகளும்"

பெரியவர் ஒருவர் கூறியபடியே எமைக் கடந்தார். இப்போரினால் இப்படி எத்தனை அழிவுகள் பயனுள்ள பல விதைகள் பதராக்கப்பட்டிருக்கின்றன. எமக்கு அறிமுகமான ஒருவரின் வீட்டை அடைந்தோம். அவர்கள் எங்களை வரவேற்றார்கள். தூரத்தே வெடியோசைகளின் தேய்ந்த ஒலி கேட்டுக் கொண்டு இருந்தது. அவ்வோசை தொடர்ந்தும் எங்களை போர் தூரத்தத்தான் போகிறது என்ற சகப்பான உண்மை துலங்கியது.

---

வடக்கு-கிழக்கு மாகாண மட்ட தமிழ்த்தின போட்டி 1998இல் முதலாமிடம் கொடுக்கப்பட்டது



# மீனின் கண் வழிநீர்

அன்று இறுதி வருட மாணவர்களுக்கான பிரிவுபசார விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த மண்டபம் பல விதமான ஒலி விளைவால் ஏற்பட்ட கலகலப்பில் நிறைந்திருந்தது. மாணவர்கள் தம் அருகில் இருந்தவர்களோடு மெலிதாக கதைத்துக் கொண்டும், மேடையில் நிகழும் நிகழ்வுகளைப் பார்த்தவாறும் இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். இடையிடையே எழும் கைதட்டல்களும், விசில் சத்தங்களும் மேடையில் ஏதோ சுவாரசியமான நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கிறது என்பதனை வெளிக்காட்டிற்று.

மண்டபத்தின் மத்தியில் போடப்பட்ட இருக்கை ஒன்றில் தேவா அமர்ந்திருக்கிறான். அருகில் சுகந்தா மேடையில் இடையிடையே ஏற்படும் ஊமம் சார்ந்த நிகழ்வுகளையும், மாணவர்களின் அபிநய விவரணங்களையும் தேவாவுக்கு கூறியபடி இருக்கிறாள். அவர், இது வழக்கமாக இடம் பெறுவதானவைகளால் எவரும் அதனைப் பொருட்படுத்தவில்லை.

"என்ன நான் இதுகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறன். நீர் ஏதோ யோசனையில் வெள்ளிபார்த்துக் கொண்டு இருக்கிறீர்"

சுகந்தா கூறியபடி தேவாவை ஏறிட்டாள்.

"என்ன ! நீர் விசர்கதை கதைக்கிறீர், வெள்ளி பார்க்கிறதுக்கும் ஒரு தகுதி வேணுமில்லே...." அவன் நிறுத்து முன் சுகந்தா இடைமறித்தாள்.

"இப்பிடி இனிமேல் கதைச்சீர் என்றால் உம்மோடை நான் இனிக் கதைக்காமல் விட்டுடுவன்"

"அதைத்தானே நானும் விரும்புறன்?" என்று தேவா கூற, முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த நிமாலினி திரும்பி,

"எந்த நாளும் உங்களுக்கிடேல சண்டைதான் என்னண்டுதான் உங்கடை வாழ்க்கைக் காலத்தை ஓட்டப் போறியளோ தெரியேல" என்றாள்

அந்த வார்த்தை தேவாவுக்கு சுகானுபவமாக இருந்தது.

தன் வாழ்க்கை நீரோட்டத்தில் சுகந்தா கலப்பாளா? அவனுக்குள் ஒரு கேள்வி கிளம்பியடங்கியது.

"தேவா நீர் ஒன்றுக்கும் யோசியாதையும் இவள் இப்படித்தான் சும்மா சண்டை பிடிப்பாள், பிறகு எல்லாம் சரியாப் போகும்" கூறியபடி மேடைப் பக்கம் திரும்பி தன் பார்வைப் பரப்பை விரித்தாள் நிமாலினி.

"நிகழ்ச்சி தொடங்கினதில் இருந்து நீங்கள் ரண்டு பேரும் உதிலைதான் இருக்கிறியள். சுகந்தா எழும்பி வந்து சேவ்(f) பண்ணு பாப்பம்" மோகன் மோகனராகத்தில் இழுத்தபடி அவ்விடத்திற்கு வந்தான்.

"ஏன் மச்சான் இண்டைக்கு கொஞ்சம் மப்புப் போலகிடக்கு" என்று தேவா கேக்க,

"நீ இப்படி நினைக்கிறதும் தப்பு !. அவளோட நீ இப்படி தொடர்ச்சியாய் இருந்து கதைக்கிறதும் தப்பு !!, மொத்தத்தில், சொல்லப் போனால் நீ இந்த இடத்தில் இருந்து ஓடித்தப்பு !!!"

என்று மோகன் கூற,

"சும்மா அலட்டாதேங்கோ மோகன். இப்பென்ன சேப்(f) பண்ண வேணும் அவ்வளவு தானே ......" என்று கூறியவாறு அவ்விடத்தில் இருந்து எழுந்து அகன்றாள் சுகந்தா.

"மச்சான் குறை நினைக்காத. அவளுக்கும் தொடர்ச்சியாய் இருந்தால் கால் விறைச்சுப்போம். உனக்கும் அவளின் புலம்பலைக் கேட்டு காது விறைச்சுப்போம். அதுதான் இப்படி ஒரு சேஞ்" என்ற மோகனின் கதையைக் கேட்டு அருகமந்தவர்கள் "கொல்......" என்று சிரிக்கின்றனர்.

"இரு மச்சான் வாறன்" என்றவாறு விலகினான் மோகன். தேவாவிற்கு ஒரே பதட்டமாக இருந்தது. இன்று எப்படியாவது இதைப்பற்றி சுகந்தாவுடன் பேசிவிட வேண்டும். எதிலிருந்து எப்படி ஆரம்பிப்பது என பலதடவை மனமேடையில் ஒத்திகை பார்த்தும் அரங்கேற்றத்திற்கு தயாரான பாடாக இல்லை. சுகந்தாவுக்கும், தேவாவுக்கும் இடையில் ஏற்பட்ட நெருக்கம் வித்தியாசமானது. பல்கலைக் கழகத்திற்கு வந்த ஆரம்ப நாட்களில் அவனை எல்லோரும் அதிசயமாகவே பார்த்தார்கள். இவனால் எவ்வாறு படிக்க முடிகின்றது என்றவாறான பல கேள்விகள் பலரிடத்தே இருக்கவே செய்தன. இவனிடத்தில் ஏதோ அதிமானிட சக்தி இருப்பதாகக் கூட சிலர் பேசிக் கொண்டார்கள்.

இப்பேற்பட்ட மருட்கைகளை எல்லாம் உடைத்து அவனோடு ஆரம்ப காலத்தில் இருந்த நண்பர்களைப் போல ஒரு வித அந்நியோன்னியமான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டவள் சுகந்தா.

விரிவுரை மண்டபங்களில் அவ்வப்போது இடம் பெறும் கலை, கலாசார நிகழ்வுகளிலும் அவர்கள் சந்தித்துக் கொண்டார்கள். எது வித தயக்கமும் இன்றி தேவாவோடு வெளிப்படையாக கதைத்து அவன் தொடர்பாக அவளுக்கிருந்த சந்தேகங்களை தீர்த்துக் கொண்டாள் அவள். இது ஏனையோரையும் தேவாவுடன் இணைய வழி சமைத்தது.

நண்பர்கள் பலதடவை சுகந்தாவை தேவாவுடன் சேர்த்துக் கிண்டல் அடித்திருக்கிறார்கள். மோகன் பல தடவை தேவாவிடம் கூறி இருக்கிறான்.

"மச்சான் இவள் ஒரு நல்ல பெட்ட. உன் தொடர்பால நல்லொரு புரிந்துணர்வு இவளிட்ட இருக்கு. உனக்குத் தெரியும் தானே; சந்தர்ப்பத்தை தவற விட்டவன் சரித்திரத்தில இடம் பெற்றதாக வரலாற்றில இல்லை. நான் பகிடிக்கோ அல்லது சும்மா கதைக்காகவோ சொல்லேல்ல. அவளில உனக்கொரு அபிமானம் இருக்கிற மாதிரிக் காட்டிக்கொள். நாங்களும் அதற்கேற்ற மாதிரி உனக்கு உதவி செய்வம்"

"சும்மா இரு மச்சான் உதெல்லாம் தோதுப்பட்டு வராது. அவள் என்னில இருக்கிற ஒரு அனுதாபத்திலதான் என்னோட பழகிறாள். அதற்கு பிழையான அர்த்தம் கற்பிச்சு என்னையே நான் ஏமாத்திக் கொள்ள விரும்பேல்ல" கூறியவாறு தேவா மழுப்பினான். ஆனால் தேவாவின் மனதில் எங்கோ ஒரு மூலையில் சுகந்தாவைப் பற்றிய எண்ணங்கள் எழவே செய்தன. இது பற்றி அறையில் நண்பர்கள் ஒன்றாக கூடியிருக்கும் போது மணிக்கணக்காக விவாதித்து இருக்கிறார்கள்.

"நீ ! ஆயிரம் தான் சொன்னாலும் அவளுக்கு உன்னில ஒரு ஈடுபாடு இருக்கு. அது மட்டும் தான் எங்களால கடசியா சொல்ல ஏலும்." என்ற தொனிப்படத்தான் அந்த விவாதங்கள் முடிந்திருக்கின்றன. உண்மையில். சுகந்தா என்னைக் காதலிக்கிறாளா? இந்தக் கேள்வியை தனக்குள்ளேயே தேவா திரும்ப திரும்பக் கேட்டு குழம்பி இருக்கிறான். கால ஓட்டத்தில் அவர்களது நட்பு விரிவடைந்து ஒரு காத்திரமான தன்மையைப்பெற்றிருந்தது

தனிப்பட்ட, சமூகம்சார்ந்த இன்னோரன்ன விடயங்களை சுகந்தாவும், தேவாவும் ஒன்றாக அமர்ந்து கதைத்திருக்கிறார்கள். இப்படித்தான் ஒரு நாள் நகைச்சுவையாக தேவா கேட்டான்.

"எங்களை மாதிரி ஆட்கள் கலியாணம் கட்டிறதைப் பற்றி என்ன நினைக்கிறிர்?"

"என்ன நீர் எங்களை மாதிரி, உங்களை மாதிரி எண்டெல்லாம் பிரிச்சுக் கதைக்கிறீர். எல்லோரும் ஒருமாதிரித்தான். நீர் ஒண்டுக்கும் யோசியாதையும். உமக்கொரு நல்ல வாழ்க்கை இருக்கு, இப்படி பேசி அலம்புறத விட்டு முதலில படிக்கிற அலுவலப்பாரும்" என்று சுகந்தா கூறியதைக் கேட்டதும் உண்மையில் அவனுக்கும் உற்சாகமாகத்தான் இருந்தது. அத்தோடு சுகந்தா மீது அவன் கொண்டிருந்த மனோரீதியான ஈடுபாடும் மேலும் தீவிரமடையத் தொடங்கியது.

பல்கலைக் கழகத்தில் இவர்களைப்பற்றி ஒரு விதமான கதை உலாவியது என்னவோ உண்மைதான். ஆனால் அதையெல்லாம் சுகந்தா பொருட்படுத்துவதாக இல்லை. அவனோடு சகஜமாகப் பழகினாள். இது அவனது மனதில் நம்பிக்கையை வளர்த்து விட்டிருந்தது. எப்படியாவது தன் மனக்கிடக்கைகளை அவளிடம் வெளிப்படுத்தியாகி விட வேண்டும் என்று முயன்று தோற்றுப் போய் இருக்கிறான். இன்று தன் எண்ணத்தை எப்படியாவது வெளிப்படுத்தியே ஆக வேண்டும் இல்லாவிட்டால் இதற்கான சந்தர்ப்பம் பின்பு அவனுக்கு ஏற்படாமல் கூடப் போகலாம்.

"என்ன தேவா! மண்டையை விட்டுக் கொண்டு, இருக்கிறியள். வாரும் போய் படம் எடுப்பம். எல்லாரும் படம் எடுக்க ஆயத்தம் செய்யினம்"

சுகந்தா சொன்ன போது தான் நிகழ்ச்சி நிறைவுக் கட்டத்தை அடைந்திருப்பதை தேவா உணர்ந்தான்.

"ஓமோம் வாறன் !"

கூறியவாறு எழுந்தவனின் கரங்களை அவள் அழுத்தமாகப் பற்றினாள்.

எல்லோரும் ஒன்றாகக் கூடி நின்றும் தனித்தனியாகவும் படங்கள் எடுத்துக் கொண்டார்கள்.

"என்ன தேவா ஒடுங்கிப் போய் ஒதுங்கி நிற்கிறியள். கிட்ட வந்து நில் சுகந்தா ஒன்றும் சொல்லமாட்டாள்"

மோகன் நளினமாகச் சொல்ல அங்கு கூடி நின்ற சகமாணவர் அனைவருமே சிரித்துவிட்டனர். அது மோகனின் கூற்றை ஆமோதிப்பது போல் இருந்தது. தேவாவுக்கு.

"மோகன் எதுக்கும் ஓர் அளவு இருக்குது. உங்களை நான் கம்பசுக்கு வந்த நாளில இருந்து பார்க்கிறன் கதை ஒரு விதமாய் கிடக்குது....."

சுகந்தா நிறுத்தமுன் இடைமறித்த மோகன் "என்ன விதம் அந்த விதத்திலதானே ஒரு இதமே இருக்கு" என்று கூறியபோது.

"உங்களோட கதைச்சு வெல்லேலாது தேவையில்லாமல் இப்ப நான் வாயைக் குடுத்தது"

என்றவாறு உதட்டைக் கடித்து, கண்களால் கண்டித்தாள் சுகந்தா.

"இனி எப்ப பெரும்பாலும் பயினல் சோதனைக்குத்தான் சந்திப்பம்" என்று இழுத்தான் தேவா.

"ஓம் தேவா நானும் அதைத்தான் நினைச்சினான். உங்களோட கொஞ்சம் கதைக்க வேணும் இண்டைய விட்டால் பேந்து கஷ்டம்" என்றாள் சுகந்தா. இதை தேவா சற்றும் எதிர் பார்க்கவில்லை. அவனது இதயத்துடிப்பு அவனுக்கே கேட்பது போல் இருந்தது. அவனை அழைத்துக் கொண்டு ஓரமாக இருந்த கல்லிருக்கை ஒன்றிற்கு வந்தாள் சுகந்தா.

இருவருக்குமிடையே கண நேர மௌனம். காற்றின் கனதியான அசைவில் சிலசோடி மூச்சுக்கள் கரைந்தன. தேவாதான் முதலில் அமைதியைக் குலைத்துக் கொண்டு பேசத் தொடங்கினான்.

''நானும் ...........''

''என்ன தேவா இழுக்கிறயள் தயங்காமல் சொல்லுங்கோ ! இண்டைய விட்டா பிறகு நாங்கள் எப்பெப்ப சந்திக்கிறமோ. தெரியாது. சந்திச்சாலும் எக்ஸாம் நேரமாய் இருக்கும். ஆறுதலாய் கதெக்கேலாது" என்றாள்.

''ஓம் அப்பிடி ஒன்றுமில்ல. நானும் உங்களோட ஒரு விஷயம் கதைக்க வேண்டியிருக்கு"

''அ.... அ.... அப்பிடியா. அப்ப நீங்கள் முதல் சொல்லுங்கோ ! தேவா" என்றாள் சுகந்தா. அவள் குரலில் ஒரு பரபரப்பு.

''இல்ல.... இல்ல... நான்முதல்ல சொல்லப் போறதில்லை. ஏனென்டால் நீர் தான் முதலில் ஏதோ கதைக்க வேணுமெண்டு சொன்னனீர். அதனால உமக்குத்தான் முதலிடம்..... ம்..... சொல்லும்." என்றான் தேவா.

''இல்ல எண்ட கதையை எதில இருந்து எப்படி ஆரம்பிக்கிறது எண்டு தெரியேல்ல" என்று இழுத்தாள் அவள்.

''ஆரம்பம் எப்பிடி இருந்தாலும் முடிவு நல்லா இருந்தால் சரிதானே ! மோகன் வந்தால் இப்ப நாங்கள் துலஞ்சம்" என்றான் அவன்.

''தன்னைச் சுதாகரித்துக் கொண்டு தயங்கியபடி பேசத் தொடங்கினாள் சுகந்தா.

''நான் உங்களோட எவ்வளவு காலமாக பழகிவாறன். உங்களுக்கு என்னைப்பற்றி தெரியும் என்று நம்புறன். எனக்கு ஒரு ஆச்சரியம் என்னவெண்டால் உங்களை சந்திச்ச நாளில் இருந்து இண்டு வரைக்கும் நீங்களும் மோகனும் பிரியாத நண்பர்களாய் இருக்கிறியள்...."

இந்த வார்த்தைகளைக் கேட்க கேட்க தேவாவிற்கு பரீட்சை முடிவிற்காய் காத்திருக்கும் ஒரு மாணவனின் மனோநிலையைப் போல் அவனது மனம் அடித்துக் கொண்டது. ஒரு கணம் காற்றை உள்ளே இழுத்துக் கொண்டு தொடர்ந்தாள் சுகந்தா.

"உங்கடை வளர்ச்சியிலை அவருக்கு நிறையப் பங்கிருக்கிறதா நான் கருதிறன். உண்மையிலை நான் உங்களோட நல்ல நட்பை ஏற்படுத்திறதுக்கு காரணமாய் இருந்ததே அவர்தான். அவற்றை நகைச்சுவையான பேச்சும், சமூகம் மீதான பார்வையும் எனக்கு நல்லாப் பிடிச்சிருக்கு...."

இவள் என்ன சொல்கிறாள்? பின்னால் இருந்து தன்தலையில் யாரோ ஓங்கி அடிப்பது போல் தேவாவுக்கு ஒரு உணர்வு. ஒரு கணத்திலே எல்லாம் நொருங்கி விட்டது போல் ஓர் பிரமை. திடீர் என்று வீசிய காற்று மரத்தில் இருந்த சருகுகளை உதிர்த்து விட்டுச் சென்றது.

"என்ன தேவா நான் சொல்லிக் கொண்டே இருக்கிறன் நீங்கள் என்னவோ மாதிரி இருக்கிறியள் !" வருத்தம் தொனிக்க கேட்டாள் அவள். தேவா தன்னைச் சுதாகரித்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

"இல்ல.... இல்ல... நீர் சொல்லுறத மெய் மறந்து கேட்டுக் கொண்டிருக்கிறன். அவ்வளவுதான்"

"பிளீஸ்.... தேவா ! பிளீஸ்...." அவளது குரலில் இருந்தது ஏக்கமா அல்லது தாபமா என்று பிரித்து இனம் காணும் நிலையில் தேவா இல்லை.

"...... எனக்கு உதவி அவசியமாய் தேவைப்படுகுது" என்று நிறுத்தினாள் அவள்.

அந்த மரத்தில் இருந்த காகத்தின் கூட்டில் குயில் ஒன்று தன் முட்டையை பத்திரப்படுத்தி, இரகசியமாய் பறந்து செல்கிறது.

"என்ன மாதிரியான உதவிய நீர் என்னட்ட இருந்து எதிர்பார்க்கிறீர் எண்டத வெளிப்படையா சொன்னால் தான் உமக்கு அதை நான் செய்யலாம்" என்றான் அவன். அவனது குரலில் இருந்த நடுக்கத்தை சுகந்தா அவதானித்திருக்க நியாயமில்லை.

"நீங்கள் சொல்லுறது சரி. நான் சுத்தி வளைக்காமல் விசயத்துக்கு வாறன். உங்களோட நான் நட்பை ஏற்படுத்துறதுக்கு பிரதான காரணம் மோகன் தான். அவரோட நெருங்கிப் பழகிறதுக்கு இதவிட்டால் எனக்கு வேற வழி தெரியேல்ல. நான் இப்படிக் கதைக்கிறதுக்கு நீங்கள் முதலில் என்னை மன்னிக்க வேணும். ஆனால் இது தான் உண்மை. நான் மோகனை விரும்புறன். அவர என்னோட சேர்த்து வைக்கக் கூடிய வல்லமை உள்ள ஜீவன் நீங்கள்தான்"

இதைக் கேட்டதும், அதலபாதாளத்தில் இருந்து கூக்குரல் இடுவது போல் அவனது மனம் அலறியது. கனவுகள், கற்பனைகள், எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள் அனைத்துமே சிதறிப் பொடிப்பொடியாகின. "அந்தக்கல்" இருக்கைகளை அவன் அழுத்தமாக பற்றிக் கொண்டான். "இந்தக்கல்" போன்றுதன் மனதையும் உறுதியாக்கிவிட வேண்டும் என்று தனக்குள் அவன் சத்தியம் செய்து கொண்டான். ஒரு வகையில் சொல்லப் போனால் இழப்புக்கள் என்பது அவனுக்குப் புதியவை அல்ல. இழப்புக்களைக் கண்டு அவன் நின்றிருந்தால் இப்பேற்பட்ட உயர்ந்த நிலைக்கு வந்திருக்கவே முடியாது.

"என்ன தேவா ! நான் கேட்டதில ஏதும் பிழையே? பேசாமல் இருக்கிறியள் !!" கலக்கத்துடன் கேட்டாள் சுகந்தா.

"சீச் சீ.... இதில என்ன? தவறு இருக்க. சில முடிவுகளை எடுக்கிறதுக்கு கொஞ்சம் அவகாசம் தேவைப்படும் அவ்வளவுதான். இந்த இடத்தில் நான் சொல்லுறன் மோகனை உம்மோட சேர்த்து வைக்கிறது என்ர பொறுப்பு. இதைப்பற்றி நீர் இனி யோசிக்க வேண்டாம். பைனல் எக்ஸாமை வடிவாச் செய்யும். அந்தப் பரீட்சை முடிவைப் போல இதுவும் சிறப்பாய் அமையும்" பிசிறிய குரலில் முடித்தான் தேவா.

"தாங் யூ தேவா! உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே எனக்குத் தெரியேல்ல" என்றவாறு தேவாவின் கரத்தைப் பற்றினாள் சுகந்தா.

தேவா நிதானத்துடன் அவள் கரத்தில் இருந்து கையை விடுவித்துக் கொண்டான்.

"அது சரி.... நீங்களும் ஏதோ கதைக்க வேணுமெண்டு சொன்னநீங்கள் என்னண்டு சொல்லுங்கோ !..."

வினாவுடன் தேவாவை ஏறிட்டாள் சுகந்தா.

"நான் சும்மா வெருட்டுறதுக்காக கதை விட்டனான். உம்மட்ட நான் என்னத்தை பெரிசாக் கேக்கப் போறன் அத விடும்."

பூசி மெழுகினான் தேவா.

"மச்சான் இன்னும் கதைச்சு முடியேல்லயே. வாவன் இனியாவது றூமுக்கு போவம்" என்றவாறாக மோகன் அவ்விடத்துக்கு வந்தான். மேற்கு வானம் சிவந்திருந்தது.

"சுகந்தா இனிப் போயிருந்து படிக்கிற அலுவலைப் பார் !"

மோகனின் குரலுக்கு மௌனமாக தலையசைத்து விட்டு,

"தேவா நான் வாறன்" விடை பெற்றாள் அவள்.

தேவாவும், மோகனும் நடக்கத் தொடங்குகின்றனர். தொலைவில் குயில் ஒன்று கூவும் சத்தம். காகம் தன் கூட்டை அடைந்து முட்டைகளை அடைகாக்கத் தொடங்கியிருந்தது.

---

சமூகசேவை அமைச்சும் கட்புலனற்றோருக்கான நிதியமும் இணைந்து அகில இலங்கை ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதலாமிடம்



# யாருக்கு வேண்டும்

அந்தப்படை முகாம் பரபரப்பும் சோகமும் கலந்த ஒரு நிலைக்கு ஆட்பட்டிருந்தது. படை வீரர்கள் துரிதமாக தத்தமது காரியங்களை ஆற்றிக் கொண்டு இருந்தார்கள். அம்புலன்ஸ் வண்டியொன்று யுத்த முனையில் இருந்து சற்று முன்னர்தான் முகாமினுள் பிரவேசித்து இருந்தது. காயமடைந்த வீரர்கள் சிகிச்சைக்காக அதில் இருந்து இறக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். உடலில் ஏற்பட்ட வலியால் அவர்கள் முனகிக் கொண்டிருந்தார்கள். அவர்களது உடலில் இருந்து குருதி மண்ணில் சென்று படிந்தது. இவை ஒரு புறம் இருக்க ஆர்ப்பாட்டம் இல்லாமல் ஒரு டிராக்டர் முகாமினுள் வந்து நிற்கின்றது. காலை களத்திற்குப் போனவர்களில் சிலர் பிணம் என்ற

முத்திரை குத்தப்பட்டு அதில் கொண்டு வரப்பட்டிருந்தனர். இதே நேரம் லொறியொன்று களத்திற்குச் செல்வதற்காகப் படை வீரர்களை விழுங்கிக் கொண்டிருந்தது. இதை எல்லாம் காவற்கடமையில் இருந்தபடியே பிரியந்தலால் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது நண்பன் ஒருவன் லொறியில் இருந்த படியே கையசைப்பது தெரிந்தது. அவன் வேதனையோடு செல்கிறான் என்பதை முகத்தில் திரையிட்டு இருந்த வேதனையின் கோடுகள் காட்டிற்று. லொறி மெல்ல மெல்ல நகர்ந்து முகாம் எல்லையைக் கடந்தது.

பிரியந்தலால் பெருமூச்சு ஒன்றை உதிர்த்து விட்டு கையில் கிடந்த துப்பாக்கியை ஒருமுறை வெறித்துப் பார்த்தான். இந்தத் துப்பாக்கிதான் இதுவரை எத்தனை உயிர்களைக் குடித்திருக்கிறது. நினைத்த போதே அவனது கரம் நடுங்கியது. நான்கு வருடங்களாக இந்தத் துப்பாக்கியுடன்தான் அவனுக்கு உறவு. சதா மரணங்களை சந்தித்துச் சந்தித்தே அவனது மனம் மரத்துப் போய் விட்டது. ஆனால் இன்று ஏனோ மனம் சஞ்சலப்படுகிறது. வேட்டுச் சத்தம் வரவர தீவிரமாகிக் கொண்டிருந்தது. எறிகணைகள் முகாமிற்குள் இருந்து வெளியே வீசப்பட்டுக் கொண்டிருந்தன. லால் இருந்த இடத்தில் இருந்து சுமார் ஐம்பது யார் தூரத்தில் எதிரிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணை ஒன்று வீழ்ந்து வெடிக்கிறது. அவன் உடனே தன்னைச் சுதாகரித்துக் கொள்ள உரிய நிலை எடுத்துக் கொண்டான்.

இப்போது அவனது எண்ணம் எனும் பறவை வீட்டை வட்டமிட்டது. லீவில் சென்று மீண்டும் அவன் முகாம் திரும்பும் போது சுமித்திரா இடுப்பில் குழந்தையை தூக்கி வைத்துக் கொண்டு கண்ணீரோடு அவனை வழியனுப்பிய காட்சி அவனைக் கசக்கிப் பிழிந்தது. கண்கள் நீரை இறைத்தன. சுமி ! சுமி ! அவனையும் அறியாது வாய் முணுமுணுக்கிறது. இப்படியாக எத்தனைபேர் ஊரை உறவைத் துறந்து மரணம் என்னும் உலைக்குள் வந்து விழுந்திருக்கிறார்கள். குண்டுச் சத்தம் மீண்டும் பலமாகக் கேட்கிறது. வாகனங்கள் வருவதும் போவதுமாக இருந்தது. நிலைமை தீவிரமாவதை இது காட்டிற்று.

அவன் குடும்பச் சூழ்நிலையை உத்தேசித்தே. இராணுவத்தில் சேர்ந்திருந்தான். அவனது மனதில் இப்படியும் ஒரு கேள்வி எழுந்தது. ஏன் நம்மால் எதிரியாகப் பார்க்கப்படுபவர்கள் இவ்வாறு தீவிரமாகப் போராடுகிறார்கள்.

நாம் கூலிக்காகக் களத்தில் நிற்கிறோம். ஆனால் அவர்கள் எதற்காக உயிரை இழக்கிறார்கள். இதை அவனது மனம் ஆழமாகச் சிந்திக்கிறது.

மறுக்கப்பட்ட உரிமைகளின் பிரதிபலிப்புக்களே இவை. இதற்கு மேலும் சிந்திக்க அவனது மனம் இடம் கொடுக்கவில்லை. சிகரட் ஒன்றை உருவிப் பற்ற வைத்துக் கொண்டான். இந்த யுத்தத்திற்கு ஒரு முடிவு இல்லையா? கொடுமையான போர் நடந்த நாடுகள் பல இன்று சமாதானத்தை நாடிவிட்டன. அந்த நாடுகளின் வானில் வெண்புறாக்கள் பறக்கின்றனவே. ஏன் இங்கு மட்டும் இது சாத்தியம் அற்றுப் போனது. குருதி யாவர் உடலிலும் சிவப்பு நிறமாகவே உள்ளது. அதை நாம் ஏன் உணர மறுத்தோம். இப்படியான எண்ணத்தை அவன் மனம் எண்ணிக் கொண்டிருக்கையில் லால்! லால்! என்று யாரோ அழைக்கும் சத்தம் கேட்டுத் திரும்பினான். படை அதிகாரி நின்றிருந்தார். உரிய மரியாதை செய்து அவரது கட்டளையை எதிர்பார்க்கும் நிலையில் நின்றான் அவன்.

"நீ இப்ப களத்துக்குப் போக வேண்டும். அதற்கான முன் ஆயத்தங்களைச் செய் !"

கூறிய அதிகாரி நகர்ந்தார். அவரது கண்களும் ஒரு இனம் புரியாத கலக்கத்தைத் தேக்கியிருந்தன.

யாருக்கு வேண்டும் இந்தப் போர் !

பிரியந்தலாலையும் அதே லொறி விழுங்கிக் கொள்கிறது.



# எதிர்பார்ப்பு

மேசையின் மத்தியில் கிடந்த கடிகாரத்தை பார்க்கிறேன். நேரம் 7.30 இன்னமும் இருபது நிமிடத்திற்குள் அந்தக் கடைக்கு சென்றாக வேண்டும். அவசரமாக உடை மாற்றிக்கொண்டு அறையைப் பூட்டி சாவியைப் பத்திரப்படுத்திக் கொள்கிறேன். வீட்டில் உள்ளோர் ஏற்கனவே புறப்பட்டு வெளியே சென்றிருந்தமையால் எவரிடமும் சொல்லிக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கவில்லை. வீட்டின் முன் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். வீட்டிலிருந்து பிரதான வீதி அண்மையில்தான் இருக்கிறது. சில நிமிடங்களில் பிரதான வீதியை அடைந்தபோது சனநடமாட்டம் அதிகரித்திருந்தது.

வழமையைவிட இன்று மனம் ஒரு பரவச நிலைக்கு ஆட்பட்டிருந்தது.

"எங்க தம்பி துலைக்கோ போறியள்?"

குரல் கேட்டு திரும்பிய என்னை நோக்கி மார்க்கண்டு மாஸ்டர் முகமலர்வுடன் வந்து கொண்டிருந்தார்.

"வாங்கோ மாஸ்டர்"

புன்னகையை வரவழைத்து உதட்டில் பொருத்திக் கொண்டேன்.

"கொஞ்சச் சாமான்கள் கடையிலை வாங்கவேணும்"

நான் கேட்காமலேயே அவர் புறப்பட்ட காரணத்தைக் கூறி விட்டார். நான் மௌனித்தேன்.

"அப்ப தம்பி எங்கை போறீர்?"

மாஸ்டரிடம் எதிர்பார்த்திருந்த கேள்வி. விடை சொல்வது சுலபமாக இருந்தது.

"நானும் சந்தி வரைக்கும் போட்டு வருவம் எண்டு வெளிக்கிட்டனான்"

பதிலுடன் சைக்கிளின் வேகத்தைச் சற்று அதிகரித்தேன்.

கைக்கடிகாரத்தில் நான் நிர்ணயித்த நேரத்தை முட்கள் அண்மித்துக் கொண்டிருந்தன. சந்தியை அடைந்தபோது கடைகள் திறக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால் அந்தக் கடை மட்டும் சமீபகாலமாக விடியற் காலையிலேயே திறக்கப்பட்டு விடுகிறது. சைக்கிள்களும், மோட்டார் சைக்கிள்களும் கடையின் இருமருங்கையும் அலங்கரித்துக் கொண்டிருந்தன. எனது சைக்கிளையும் நிறுத்திவிட்டு வியர்வை அரும்பிய நெற்றியைத் துடைத்தபடி உள்ளே நுழைகிறேன்.

அங்கு பலர் காணப்பட்டனர். முகங்களில் பலவித உணர்வுக் கலவைகள். நாம் யாவரும் ஏதோ ஒன்றிற்காகக் காத்திருக்கிறோம் என்ற உணர்வு பொதுவானதாக அவர்களில் இருந்தது. என்னையும் அவர்களுடன் இணைக்க வேண்டிய நிலை. நாற்பது வயது மதிக்கத்தக்க அம்மணி ஒருவர் தவிப்புடன் கடையின் வெற்றிடப் பகுதியில் குறுக்குநெடுக்காக உலாவிக் கொண்டு இருந்தார். நெற்றியில் துலங்கிய பெரிய குங்குமப் பொட்டும். கழுத்தில் மின்னிய தாலியும் அவர் திருமணமானவர் என்பதை வெளிக்காட்டின. கைகள் ஐந்து சோடிகளுக்குக் குறையாத வளையல்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. கதிரையொன்றில் அமர்ந்திருந்த சிறுபையனின் அருகே சென்ற அப்பெண்மணி "தம்பி அப்பாவிட்டை என்ன கேட்பாய்?" என்றார்.

இக்கேள்வியை எதிர்பாராத சிறுவன் எதைக் கேட்பது என்பதுபோல தாயின் முகத்தைப் பார்க்கிறான்.

"ரொம்பக் காசு அனுப்பச் சொல்லு"

அறிவுறுத்திவிட்டு மீண்டும் உலாவ ஆரம்பித்தார்.

மேசையில் கிடந்த தொலைபேசி கிணுகிணுக்கிறது. மேசை முன் அமர்ந்திருந்தவர் ரிசீவரை எடுத்து 'ஹலோ' என்றார். மறுகணம் ஓர் ஆணின் குரல் மெலிதாகக் கேட்கிறது. இருந்தவர்களின் ஆர்வம் அவர்களது செயற்பாட்டு மாறுதல்களில் புலப்படுகிறது. தாம் குறித்து வைத்திருந்த விடயத்துண்டை சிலர் எடுத்துக்கொண்டனர். இருக்கையின் நுனிப்பகுதிக்கு அசைந்தவர்கள் சிலர். உலாவிக் கொண்டிருந்த பெண் தொலைபேசி அருகில் சென்று நின்று கொண்டார்.

"வத்சலா யார்? ஜேர்மனியில் இருந்து கோல் வந்திருக்கு. அன்னராசா எண்டவர் கதைக்கிறார்"

மேசை முன்பாக அமர்ந்திருந்தவர் ஒரு கையில் தொலைபேசியைப் பிடித்தபடி அங்கே அமர்ந்திருந்தோரை நோக்கி உரத்த குரலில் அறிவிப்புச் செய்கிறார். அநேகரது முகங்களில் படித்திருந்த ஆவல்ரேகைகள் மறைந்து ஏமாற்றக் கோடுகள் படிந்தன. தொலைபேசி அருகே நின்றிருந்த பெண்ணது

நிலைமையோ பரிதாபமாக இருந்தது. காற்றுப்போன பலூன் போல் குன்றிப்போனாள். மெதுவாக அவ்விடத்தே இருந்து விலகி காலியாகக் கிடந்த இருக்கை ஒன்றில் அமர்ந்து கொண்டாள். வெளியே இருந்த ஒரு பெண்மணி பரபரப்புடன் அழைப்பாளரை நோக்கி விரைந்தாள். அவளது முகத்தில் கிடைத்தற்கரிய பேறு ஒன்று பெற்று விட்ட முகமலர்வு. தொலைபேசியைக் கையிலெடுத்து "ஹலோ ! நான் வத்சலா கதைக்கிறன். நீங்கள் ஆர் கதைக்கிறது? மாமாவோ?" கேள்விக்குப் பின்னர் விடையையும் கேள்விக்குறியாய் நிறுத்தினார். அவளது ஊகம் சரியானது என்பதைத் தொடர்ந்து அவள் உரையாடியது உறுதிப்படுத்தியது.

மெலிதான குரலில் பேசியதிலிருந்தும் தொலைபேசியை கையாழும் விதத்திலிருந்தும் தொலைபேசி பாவனையுடன் பரிச்சயப்பட்டவள் என்பது தெரிந்தது. சுமார் பதினைந்து நிமிட நேரத்தின்பின் அவளது உரையாடல் முற்றுப்பெற்றது. மீண்டும் அங்கு இருந்தோரிடையே ஆர்வ அலை தோன்றியது. நாற்பது வயது மதிக்கத்தக்க அப்பெண் இருக்கையில் இருந்து எழுந்து நின்று கொண்டாள். அடுத்த அழைப்பு நிச்சயமாகத் தனக்காகவே இருக்கும் என்பது போல அவளது பாவனைகள் அமைந்திருந்தன. மீண்டும் தொலைபேசி அழைக்கிறது.

"ஹலோ ! யார் கதைக்கிறது?"

மேசை முன் இருந்தவர் தொலைபேசியை எடுத்து கேட்கிறார்.

"கனடாவிலை இருந்து கோல் வந்திருக்கு. ராசரட்ணம் என்பவர் கதைக்கிறார். தனலக்ஷமி நிற்கிறாவோ?"

எழுந்து நின்றவளின் வேகமான செயற்பாடுகளில் இருந்து அது அவளிற்கான அழைப்பு என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அவள் ஓடிச்சென்று தொலைபேசியை எடுத்து மாறி உபயோகிக்க முயன்ற போது ஒரே நேரத்தில் பலகுரல்கள் அவளைத் திருத்த முற்பட்டன.

"பிள்ளை மற்றமாதிரி வைத்துக் கதையும்" - ஒருவரின் குரல் அது.

"ரெலிபோனைக் கண்ணிலும் காணாததுகள் கதைக்க வெளிக்கிட்டால் உப்பிடித்தான்" - வேறொருவரின் முணுமுணுப்பு.

எல்லாவற்றையும் மீறிச் சிரிப்பொலி கிளம்பி அவ்வறையை நிறைத்தது. இவற்றையெல்லாம் சட்டை செய்யும் நிலையில் அவள் இல்லை. தொலைபேசியை மாற்றிப் பிடித்துக் கொண்டு பேசத் தொடங்கினாள். அவளது குரலோ தெளிவாக அனைவருக்கும் கேட்டது.

"நீங்கள் யார் கதைக்கிறியள்?...சரி...சரி எப்பிடி சுகமாய் இருக்கிறியளோ? தம்பியும் உங்களோடை கதைக்க வேணும் எண்டு வந்திருக்கிறான்" - இவ்வாறு அவள் பேசியதிலிருந்து மறுமுனையில் கதைப்பவர் அவள் கணவர்தான் என விளங்கியது.

"என்ன கொஞ்ச நாளாய் உங்கடை கடிதத்தைக் காணேல்லை?"

கேள்வியுடன் சிலகணநேரம் மௌனமானாள். எதிரிலிருந்து ஏதோ சமாதானம் கூறியிருக்க வேண்டும். அவளது உரையாடல் சாந்தமாகத் தொடர்ந்தது.

"மாமிக்கும் இப்ப அடிக்கடி சுகமில்லாமல் வருகுது. ஆஸ்பத்திரிக்கும் வீட்டிற்கும் மாறி மாறித் திரியிறம். சரியான காசுச் செலவு. இனி மேல் நீங்கள் கொஞ்சம் கூடக் காசு அனுப்பினால் நல்லா இருக்கும்"

பணத்தை அதிகப்படியாக பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம் போல் அவளது தொனிப்பு அமைந்திருந்தது. எனக்கு ஏனோ வெறுப்பாக இருந்தது. தொலைபேசி இயக்குநரிடம் சென்று ! அண்ணா எனக்கேதிலும் தகவல் வந்ததோ?" எனக் கேட்டேன். "இண்டைக்கு சரியான நெருக்கடியாய் கிடக்குது. லைன் கிடைக்கிறது கஷ்டம் அவை அங்கை எடுத்தாலும் இஞ்சை கதைக்கிறது கஷ்டம். எனக்கு எத்தகவலும் வரவில்லை." - என்றார் அவர். நான் உதட்டைக் கடித்துக் கொண்டேன். அவள் தொடர்ந்தும் உரையாடிக் கொண்டே இருந்தாள்.

"போன முறை வந்த போட்டோவிலை நீங்கள் கொஞ்சம் மெலிஞ்ச மாதிரிக் கிடந்தது.? ஏன் சாப்பிடுறேலலையோ? ஒழுங்காய் உடம்பைக் கவனிச்சுக் கொள்ளுங்கோ. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். என்ன செய்யிறது? நாங்களும் பிரிஞ்சிருக்க வேண்டிய ஆட்களாய்ப் போனம்" பெருமூச்சொன்றை தொலைபேசி மூலம் தூது விட்டாள் அவள்.

" மச்சாளின்ரை கலியாணவீடு நல்ல பெரிசாய் நடந்தது. வீடியோவும் எடுத்தவை. நானும் என்ரை பங்குக்கெல்லாம் செய்திருக்கிறன், கசற் அனுப்புவினம்தானே. பாருங்கோவன்" தனது பங்களிப்பு கணவரின் தங்கையின் கலியாண வீட்டில் எத்தனை முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதை வெளிப்படுத்தினாள் அவள்.

"நீங்கள் இருந்திருந்தால் இன்னும் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும்" கனதியான சோகத்தைக் குரல் மூலமாகக் கரைத்து வார்க்கிறாள். என்ன ஆச்சரியம்? கண்ணிலிருந்து ஒரு துளி கூட அரும்பவில்லை. சிலவேளை அழுது, அழுது கண்ணீர் வற்றிப் போயிருக்கலாம் என எண்ணிய நான் அவளின் இச்செய்கைக்கு நியாயம் தேடிக் கொண்டேன். உரையாடல் தொடர்ந்து கொண்டிருக்கையில் "ஹலோ ! ஹலோ ! ஹலோ ! " என தொடர்ச்சியான ஹலோக்கள் அவளது வாயில் இருந்து உதிர்ந்தன.

தொலைபேசி இயக்குநர் "அக்கா கட்டாய் போச்சு வையுங்கோ" என வேண்டுகோள் விடுத்தார். பெருத்த ஏமாற்றத்துடன் தொலைபேசியை பொருத்திவிட்டு அகன்றபோது ஒரு குரல்...

"ஹலோ, ஹலோ எனக் கத்திக் கிலோக் கணக்கிலைகாசு வேண்டுவ மெண்டு பார்க்குதுகள்"

"அதுக்குத்தானே நீங்களும் வந்திருக்கிறியள்" குரல் வந்த திசையை நோக்கிச் சீறினாள் அப்பெண். வாய் திறந்தவர் தலையைச் சொறிந்து கொண்டார்.

தொலைபேசி உரையாடல் தொடர்ந்தது. பணநோட்டுக்கள் இயக்குநரின் லாச்சியை நிறைத்துக் கொண்டிருந்தன. உரையாடல்களில் காணித் தகராறுகள். அயல்வீட்டுச் சண்டைகள், எதிர்வீட்டுப் பையனுக்கும்

அயல் வீட்டுப் பெண்ணுக்கும் இடையில் ஏற்பட்ட காதல்... தாராளமாக உலாவந்தன. எனக்குள் ஒரு சிந்தனை. இவையெல்லாம் தொலைபேசியில் கூறத்தான் வேண்டுமா? இக்கேள்வியை எனக்குள்ளே கேட்க முடிந்ததே தவிர வெளியிட முடியவில்லை.

வெளிநாடுகளில் இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் எம்மிடம் எதிர்பார்ப்பதென்ன? தூய்மையான அன்பையல்லவா? இதை ஏன் எம்மவர்கள் சிலர் மறக்க முயல்கிறார்கள்? இவர்களது எதிர்பார்ப்பெல்லாம் பணம்தானா? பணம் மரத்தில் காய்க்கிறது போலும் !. நேரம் பதினொருமணி தொடர்ந்தும் நிற்க ஏனோ மனம் ஏவவில்லை.

இயக்குநரிடம் "கோல் ஒன்று எடுக்க வேணும். பேந்துவாறன்" என்று கூறிவிட்டு பதிலுக்கு காத்திராமல் கடையை விட்டுத் தெருவில் இறங்குகிறேன். வரும்போது இருந்த உற்சாகம் இப்போது இல்லை. மனதில் ஏதோ இனம் புரியாத சுமை. சுமையை யாரிடம் பகிர்வது? மௌனமாகச் சைக்கிளை மிதிக்கிறேன். சந்தி கலகலப்பாக இருந்தது. மனமோ சுமைக்குள் அழுந்திக் கிடந்தது.

சஞ்சீவி - 1 ஏப்ரல் 2000



# தூறல்

மூன்று நாட்களாக வாசுகி வெளியே எங்கும் செல்லவில்லை; வீட்டுக் குள்ளேயே அடைபட்டுக் கிடந்தாள். சரவணமுத்து எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்கவில்லை. தன் அறையில் கிடந்த கடிகாரத்தைப் பார்க்கிறாள். அதன் முட்கள் தம்பாட்டிற்கு நகர்ந்து கொண்டிருந்தன.

"இந்தக் கடிகாரம் போல இருந்து விட்டால் தொல்லையே இல்லை; யாரும் எம்மைக் கேள்வி கேட்கவோ, கேலி செய்யவோ இடமிருக்காது. எனத் தனக்குள் நினைத்துக் கொண்டாள். "

"நாம் நாமாகவே இருப்போம்; நாம் நமக்காவே இருப்போம்; அனைத்தையும் அப்படியே ஏற்றுக் கொள்வோம்" என்ற



முகமாலை சேகர்

வாசகம் அடங்கிய நாட்காட்டி அவள் பார்வையில் படும்படியாக சுவரில் தொங்கிக் கொண்டிருந்தது.

"ஏன் என்னைமட்டும் இவர்கள் பழைய வாசுகியாக ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்? அல்லது நான் இன்னமும் பழைய நிலைக்கு திரும்பவில்லையா? திரும்பத் திரும்ப மனம் இதைத்தான் கேட்டுக் கேட்டு அடித்துக் கொண்டிருந்தது"

வாசலில் யாரோ அழைக்கும் சத்தம். சலிப்புடன் வெளியே வந்து எட்டிப் பார்க்கிறாள். அவளது மாமி வாசலில்.

"வாருங்கோ மாமி!" என்று குரலில் எதுவித மாற்றமும் இன்றி வரவேற்றாள்.

"நான் வரவேண்டு. வரவேண்டுமென்று நினைக்கிறது; எங்கை நேரம்? இண்டைக்கு அவருக்கு லீவென்ற படியால் பிள்ளைகளை அவரோடை விட்டு விட்டு வந்தனான்."

தான் இது நாள் வரை வராத காரணத்தைத் தாக்கல் செய்தவாறு கதிரையில் அமர்கிறாள் மாமி. வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையொன்றை உதட்டில் பொருத்திச் சமாளித்தாள் வாசுகி. அவளுக்கு ஏனோ எவருடனும் பேசக் கூட மனமில்லை. ஒரே எரிச்சலாக இருந்தது.

"அப்பா இப்பதான் உதில கடைக்குப் போட்டார். இப்ப வந்திடுவர்" என்றவாறு எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

"நான் பிள்ளை உன்னைத்தான் வந்து பார்த்திட்டுப் போவமண்டு வந்தனான். நீ முந்தி மாதிரி இல்லை. உன்ர முகத்திலை இன்னும் பழைய களை திரும்பேல்ல. ஏன் பிள்ளை மருந்து மாத்திரைகள் ஒழுங்கா சாப்பிடுறதில்லையே?" என்ற கேள்வியோடு நிறுத்தினாள் மாமி.

"எனக்கிப்ப எல்லாம் சுகம் மாமி. ஆனா உங்கள மாதிரி ஆக்களின்ரை கதை பேச்சுத்தான் எனக்குத் திருப்பியும் குழப்பத்தைத் தரும் போலக் கிடக்குது" என்று முகத்திலடித்தாற் போல் கூறிவிட வேண்டும் போல் இருந்தது வாசுகிக்கு. ஆனால் சிரமப்பட்டுத் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"உங்க சில பேருக்கு இப்பிடி வருத்தம் வந்து, பேந்து சுகமாகி இருக்குது. ஆனா சிலருக்கு கனத்த நாளில கொஞ்சம் கூடுறதெண்டு சொல்லுறவை. அதால நீ கொஞ்சம் கவனமாத்தான் இருக்க வேணும்" மேலும் மாமியின் இந்த வார்த்தைகள் கோடாரியாய் மாறித்தன் பிடரியைப் பதம் பார்ப்பது போல் அவளுக்கு ஒரு உணர்வு. மீண்டும் அதே கேள்வி விஷ்வரூபமாய் மனதில்...

"நான் இன்னும் பழைய நிலைக்கு மாறவில்லையா? இருந்தாலும்...." தனக்குள்ளேயே அதை விழுங்கிக் கொண்டு பேசினாள்.

"எனக்கு இப்ப எல்லாம் சுகம் மாமி. இப்ப வேலைக்கும் போகத் தொடங்கி விட்டன்" என்று தற்போதைய நிலையை வாசுகி விளக்க முற்பட்டாள்.

"நீ மூன்று நாளா வேலைக்கு வரேல்லையாம். பத்மலிங்காற்றை பெட்டை உனக்குத் திருப்பி வருத்தம் இருக்குதோ, என்னவோ எண்டு தெரியாதெண்டு சொன்னவள்." மாமி விடுவதாக இல்லை. கதையை வேறு திசையில் திருப்புவதைத் தவிர அவளுக்கு வேறு வழியிருக்கவில்லை.

"எப்படி மாமி! பிள்ளைகள் எல்லாம் சுகமாய் இருக்கினமே எல்லாரையும் கேட்டதென்று சொல்லுங்கோ !"

"இப்பவும் பிள்ளை நீ இடைக்கிடை தொடர்பில்லாமல் கதைக்கப் பார்க்கிறாய். டாக்குத்தர் தந்த மருந்துகளைக் கவனமாய்ப் போடு. ஏதும் பேய், பிசாசுகளின்ரை ஏவல் விளையாட்டுக்களோந் தெரியாது. எதுக்கும் ஒருக்கா வெள்ளிக்கிழமை புளியடிப் பூசாரிட்டைப் போய் ஒரு நூலைக் கட்டு, எல்லாம் சரி வரும்" மாமி கூற அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஒரு கணம் தான் மூளை குழம்பியிருப்பதாகப் பாவனை செய்து ஏதாவது பொருட்களை மாமி மீது விட்டெறிவோமா என அவளுக்குப் பட்டது. இருந்தும் அவ்வாறு செய்வது தன்னைப்பற்றி இருக்கும் எண்ணத்திற்கு மேலும் வலுச்சேர்ப்பதற்கு இருக்கும் எனக்கருதி அதைத் தவிர்த்துக் கொண்டாள்.

"கொப்பரை இன்னும் காணேல்ல. சரி பிள்ளை நான் போட்டு வாறன். நான் வந்து போனதாச் சொல்லு" என்று கூறிக் கொண்டு எழுந்தாள் மாமி. வாசுகி வாசல் வரை சென்று வழியனுப்பினாள்.

வீட்டினுள் வரும் போது அவளது மனம் மட்டுமன்றி உடலும் சோர்ந்திருந்தது. அயர்ச்சியுடன் போய்க் கட்டிலில் வீழ்ந்தாள். உத்தரவின்றியே கண்களிலிருந்து நீர் வழிந்தது. வாசுகி படித்த பண்புள்ள பெண் ஒரு அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறாள். யுத்தத்தின் கொடுமைக்கு அவர்களது குடும்பமும் அகப்பட்டிருந்தது. தாய், தந்தை இரண்டு சகோதரர்கள் என்ற ஒரு அடக்கமான உறவுப்பிணைப்பு அவளைச் சூழ்ந்திருந்தது என்பது உண்மைதான். கால வெள்ளத்தில் அவை அடிபட்டுச் சென்ற போது அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஷெல் வீச்சுக்குப் பலியான அண்ணன், பொருள் தேடவென்று வெளிநாடு சென்று பொருளற்றுப் போன தம்பி; இதையெல்லாம் கண்டு மனம் கலங்கி முடிவில் நோயாளியாகி மரணித்த தாய். எல்லோரையும் ஒரு கணம் நினைத்துப் பார்க்கிறாள். 'ஓ...! கொடுமை!' நான் சபிக்கப்பட்டவளா? அவளது உடல் குலுங்கியது.

இவையெல்லாம் கடந்த இரண்டு வருட காலங்களுக்குள் நடந்தவை. இதனால் அவளுக்கு ஏற்பட்ட மெல்லிய மன அழுத்தம், அவளது நடத்தையில் ஒருவித அசாதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது. வேலையில் தன் புலனை முழுமையாகச் செலுத்த முடியாமல் போனது; யாரையும் பார்க்கப், பேசப் பிடிக்கவில்லை. இந்த நிலை சில காலம் நீடித்து இருந்தது என்னவோ உண்மைதான். இந்தக் காலப் பகுதியில் வேலைக்குச் செல்வதைக்கூட இடைநிறுத்தி இருந்தாள். ஆனாலும் ஆற்றுப்படுத்துனர் வழங்கிய உதவியும், தந்தையின் பாச அரவணைப்பும் அவளைப் பழைய நிலைக்கு கொண்டு வந்திருந்தது. கடந்த பதினைந்து நாட்களாக வேலைக்குப் போகத் தொடங்கி விட்டாள். அப்போது தான் புதிய பிரச்சனை தலை தூக்கியது. பழைய வாசுகியாய் அவளைப் பலராலும் பார்க்க முடியவில்லை. அனுதாபங்களும், அருவருப்புக்களும். கேள்விகளும். கேலிகளும் அவளைப் புண்படுத்தத் தொடங்கின. அவளுக்கு இப்போது இந்தச் சமூகத்தின் மீது வெறுப்பேற்பட்டது."ஏன் என்னை எவரும் புரிந்து கொள்கிறார்கள் இல்லை? அவளால் கேள்விக் கோட்டை கிழிக்க முடிந்ததே தவிர, அதைத் தாண்டி உண்மையைத் தேட முடியவில்லை. இவற்றையெல்லாம் சிந்திக்க அவளுக்கு என்னவோ மாதிரி இருந்தது. அவளது உடல் வியர்த்தது.

"நான் ஏன் அஞ்ச வேண்டும்" என்ற எண்ணம் மனதில் எழுந்தது. சமூகம்தான் குழம்பியிருப்பதாக அவளுக்குப்பட்டது. வாழ்க்கை என்பது இன்பத்தின் இணைய முகவரி மட்டுமன்றி முரண்பாடுகளின் அறுவடையும் கூடத்தான் என்ற சிந்தனை துளிர்விட "நான் வாழ்ந்து காட்டத்தான் வேண்டும்" என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டது. அவள் இனியும் வீட்டில் முடங்கியிருக்கப் போவதில்லை. ஏனையோரின் விகற்பமான பார்வைகளுக்குப் பயந்து அவள் வாழப் போவதுமில்லை. அவளொரு தீர்மானத்துக்கு வந்தவளாய்ப் படுக்கையை விட்டெழுந்து வெளியே வந்தாள். அப்போது தந்தை உள்ளே வருகிறார்.

"பிள்ளை நீ இப்படி அடைஞ்சு கிடக்கிறது உனக்கு நல்லதில்ல. எங்கடை சனம் ஆயிரம் சொல்லும் அதைப் பொருட்படுத்தாதே. நீ சந்தோசமாய் இருக்கிறாய் என்ற சிந்தனை உனக்குள் மட்டும் இருந்தால் போதும், நாங்கள் வாழ்ந்து விட்டுப் போகலாம்." என்று கூறிய தந்தையின் முகத்தை ஒருவித தெளிவோடு நோக்கியவள்,

"ஓமப்பா! நானும் அப்படித்தான் இப்ப யோசிக்கிறன். நான் ஒருக்கா கோவிலடிக்கு போட்டு வருவமெண்டு பார்க்கிறன். அது எனக்கு ஆறுதலாய் இருக்கும் என்று கூறியவாறே புறப்பட ஆயத்தமானாள்.

சில நிமிடங்கள் அவள் வாசலைத் தாண்டும் போது வானத்திலே கருமேகங்கள் திரண்டு மெலிதாய் மழை தூறத் தொடங்கியிருந்தது. முற்றத்திலே பூ மரங்களில் படிந்திருந்த புழுதி கழுவுப்பட தொடங்கியிருந்தது.

நான் உளவியல் சஞ்சிகை - ஆடி - ஆவணி 2001



ஈழத்தின் எதிர்கால இலக்கிய நம்பிக்கைகளின் ஒருவராக கனகலிங்கம் தர்மசேகரம் என்ற துன்னாலை சேகர் விளங்குகிறார். சேகர் "தூரப் போன வசந்தங்கள்" என்ற தினகரன் சிறுகதையுடன் 1997 இல் இலக்கிய உலகிற்குள் பிரவேசித்தார். சிறுகதை, கவிதை, கட்டுரை ஆக்கம் எனப் பல்துறைப் படைப்புக்களிலும், விவாத மேடைப் பங்காளர், மிருதங்க வித்தகர் எனப் பல புறத்துறைகளிலும் தன் பங்களிப்பினைச் செய்து வருகிறார். இப் பன்முகமான கலை இலக்கியங்களைத் தான் உணர்ந்தவாறு நேர்த்தியாகப் படைக்கின்ற திறன் சேகருக்கு உள்ளது. அவர் கண்டவற்றினைப் படைக்க வில்லை. அறிந்து உணர்ந்தவற்றைக் கலைத்துவப் படைப்பாக்குகிறார் என எண்ணுகிறேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உளவியல் சிறப்புக்கலை இறுதியாண்டு மாணவனாக விளங்கும் இந்த இளம் படைப்பாளியின் இதய அரங்கத்தில் சமூக மாந்தரும் அவர்கள் உருவாக்கிய சம்பவ நெருடல்களும் இவ்வாறான தூரம் உணர்வுக் கொதிப்புக்களை ஏற்படுத்திருக்கின்றன என்பதை "கொட்டுக் கடப்பு" என்ற இத் தொகுதியில் உள்ள சிறுகதைகள் புலப்படுத்துகின்றன. அவர் பெற்ற பரிசில்கள் வழங்கிய சமூக அங்கீகாரத்திற்கு மேலாக இச் சிறுகதைத் தொகுதி சேகருக்கு இலக்கிய அங்கீகாரத்தை வழங்கும்.

செங்கை ஆழியான்
(கலாநிதி க.குணராசா)

ISBN 955-8715-16-6

Rs. 200/=